பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 19 ஞாயிற்றுக்கிழமை (01.02.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:067

# புதுக்குடியிருப்பை அண்டிய கிராமங்களில் நேற்று மட்டும் 50 பொதுமக்கள் பலி!

## பலதடவைகள் ஷெல், விமானத் தாக்குதல்கள்

கொழும்பு, பெப்ரவரி 01

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் ஆறு கிராமங்கள் மீது நேற்று நடத்தப்பட்ட அகோர ஷெல் தாக்குதல்கள் மற்றும் விமானத்தாக்குதல்களினால் அப்பாவி மக்கள் 50 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 12 பேர் சிறுவர்கள். 169 பேர் காயமுற்றனர்.

புதுக்குடியிருப்பு மற்றும் சுதந்திரபுரம், உடையார் கட்டு, தேவிபுரம், தேராவில், மூங்கிலாறு, வலைஞர் மடம் ஆகிய கிராமங்கள் மீது பல தடவைகள் ஆங்காங்கே நடந்த தாக்குதல்களால் மக்கள் நாலா பக்கமும் அந்தரித்துச் செய்வதறியாது சிதறி ஓடியதில் மொத்தம் 169 பேர் காயமுற்றனர்.

சுதந்திரபுரத்தில் இருந்து திரட்டப் பட்டதாக இணையத்தளம் ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்கு உட்பட்ட கிராமங்களில் மக்கள் பாதுகாப்பு வலயங்களும் அடங்கும்.

சுதந்திரபுரத்தில் இரண்டு தடவை கள் நடைபெற்ற தாக்குதல்களில் முறையே 7 பேரும், 22 பேரும்-

உடையார்கட்டில் -06 பேரும் -

தேவிபுரத்தில் - ஒருவரும் -

தேராவிலில் -04 பேரும் -

மூங்கிலாறில் -03பேரும்-

வலைஞர் மடத்தில் - 04 பேரும் கொலையுண்டதாக அறிவிக்கப்படுகிறது.

மேற்படி கிராமங்களில் நேற்று மொத்தமாக 169 பேர் காயமுற்றனர்.

சுதந்திரபுரம் ''மக்கள் பாதுகாப்பு வலயத்திற்குள் இடம்பெயர்ந்து திரளாகத் தங்கியிருந்த பொதுமக்கள் மீது நேற்று சனிக்கிழமை காலை 9.30 (20 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா வேதனை தெரிவிப்பு

நியூயோர்க், பெப்.1

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்தம் பெரும் வேதனையளிப்பதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து அமெரிக்கா பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் விரைவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தக் கூடிய ஓர் சூழ்நிலை வெகுவிரைவில் உருவாகும் எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பதில் ஊடகப் பேச்சாளர் ரொபாட் வூட் தெரிவித்துள்ளார். (அ-சி)

## உடையார் கட்டில் வியாழனன்று நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தோர், காயமடைந்தோர் விவரம்

கொழும்பு, பெப்.1

முல்லைத்தீவு, உடையார்கட்டுப் பகுதியில் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலில் கொல்லப்பட்டோர் மற்றும் காயமடைந்தோர் விவரம் பெற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தகவல்களை இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதலில் நால்வர் படுகொலை செய்யப்பட்டனர்.அவர்களின் விவரம் வருமாறு:

மனோறஞ்சிதமலர் - கல்லூரி ஆசிரியை, செ.புஸ்பராஜா (வயது 23), இ.சிவதயாளினி (20 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வெளியேற அனுமதிக்க அரசு விதித்த காலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிவுற்றது

கொழும்பு,பெப்.1

வன்னியில் இருந்து விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிக்கி யுள்ள - மக்கள் வெளியேறுவதற்கு அவர் களைப் புலிகள் அனுமதிப்பதற்கு அரசாங்கம் வியாழக்கிழமை விதித்த 48 மணி நேரக் காலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தது.

இந்தக் காலப்பகுதியில் மொத்தம் 106 (20 ஆம் பக்கம் பார்க்க)

## [இல]ங்கைக்கு ஆயுதங்கள் அனுப்பப் பயன்படுத்தப்படும் [த]ஞ்சை விமானப் படைத் தளத்தை [மு]ற்றுகையிட முயன்றவர்கள் கைது!

சென்னை, பெப்.01

[த]ஞ்சை விமானப்படைத்தளத்தை முற்றுகையிடச் சென்ற 25 பேர் பொலி சாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தஞ்சை விமானத்தளத்தில் இருந்து [இலங்]கைக்கு ஆயுதங்கள் அனுப்பப்படு[வதைத்] தெரிவித்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் அந்த விமா னத்தளத்தை முற்றுகையிட ஊர்வலமாகச் சென்றனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக தமிழ்த் தேசப் பொதுவுடமைக்கட்சி, தமிழ்த் தேச விடுதலை இயக்கம், பெரியார் திராவிடர் கழகம், ஆதி தமிழர் பேரவை, (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழருக்காக தமிழகத்தில் மற்றொருவரும் தீக்குளித்ததாகப் பரபரப்பு: பொலிஸ் மறுப்பு

சென்னை,பெப்.1

ஈழத்தமிழர்கள் மீதான படுகொலையை கண்டித்து திண்டுக்கல் மாவட்டம் பள்ளப் பட்டியைச் சேர்ந்த மற்றுமொருவர் நேற்றுத் தீக்குளித்ததாகப் பரபரப்பான தகவல் வெளியாகியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பள்ளப்பட்டியைச் சேர்ந்த ரவி (46) என்பவர் பலத்த தீ காயத்துடன் மதுரை அரசினர் ராஜாஜி மருத்துவமனையில்(20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சுதந்திர தினத்தன்று தமிழகத்தில் பொது வேலை நிறுத்தம்

சென்னை,பெப்.1

இலங்கையில் போர் நிறுத்தம் அறிவிக்க வேண்டும் என்று கோரி எதிர்வரும் புதன்கிழமையன்று - இலங்கை சுதந்திர தினத்தன்று - தமிழகத்தில் பொது வேலை நிறுத்தத்துக்கு தமிழர் பாதுகாப்பு இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

(20. ஆம் பக்கம் பார்க்க)

## [சுவி]ஸ் தமிழ் இளைஞர்கள் [ஐ.]நா.சபை முன்னால் நடத்திய உண்ணாவிரதம் [அதி]காரிகளின் வாக்குறுதியை அடுத்து இடை நிறுத்தம்

ஜெனிவா, பெப்.1

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. சபை முன்[பா]க சுவிஸ் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்ட [உண்]ணாவிரதப் போராட்டம் ஐ.நா. அதி[காரி]களின் வாக்குறுதியையடுத்து இடை[நிறு]த்தப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசு - விடுதலைப் புலிகளுக்கு இடையே உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும்-

வன்னியில் உள்ள தமிழ் மக்களுக்கு மருந்து, உணவுப் பொருள்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும்- (20 ஆம் பக்கம் பார்க்க)

## போரை உடன் நிறுத்தக் கோரி ஐரோப்பிய நாடுகளில் நேற்று ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப்.1

இலங்கையின் வடபகுதியில் - வன்னியில் - இடம்பெற்றுவரும் போரை உடனடியாக நிறுத்துமாறு கோரி நேற்று பிரிட்டன், கனடா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

(20 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய சேவைப் பொருள்களுக்கான கப்பல் கட்டணம் குறைப்பு;சிமெந்தின் விலை ரூ.1600

யாழ்ப்பாணம், பெப்.1

குடாநாட்டுக்கு அத்தியாவசிய சேவை ஆணையாளரினால் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்ற பொருள்களுக்கான கப்பல் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இக்கட்டணக் குறைப்புக்கு அமைய சிமெந்தின் விலை 1600 ரூபாவாக விலை நிர்ணயம்செய்யப்பட்டுள்ளது என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டுக்கு தொடர்ந்து சிமெந்து கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் - சிமெந்தின் சில்லறை விலைகளை மேலும் குறைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வரு வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிமெந்து விலை சம்பந்தமாக முறைப்பாடுகள் இருப்பின் மாவட்டச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (1-9)

# யாழ். வைத்தியசாலையில் வைத்து நோயாளியின் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ். வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச்சென்ற வயோதிப மாது ஒருவரிடம் வைத்தியசாலைப் பணியாளர் போன்று பாசாங்கு செய்த ஒருவர் நகை மற்றும் பொருள்களை அபகரித்துக்கொண்டு மாயமானார்.

இச்சம்பவம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது. வட்டுக்கோட்டை, சங்கரத்தையைச் சேர்ந்த நாகமுத்து சின்னத்தங்கச்சி (வயது 69) என்ற மூதாட்டியே இவ்வாறு நகை மற்றும் பொருள்களை இழந்தவராவார்.

பழைய வெளிநோயாளர் பிரிவுப் பகுதியில் நின்றிருந்த குறிப்பிட்ட மூதாட்டியிடம் வைத்தியசாலைப் பணியாளர் என்று கூறி அறிமுகமான மேற்படி ஆசாமி, தந்திரமாகப் பேசி மூதாட்டி அணிந்திருந்த நகை மற்றும் வைத்திருந்த பொருள்களை தன்னிடம் வேண்டிக் கொண்டார். பின்னர் ஈ.சி.ஜி. பரிசோதனைக்காக தனக்குப் பின்னால் வருமாறு கூறிக்கொண்டே அந்த ஆசாமி வேகமாகச் சென்று மறைந்தார்.

தனக்கு உதவிக்கு வந்த நபரைத் தேடி அலைந்த மூதாட்டி பின்னரே தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்துகொண்டார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-02-25)


இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா

**அழைப்பு**

காலம்: இன்று (01.02.2009)ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 6.00 மணி
இடம்: ஆலய முன்றில்

**இன்று நடைபெறும் இம் மலர் வெளியீட்டு விழாவில் மலர்சிறக்க அனுசரணை வழங்கிய வர்த்தகப் பெருமக்கள், நலன்விரும்பிகள், விநாயப் பொருமான் அடியவர்கள் யாவரும் கலந்து கொண்டு, விழா சிறக்க அன்புடன் அழைக்கின்றோம்.**

இங்ஙனம்
(தி.நெ.த.ம. கழகம்).


# மரண அறிவித்தல்கள்

## செல்வி சோமசுந்தரம் ஜெயறஞ்சினி (றஞ்சி)

நந்தாவில், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஜெயறஞ்சினி (றஞ்சி) நேற்று (31.01.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் சோமறஞ்சன் (லண்டன்), சோமரவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
கோபாலகிருஷ்ணன் (கோபு)
நாதன்.

## திருமதி முருகேஸ் வனிதா



யாழ்ப்பாணம்,திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேஸ் வனிதா நேற்று(31.01.2009)சனிக்கிழமை வவுனியாவில் அகாலமரணமானார்.

அன்னார் முருகேஸின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன் -சுலோசனா தம்பதியரின் அன்பு மகளும் வதனி, கார்த்திகா (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), கீர்த்திகா,பிரியங்கா (யாழ். இந்து மகளிர் கல்லூரி)ஆகியோரின் அன்புச் சகோதரியும் மிதுஷாளினி, டிதுர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயும் பகீரதனின் அன்பு மைத்துனியும் மிதுஷிகனின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

10/6, வளாக வீதி, திருநெல்வேலியில் உள்ள தந்தையின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டாரிக்குளம்,
வவுனியா.

தகவல்:
பாலச்சந்திரன் (தந்தை - சந்திரன் - ஆசாரி)
சந்திரவதனி மரக்காலை
தொ.பே.: 0776173582

# ஆலயக் கும்பாபிஷேகங்கள்

யாழ்ப்பாணம், பெப்.1

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்ரா மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7.26 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம்பெற்று 8.15 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு கும்பாபிஷேக மலர் வெளியீடு இடம் பெறும்.

(சிறப்பிதழ் 09 பக்கத்தில்)

* * *

யாழ்ப்பாணம், பெப்.1

நயினாதீவு, இரட்டங்கால் முருகப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.20 மணி முதல் 8.59 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பாகி 7.45 மணிக்கு தூபி அபிஷேகம் இடம் பெற்று 8.30 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து 15 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

(சிறப்பு மலர்17 பக்கத்தில்)

# அங்குரார்ப்பண நிகழ்வு

வண்ணை, பெப்.1

புலம்பெயர்ந்து ஒஸ்லோ - பேர்கன் நகரில் வாழும் குருநகர் அபிமானிகளின் நிதியுதவியால் இயங்கும் குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையத்தின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று சனிக்கிழமை புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு கி.சிலுவைதாசன் (ஜே.பி.) தலைமையில் நடைபெற்றது. (1)

# வறிய மாணவர்களுக்கான கல்வித் திட்டப் பதிவுகள்

யாழ்ப்பாணம், பெப்.1

குடாநாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான வேலைத் திட்டம் குறித்த பதிவுகள் இன்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

பதிவு செய்ய வருபவர்கள், மாணவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளையும் கொண்டு வரவேண்டும். உதவி பெறும் மாணவர்கள் கட்டாயமாக சமுகம் தர வேண்டும் என்று அமைச்சு கேட்டுள்ளது. (1)


**90ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா -2009 அரியாலை வடமாகாணரீதியிலான கற்றும் போட்டிகள்**

- துடுப்பாட்டம் - 6பேர் 5ஓவர்.
- கரப்பந்தாட்டம் (ஓவர்கேம் முறையிலானது) 5பேர்
- விண்ணப்பக் கட்டணம் - 250ரூபா
- விண்ணப்ப முடிவு திகதி - 10.02.2009
- விண்ணப்பம் பெற்று ஒப்படைக்க வேண்டிய இடங்கள்

1. ந.சுரேன்
15/8, மலர்மகள் வீதி,
அரியாலை.
2. K.நாகேந்திரம்
423, நாவலர் வீதி,
அரியாலை.
3. P.பஞ்சலிங்கம்
(விளையாட்டுக் குழுத்தலைவர்)

**காணி விற்பனைக்கு**

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 4 பக்கச் சுவர், பெரியகேற், குழாய்க்கிணறு என்பவற்றுடன் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவை இல்லை
இல.60, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 3898, 0776917030

**தவறிவிட்டது**

எனது சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் சில ஆவணங்களுடன் பேஸ் 27.01.2009 அன்று இருபாலைச் சந்திக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
கு.ஆனந்தகுமார்,
இல. 11,பிறவுன் வீதி,யாழ்ப்பாணம்.(நாவலர்வீதிக்கு அண்மையில்)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

40 நாள் வளர்ச்சியடைந்த
PIRIMA சிவப்பு பேட்டுக்
குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
BAHIRA புறொயிலர்
குஞ்சுகள் 02.02.2009
விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
★ ராஜீவ் - நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.


# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதம் கந்தசாமி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் கந்தசாமி 27.01.2009 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் வேலாயுதம் - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் நமசிவாயம் - செல்லமுத்து தம்பதியினரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வசந்தா (கனடா), குமுதா (கனடா), ராதா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசிதம்பரம் (கனடா), நடராஜா (கனடா), முரளியோகன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும் சதீஸ்குமார், சுஜிக்காந், சுரேஸ்காந், அருண்குட்டி, சாளினி, சுஜீவன், அனோஜன், வினோஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்தியா
T.P. 00914425503433

தகவல்:
பரமேஸ்வரி
(மனைவி - அனலைதீவு - இந்தியா).

## ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்

(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச.)

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (31.01.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருணாசலம் - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் இரத்தினம் - நன்னிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருகமனும் சிவனாச்சியாரின் கணவரும் தவப்பொன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (அமரர்), தவராணி (டென்மார்க்), தவச்செல்வி (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), நடேஸ்வரன் (எழுதுநர், யாழ்.மாவட்ட நீதி மன்றம்), ஆறுமுகசாமி ஆகியோரின் அன்புத் தந்தையும் மாரிமுத்து, நவரஞ்சன் ஆகியோரின் மாமனும் கார்த்திகாவின் பேரனும் ஆசையாத்தை, முருகையா, கணேசகுரு, இராசாத்தியம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (31.01.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் சுழிபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தசாமி தனபாலசிங்கம்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தனபாலசிங்கம் 29.01.2009 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் குமாரதாசன் (ஜேர்மனி), சண்முகதாசன், தயாழினி (டென்மார்க்), சுதர்சினி (ஜேர்மனி), சசிகரன், தனவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மசுதா (ஜேர்மனி), நிர்மலாதேவி, மனோகரன் (டென்மார்க்), பிரபாகரன் (ஜேர்மனி), சியாமிளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
சண்முகதாசன் (தேன்குட்டி)
(மகன்).

## செல்லையா தர்மராஜா



யாழ். திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமான செல்லையா தர்மராஜா 30.01.2009 வெள்ளிக்கிழமை சென்னையில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கமுத்துவின் சிரேஷ்ட புதல்வனும் இரத்தினமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் (செட்டி), காலஞ்சென்ற தனபாக்கியம் மற்றும் இராமலிங்கம் (கனடா), செல்வசோதி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறேம மாலா, முத்தமிழ்ச்செல்வன் (கொலண்ட்), காந்திமதி, சசிகலா (கனடா), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பகீரதன், குமுதா, நகுலேஸ்வரன் (கொலண்ட்), திவ் விய குமாரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் சதுர் சனா, கவின்சன், தினா, நிலக்சனா, ஹரினா, ஹரிஸ்ணா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.01.2009) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 5 மணிக்கு பொழிச்சலூர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்தியா.
0091 9840269247

(82331)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி அவலம்!

இலங்கையின் நசாப்த் கால யுத்தத்தின் மைய பூமியாக மாறியுள்ள முல்லைத்தீவில் சிக்கியுள்ள மக்களின் நரக அவலம் எவ்வாறு இருக்கின்றது என்பதை சர்வதேச சமூகத்துக்கு ஐ.நா சபையும், செஞ்சிலுவை சர்வதேச குழுவும், முல்லைத்தீவு மருத்துவமனை அதி காரிகளும் வெளியிட்ட தகவல்கள் சிறிது தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளன.



அரசாங்கத்தால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதியில் தாங்கள் தஞ்சம் புகுந்து இருந்ததாகவும், தற்காலிக கட்டடம் ஒன்றை அமைந்திருந்த தாகவும் தெரிவிக்கும் ஐ.நா அதிகாரிகள் தங்களுடன் இடம்பெயர்ந்த மக்களும் தங்கியிருந்தனர் என்று குறிப்பிடுகின்றனர்.

''அவ்வேளை முதலாவது ஷெல் சனிக்கிழமை வந்து விழுந்தது. மற்றைய ஷெல் ஞாயிற்றுக்கிழமை விழுந்தது. இதன் காரணமாக ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். 20 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்'' என கொழும்பில் உள்ள ஐ. நா அதிகாரிகள் தமது நியூயோர்க் தலைமையகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்தள்ளனர். ''எங்களைச் சுற்றியுள்ள அனைத்தும் சேதமாக்கப்பட்டன. பாரிய அழிவு ஏற்பட்டது. ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் பாதுகாப்பாக இருக்கலாம் என நம்பி வந்த மக்கள் அனைவரும் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர்'' - எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''வன்னியில் பாரிய நெருக்கடி உள்ளது. எமது பணியாளர்கள் பாதுகாப்பு வலயங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்றாலும் அங்கும் ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன''- என்கிறார் ஐ.நா. சபையின் கொழும்புப் பேச்சாளர் கோடன் வெய்ஸ். பொதுமக்கள் இறந்ததையும் காயமடைந்ததையும் தனது பணியாளர்கள் கண்ணால் பார்த்தனர் என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

300 பேர் வரை கொல்லப்பட்டனர் என்று பிராந்திய சுகாதார இயக்குனர் தெரிவித்தார் என வெளியான செய்திகள் குறிந்து அறிந்ததாக அவர் மேலும் தெரிவிக்கின்றார். கடந்த இரண்டு வாரங்களில் 200இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்கிறது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு. தனது பணியாளர்களால் எண்ணப்பட்ட உடல்களை அடிப்படையாக வைத்தே இந்த எண்ணிக்கை என்றும் அது குறிப்பிடுகின்றது.

''மோதலின் நடுவில் மக்கள் சிக்கியுள்ளனர்.

ஏ. ஆர்



மருத்துவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அம்புலன்ஸுகளும் தாக்கப்பட்டுள்ளன. காயமடைந்த மக்களை மீட்கச் சென்ற பணியாளர்களும் காயமடைந்துள்ளனர்'' என்கிறார் செஞ்சிலுவையின் தென்னாசிய நடவடிக்கைகளுக்கான அதிகாரி ஜக்கீயூஸ். டீ. மையோ.மோதல்கள் தணியும்போது எண்ணிக்கை தெரியாதவர்கள் கொல்லப்பட்டுள்ளதையும் பாரிய மனித அவலம் ஏற்பட்டுள்ளதையும் உணர வேண்டி வரும் என அவர் எச்சரிக்கின்றார்.



மோதல் நடைப்பெறும் பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ளதாலும் இராணுவத்தின் தந்திரோபாயங்களை கேள்விக்கு உட்படுத்தும் ஊடகவியலாளர்கள் கொல்லப் படுவதாலும் விடுதலைப் புலிகளுடனான யுத்தமும் வன்னி அவலமும் மறைக்கப் பட்டுள்ளன.

முல்லைத்தீவில் இருந்து வடமேற்காக செல்லும் ஏ-35 வீதியில் அநேகமான மக்கள் சிக்கியுள்ளனர். அவர்களிடம் மிகச்சிறிய உடைமைகளே உள்ளன என்கிறார் ஐ.நா அதிகாரி. இந்தப் பகுதியே அரசாங்கத்தால் கடந்த வாரம் பாதுகாப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சார்பு இணையத் தளம் என வர்ணிக்கப்படும் தமிழ் நெட், வீதிகளில் கொல்லப்பட்டவர்களின் உடல்களும் காயமடைந்தவர்களும் காணப்படுவதாக தெரிவிக்கின்றது.

இந்த மக்கள் யுத்தம் ஆரம்பித்த பின்னர் பல தடவைகள் மாறி மாறி இடம் பெயர்ந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் அரசாங்க சுகாதார அதிகாரி டாக்டர் டி.சத்தியமூர்த்தி. முதலில் அவர் கிளிநொச்சி மருத்துவமனையின் தலைமை அதிகாரியாக பணியாற்றினார். அந்த நகரம் இராணுவத்தின் கைகளில் வீழ்வதற்கு முன்னர் அவர் தனது மருத்துவமனை மக்களுடன் தர்மபுரத்துக்கு இடம்பெயர்ந்தார். அங்கு தற்காலிக மருத்துவமனையை அமைத்து மூன்று மாதம் செயற்பட்டார். மோதல்கள் தீவிரமடைய அங்கிருந்து உடையார் கட்டுப்பகுதிக்கு மீண்டும் இடம்பெயர்ந்தார். அங்கு மருத்துவ மனையை ஒரு பாடசாலை வளாகத்தில் ஏற்படுத்தினார்.

''கடந்த ஞாயிற்றுக்கிழமை 1000 இற்கு மேற்பட்டவர்கள் இருந்தவேளை அந்த மருத்துவமனை மீது ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. பலர் கொல்லப்பட்டனர். திங்கட்கிழமை மீண்டும் ஷெல் தாக்குதல். சுமார் 35 இற்கு மேற்பட்ட உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டன. பலர் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தனர். சத்திர சிகிச்சை நிபுணர் என எவரும் இல்லை'' என்கிறார் சத்தியமூர்த்தி.

100 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்; பலர் இறக்கக் கூடும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

கடந்த வாரம் முழுவதும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. உடையார்கட்டு மருத்துவமனைப் பணியாளர்கள் பதுங் குழிகளுக்குள் பல மணிநேரம் இருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

வெளியில் வந்து பார்த்தபோது பலர் துடி துடித்து இறந்து இருந்ததை அவர்கள் கண்டனர்.

இறந்தவர்களை அடையாளம் காணவோ, அடக்கம் செய்யவோ எவரும் இல்லாத பரிதாப நிலை. வன்னியில் ஷெல் வீச்சுகளால் மக்களுக்கிடையில் தொடர்புகள் துண்டிக் கப்பட்டுள்ளன. ஷெல் சற்று தணித்த பின்னரே பலர் தங்களது உறவுகளை தேடுகின்றனர். கொல்லப்பட்ட மக்கள் பலரின் சடலங்கள் அடையாளம் காணப் படாமல் பரிதாபமாகப் புதைக்கப்படுகின்றன.

---

# எல்லாத் தேசங்களுக்கும் மனிதர்களுக்கும் அமெரிக்கா நண்பனாகவே இருக்கும்

**அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டதின் பின்னர் பராக் ஒபாமா ஜனவரி 20 ஆம் திகதி வாஷிங்டனில் வைத்து நிகழ்த்திய உரையின் சில முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

''பொறுப்புடன் ஈராக் மக்களிடமே அந்நாட்டைக் கொடுத்துவிட்டு நாம் வெளியேறத் தொடங்குவோம். ஆப்கானிஸ்தானில் கஷ்டப்பட்டு தோற்றுவித்த அமைதியை நிலைநாட்டுவோம். பழைய நண்பர்கள், எதிரிகளோடு அணு ஆயுத அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக ஓய்வின்றி உழைப்போம். பூமிவெப்பமடைவதை நிறுத்த முயல்வோம்.



நான் இங்கே பணிவோடு உங்கள் முன் நிற்கின்றேன். எங்கள் முன் இருக்கின்ற பணிகளினால் நான் பணிவுடையவனாக்கப்பட்டு, என்மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையினால் நன்றியுடையவனாக்கப்பட்டு எமது முன்னோர்கள் செய்துள்ள தியாகங்களை மனதில் இருத்தியவனாக உங்கள் முன் காட்சி தருகின்றேன்.

அதிபர் புஷ் நமது நாட்டுக்குச் செய்துள்ள சேவைகளுக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அத்துடன் இப்போது இடம்பெற்ற இந்த மாற்றத்தில் காலம் முழுவதும் அவர் காட்டிய பெரும் தன்மைக்கும், ஒத்துழைப்புக்கும் என் நன்றி உரித்தாகும்.

இதுவரை 44 அமெரிக்கர்கள் அதிபர் பதவிக்கான சத்தியப்பிரமாணத்தை எடுத்துக் கொண்டுள்ளார்கள். நாட்டின் செழுமையான கால எழுச்சிகளின்போதும், அமைதியான கால ஓட்டத்தின்போதும் இந்த வார்த்தைகள் பேசப்பட்டுள்ளன. இருந்தும் இந்த சத்தியப் பிரமாணம் ஆனது பெரும்பாலும் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கும்போதும் கொந்தளிப்புகள் எகிறி நிற்கும் காலங்களிலும் செய்து கொள்ளப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

இந்தக் காலங்களில் எல்லாம் அமெரிக்கா சமாளித்து முன்னேறியிருக்கின்றது. இதற்கு உயர் பதவியில் இருந்தவர்களின் திறமை மற்றும் தொலைப்பார்வை மட்டும் காரணம் அன்று, மக்களாகிய நாம் எமது முன்னோடிகளின் இலட்சியங்களின் விசுவாசமுள்ளவர்களாகவும் எமது நிறுவன ஆவணங்களுக்கு உண்மையானவர்களாகவும் இருந்துள்ளோம் என்பதே.

அவ்வாறுதான் அது இருந்துள்ளது. இனிவரும் அமெரிக்கத் தலைமுறையினரோடும் அது அவ்வாறே இருக்கும்.

**வன்முறையுடன் போரில் ஈடுபட்டு இருக்கின்றோம்**

நாம் தற்போது ஒரு நெருக்கடியின் மத்தியில் இருக்கிறோம் என்பது நன்றாக விளங்கிக்கொள்ளப்பட்டதொரு விடயமாகும்.

## சந்தர்ப்பத்துக்காக எமது இலட்சீயங்களை மாற்றிக்கொள்ள மாட்டோம்

எமது தேசம் வன்முறை மற்றும் வெறுப்பின் ஆழமிக்கதொரு வலைப்பின்னலுடன் போரில் ஈடுபட்டு இருக்கின்றது. எமது பொருளாதாரம் பலவீனமுற்றுள்ளது. இது சிலரின் பேராசையினாலும் பொறுப்பின்மையினாலும் ஏற்பட்ட விளைவு. அது மட்டுமன்றி கடினமான தீர்வுகளை எடுப்பதிலும் புதிய சகாப்தத்திற்கு ஏற்றதாக தேசத்தைக் தயார் செய்ய நாம் ஒருமித்துச் செயற்படுவதிலும் தவறிவிட்டதே காரணம்.

வீடுகளை இழந்து விட்டோம், பதவிகள் கைவிடப்பட்டுவிட்டன, தொழில்கள் சிதறடிக்கப்பட்டு விட்டன. எமது உடல் நலத்துறை செலவு கூடியதாக இருக்கிறது. எமது பாடசாலைகளில் பலர் தோல்வியுற்று விடுகிறார்கள். எமது சக்தித் துறையைப் பயன்படுத்தும் முறையானது நாசங்களை அதிகரிப்பதை தினமும் காண்கின்றோம். இது எமது கிரகத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

**சவால்களை எதிர்கொள்வோம்**

இன்று நான் உங்களுக்குக் கூறுவதென்னவென்றால் எம்முன் உள்ள சவால்கள் யாவும் உண்மையானவையே. அவை பாரதூரமானவை - அதிகமானவை. அவைகளை இலகுவாக எதிர்கொள்ளவோ குறுகிய காலத்தில் முடித்துவிடவோ முடியாது. ஆனால் அறிந்து கொள்வாய் - அமெரிக்காவே! அவைகளை நாம் எதிர்கொள்வோம்.

**பராக் ஒபாமா வாக்குறுதி**

இன்றைய தினத்தில் இங்கே நாம் கூடியிருப்பது ஏன் என்றால் அச்சத்துக்கு மேலாக நாம் நம்பிக்கையைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். குழப்பங்கள், முரண்பாடுகளுக்கு எதிராக நாம் காரியாம்சத்தில் ஒற்றுமைப்பட்டு இருக்கின்றோம்.

சிறுகுறைபாடுகள், பொய் வாக்குறுதிகள், உழுத்துப்போன கோட்பாடுகள் போன்றவற்றுக்கும் ஒரு முடிவினை அறிவிப்பதற்காக இந்த நாளில் நாம் இங்கு கூடி நிற்கிறோம். இவை எமது அரசியல் வாழ்வின் கழுத்தை வெகு நீண்ட காலமாகவே நெருக்கிக் கொண்டு வந்துள்ளன.

நாம் ஒரு இனத் தேசமாக இருந்து வருகின்றோம். ஆனால் வேத வாக்கியத்தின் படி சிறுபிள்ளைத்தனமான விடயங்களை தூர எறிவதற்கான காலம் வந்துவிட்டது. எமது சகித்துப்போகும் தன்மையை மீள் உறுதி செய்து கொள்வதற்கு, எமது நல்ல வரலாற்றினை தெரிவுசெய்து கொள்வதற்குக் காலம் வந்துவிட்டது. எல்லோரும் சமமானவர்கள். எல்லோரும் அதன் திரமானவர்கள். எல்லோரும் தமது முழு அளவிலான மகிழ்ச்சியை முன்னெடுப்பதற்கு உரியவர்கள் என்ற அந்த உயரிய கருத்தை பெறுமதிமிக்க அந்தப் பரிசினை தலைமுறைக்குத் தலைமுறையாக வழங்கப்பட்டுள்ள, கடவுள் வழங்கிய அந்த வாக்குறுதியினை முன்னெடுத்துச் செல்வதற்கான காலம் வந்துவிட்டது.

எமது தேசத்தின் சிறப்பியல்பினை மீண்டும் உறுதிசெய்து கொள்ளும்போது அந்த சிறப்பியலானது எவராலும் கொடுக்கப்படுவதல்ல. அது உழைத்துச் சம்பாதிக்க வேண்டியது என்பதை நாம் உணருகின்றோம்.

**எமது பயணம் குறுக்கு வழியல்ல**

எமது பயணம் குறுக்கு வழிகளில் இல்லை. குறுகியதும் அல்ல. பலவீனமான இதயத்தை உடையவர்களுக்கானதுமல்ல. தொழில் மூலம் இன்பம் தேடுபவர்களுக்கானதல்ல. அல்லது செல்வத்தின் மூலம் புகழின் மூலம் மட்டும் இன்பம் காண்பதும் அல்ல. அது அபாயத்தை எதிர்கொள்பவர்களுக்கு பொருள்களை செய்பவர்களுக்கு, உருவாக்குபவர்களுக்கு உரியது.

எமக்காக அவர்கள் தமக்கிருந்த ஒரு சில பொருள்களை மட்டும் பொதியாக்கி எடுத்துக் கொண்டு புதிய வாழ்வைத்தேடி சமுத்திரங்களைக் கடந்து சென்றவர்கள். எமக்காக வியர்வைசிந்தி உழைத்தவர்கள். மேற்கிலே குடியமர்ந்துள்ளார்கள். சாட்டையடிகளைத் தாங்கிக் கொண்டவர்கள். கொன்கோர்ட், கெட்டிஸ் பேர்க், நோர்மண்டி மற்றும் கேசான் போன்ற இடங்களில் எமக்காகப் போராடி மாண்டார்கள். எமக்கு ஒரு நல்ல வாழ்வினை உருவாக்கித் தருவதற்காக அந்த ஆண்களும், பெண்களும் போராடினார்கள். தியாகங்களைச் செய்தார்கள். அதற்காக தமது கைகள் பச்சைப்புண்ணாகும் வரை உழைத்தார்கள். எமது தனிமனித ஆசைகளை விட பெரிதாக அமெரிக்காவைப் பார்த்தார்கள். பிறப்பின் மூலமான வித்தியாசங்கள், செல்வம் அல்லது பிரிவுகளுக்கு மேலாக அதனைப் பார்த்தார்கள்.

அந்தப் பயணத்தையே இன்று நாம் தொடர்கின்றோம். பூமியில் மிகப்பலமுள்ள, மிக செழிப்புள்ள தேசமாக நாம் விளங்குகின்றோம். நெருக்கடி தோன்றிய காலத்தில் இருந்தது போலவே சற்றும் குறைவில்லாத எமது மூளைகள் கண்டு பிடிக்கும் தன்மையில் குறைந்துவிடவில்லை. எமது சேவைகள் கடந்த வாரத்தில் இருந்ததை விட கடந்த மாதத்தில், கடந்த வருடத்தில் இருந்ததைவிட தரம் குறைந்துவிடவில்லை. எமது தகுதி குறைபாடு எதுவுமின்றி விளங்குகின்றது. கடந்து போகவிட்டுவிட்டு பார்த்துக்கொண்டிருக்கும் காலம் கடந்து விட்டது. குறுகிய நோக்கங்களைப் பாதுகாப்பது, மகிழ்ச்சியளிக்காத தீர்மானம் எடுப்பதைத் தள்ளிப் போடும் காலம் எல்லாம் கடந்துவிட்டன. இன்று தொடக்கம் எம்மை நாம் தயார் படுத்திக் கொள்வோம். தூசியைத் தட்டிக் கொண்டு மீண்டும் ஆரம்பிப்போம். அமெரிக்காவை மீளக் கட்டியெழுப்புவதை ஆரம்பிப்போம். எங்கே வேலை செய்தாலும் அங்கே செய்வதற்கு வேலை இருக்கின்றது. பொருளாதாரத்தின் நிலை வேலை செய்யத் தூண்டுகிறது. தைரியமாகவும் விரைவாகவும் நாம் பணியாற்றுவோம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை பரமேஸ்வரன்



கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பரமேஸ்வரன் 30.01.2009 வெள்ளிக்கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சுந்தரம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - புனிதம்மா தம்பதியரின் மருமகனும் ரேவதியின் அன்புக் க்ணவரும் இராஜவதி, இரத்தினவதி, கருணாவதி, முனீஸ்வரன், சுந்தரவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினதேவி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் நித்தியலட்சுமி, இராயேஸ்வரன், பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு மன்னாரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இரத்தினதேவி**
(சகோதரி).

*480/1, கனகசபை அவெனியூ,*
*யாழ்ப்பாணம்.* *(82318)*

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 ✱ 02 ✱ 1943



உதிர்வு 09 ✱ 02 ✱ 1992

அமரர் **முத்துத்தம்பி இரத்தினவேலு**
(சந்தனம்)
**திதி: 01.02.2009**

பிறேம் நகைமாடம் *(மானிப்பாய்)*
தேவாலய ஒழுங்கை, கூழாவடி,
ஆனைக்கோட்டை.

**குடும்பத்தினர்.**


# கொமர்ஷல் வங்கியில் தற்போது வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் தாய்நாட்டின் அபிவிருத்தியில் பங்குகொள்ளக் கூடிய ஓர் முதலீட்டு வாய்ப்பு

**வெளிநாட்டு நாணயத்தை சம்பாதிக்கும் இலங்கையர்கள் இலங்கை ரூபாவில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய முடியும்**

இது தொடர்பாக மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமான கொமர்ஷல் வங்கியின் ஊடாக இப்போது இம்முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இச்சிறப்பு முதலீட்டில் உங்களுக்கு கிடைக்கும் பல நன்மைகள்.

- வரிகள் அல்லது முத்திரைக் கட்டணம் எதுவுமின்றி கூடுதலான வட்டியை உங்களுடைய முதலீட்டிற்கு பெற்றுக்கொள்ள முடியும்
- முதலீட்டிற்கு அரசாங்க பாதுகாப்பு உண்டு
- நாணய மாற்று விகித கட்டுப்பாடுகளின்றி மூலதனத்தையும் வட்டியையும் பணமாக்கிக் கொள்ள முடியும்
- கொமர்ஷல் வங்கியின் நாடெங்கும் பரந்துள்ள 170 கிளைகள், வெளிநாடுகளிலுள்ள வியாபார ஊக்குவிப்பு அலுவலர்கள் அல்லது முகவர்களின் ஊடாக மூலதனத்தை முதலீடு செய்ய முடியும்

மூலதன நிறைவு விகித அளவுகோலான படி ஒன்று மூலதனத்தின் அடிப்படையிலேயே உலகிலுள்ள 1000 முன்னணி வங்கிகளின் பட்டியலில் இடம்பெற்ற முதலாவது இலங்கையின் வங்கியாகவும், அத்துடன் இலங்கையின் மிகச்சிறந்த வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கியின் நிதி உறுதிப்பாடு, நிதி ஸ்திரத்தன்மை, இடைவிடாத தரச்சிறப்பு ஆகியவற்றின் மூலம் அதிசிறந்த பலனை அடைய முன்வாருங்கள்.

முதலீடு செய்வது தொடர்பான விபரங்களுக்கு **treasury@combank.net** அல்லது **+94 11 2486346/2486347** ஊடாக சனத்/கெமால் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

கொமர்ஷல் வங்கி


## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.1

தொண்டைமானாறு கெருடாவில் இ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை அதிபர் து.அருந்தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகமும் கல்வி அபிவிருத்தியும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் முதன்மை விருந்தினராகவும், ஓய்வுபெற்ற ஆசிரியர் சு.சிறிஸ்கந்தராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,பெப்.1

அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பாடசாலை முன்றிலில் நடைபெறவுள்ளது.

அ.இரங்கநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மாவட்ட வைத்திய அதிகாரி க.இராதேயன் பிரதம விருந்தினராகவும், அளவெட்டி மகாஜனசபைத் தலைவர் வை.சுப்பிரமணியம், அளவெட்டி கிராமசேவையாளர் ந.ரவீந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,பெப்.1

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வணபிதா ஜே.ஏ.யேசுதாஸ் அடிகளார் தலைமையில் நடைபெறும் நிகழ்வு களில் யாழ்.செயலகத் திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (50-267)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,பெப்.1

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பர்டசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சி.மணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா பிரதம விருந்தினராகவும், இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் சி.சிவகுமார், உடுவில் கோட்ட முதன்மை ஆசிரிய ஆலோசகர் திருமதி ரி.தயாபரராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204)


### தேவை

வெட்டித் தைப்பவர்கள்,
தைப்பவர்கள், பயிலுநர் தேவை.
*தொடர்பு: 91, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

### வீடும் காணியும் விற்பனைக்கு

சூராவத்தை அம்மன் கோவிலடியில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
*தொடர்பு:* **துரை பேக்கரி,**
*சூராவத்தை, சுன்னாகம்.*
*தொ.பே.இல.:* 021 222 5278, 021 222 5544 (82305)

### வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தியில் வீடு வாடகைக்குண்டு.
அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வீடு வாடகைக்கு விடப்படும்.
*தொடர்பு:* **077 8147091**
**முடிவுதிகதி: 06.02.2009** (சி/556752)

### திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலைவேளைகளில் மூத்த புகழ்பூத்த -சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர்- சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய அதிபர்
**கோ.பத்மநாதன்**
அவர்களின் பாசமிகு மைத்துனரான
**பசுபதி விநாயகமூர்த்தி**
*(கிராம அலுவலர்)*
அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதோடு ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம். (82312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயில் கருகிய முத்துக்குமார் நெஞ்சில் சுமந்த கனவுகள்!

**இலங்கையில் போரை நிறுத்தக்கோரியும் ஈழத்தமிழர்கள் மீதான படுகொலையைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியும் சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள மத்திய அரசு அலுவலகமான சாஸ்திரி பவன் முன்பாக கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஊடகவியலாளரும் தமிழின உணர்வாளருமான முத்துக்குமார் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்.**

**அதற்கு சற்று முன்பதாக 14 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றை அவர் மக்களுக்கு விநியோகித்தார்**

**அதில் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு:-**

தீக்குளிக்கப் போவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு முத்துக்குமார் விநியோகித்த துண்டுப் பிரசுரம் விபரம்வருமாறு:

விதியே விதியே என்செய் நினைத்திட்டாய் என தமிழ் சாதியை...

அன்பார்ந்த உழைக்கும் தமிழ்மக்களே...

வணக்கம் வேலைக்குப் போகும் அவசரத்திலிருக்கும் உங்களை இப்படி சந்திக்க நேர்ந்ததற்கு நான் வருநதுகிறேன் ஆனால் வேறு வழியில்லை. என் பெயர முத்துக்குமார். பத்திரிகையாளர் மற்றும் உதவி இயக்குநர். தற்சமயம் சென்னையில் உள்ள பத்திரிகை ஒன்றில் வேலை செய்து வருகிறேன்.

உங்களைப்போல்தான் நானும் தினமும் செய்தித் தாளையும், இணையத்தையும் பார்த்து பார்த்து, தினம தினம் கொல்லப்பட்டு வரும் எம் சக தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், யோசிக்க முடியாமல் தவிக்கும் எத்தனையோ பேரில் ஒரு சாமானியன்.

வந்தாரை வாழ வைக்கும் செந்தமிழ் நாட்டில் சேட்டு என்றும், சேட்டனென்றும் வந்தவனெல்லாம் வாழ, சொந்த இரத்தம் ஈழத்தில் சாகிறது. அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று குரல் கொடுத்தால், ஆம் என்றோ இல்லை என்றோ எந்த பதிலும் சொல்லாமல் கள்ள மௌனம் சாதிக்கிறது இந்திய ஏகாதிபத்தியம். இந்தியாவின் போர் ஞாயமானதென்றால் அதை வெளிப்படையாகச் செய்ய வேண்டியதுதானே.. ஏன் திருட்டுத்தனமாக செய்ய வேண்டும்?

ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்ற சொத்தை வாதத்தை வைத்துக்கொண்டு, சில தனிநபர்களின் பழிவாங்கல் சுயநல நோக்கங்களுக்காக ஒரு பெரும மக்கள் சமூகத்தையே கொன்று குவிக்கத் துடிக்கிறது இந்திய அதிகார வர்க்கம்.

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகள் மட்டும் குற்றம் சாட்டப்படவில்லை. தமிழக மக்களையும் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டியது ஜெயின கமின் அறிக்கை. அப்படியானால் நீங்களும் ராஜீவ் காந்தியைக் கொலை செய்த கொலைகாரர்கள்தானா?

ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன்றான் என்றார்களே, இவர்கள் முல்லைத்தீவிலும் வன்னியிலும் செய்வதென்ன? அங்கு கொல்லப்படும் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள். உங்களுக்கு அதுபோன்ற வயதில் ஒரு தங்கையோ, அக்காவோ இல்லையா? ராஜீவ் கொல்லப்பட்டபோது காங்கிரசின் முக்கிய தலைவர்கள் ஏன அவருடன் இல்லை, கூட்டணிக் கட்சித் தலைவியான ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ராஜீவ் கலந்துகொள்ளும ஆகப்பெரிய பொதுக்கூட்டத்தில் ஏன் பங்கெடுக்க போகவில்லை என்பது போன்ற கேள்விகள் கேட்கப் படாமலும், இவர்களால் பதில் சொல்லப்படாமலும் கிடக்கின்றன.

மக்களே யோசியுங்கள். இவர்கள்தான் உங்கள் தலைவர்களா? பணம், அடியாள் பலம் ஆகியவற்றைக் கொண்டு மிரட்டல் அரசியல் நடத்திவரும் இவர்கள் நாளை நம்மீதே பாய மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? அப்படி பாய்ந்தால் யார் நம் பக்கம் இருக்கிறார்கள்?

கலைஞரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று அப்பொழுதும் அவர் அறிவிப்பார். பிறகு, மத்திய அரசைப் புரிந்துகொள்வார(?!). பிறகு மறுபடி சரியான முடிவை எடுக்க வேண்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவார் - இந்த மாசம், இந்த வாரம், இதுவரைக்கும் என்ன எவனும் தொட்டதில்ல என்கிற "வின்னர்" பட வடிவேல் காமெடி யைப் போல.

### ஆஸ்பத்திரியில் ஒளிந்துள்ளார்

காகிதம் எதையும் சாதிக்காது மக்களே! இப்பொழுது, உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டப் பெயரைச் சூடிக்கொள்ளவும், தமிழ்நாட்டில் இருக்கும் பணத்தையெல்லாம் தன் குடும்பத்திற்கே உரித்தாக்கவும் விரும்புகிற தேர்தல் காலத் தமிழர் கலைஞர் மக்களன் கோபத்தை எதிர்கொள்ள பயந்து மருத்துவ மனையில் போய் ஒளிந்துகொண்டுள்ளார். தனது மந்திரிகளுக்கு அவசியப்பட்ட துறைகளுக்காக சண்டப்பிரசண்டம் செய்து சதிராடிய இந்த சூரப்புலி உண்மையில் தமிழுக்காகவோ, தமிழருக்காகவோ செய்ததென்ன? ஒருமுறை அவரே சொன்னார், "தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பா" னென்று. இவருடைய பம்மலாட்டத்தையெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக்கிறேதே...

பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியிருக்கும் சட்டக்கல்லூரி மாணவர்களே... உங்கள் போராட்டம் வெற்றிபெற சக தமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உங்களோடு களம் இறங்க முடியாமைக்கும் வருந்துகிறேன். ஈழத்தமிழர் பிரச்சினை என்றில்லை, காவிரியில் தண்ணீர் விடச்சொல்லும் போராட்டமென்றாலும் சரி, தமிழ்நாட்டிற்காதவரான போராட்டம் எதுவாக இருந்தாலும் சரி, முதலில் களம் காண்பவர்கள் நீங்கள், வழக்கறிஞர்களும்தான். இந்த முறையும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே களத்தில் இறங்கியவர்கள் இந்த இரண்டு தரப்பும்தான்.

உங்களுடைய இந்த உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு இந்திய உளவுத்துறை ஜாதிய உணர்வைத் தூண்டிவிட்டு, அம்பேத்கர் சட்டக் கல்லூரி அனர்த்தத்திற்கு வழி வகுத்திருக்கலாம் என்பது என் சந்தேகம். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன்கையெடுப்பவர்களாக இருந்தது மாணவர்கள் என்கிற ஜாதிதான். அதேபோல், தமிழ்நாட்டிலும் உங்களுக்கு முநதிய தலைமுறையொன்று இதுபோன்ற ஒரு சூழலில, இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கணடு தான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சிகளைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.

### மீண்டும் ஒரு தருணம் வந்திருக்கிறது

ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்தது போல், உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக்கொள்ள விட்டு விடாதீர்கள். போராட்டத்தின் பலன்களை அபகரித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விசயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக்கூடாது என சட்டம் போட்டதுதான். ஆட்சிகு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல்பவன் எவனாக இருந தாலும், அவனை நம்பாதீர்கள். நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக் கொள்ள இதுதான் தருணம்.

### ஒட்டு மொத்த இந்தியர்களுக்கு எதிரானது

உண்ணாவிரதத்தையெல்லாம் தூக்கியெறிந்து விடக் களம் காணுங்கள். உண்மையில், இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான வன்முறை நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு வடகிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன்படுத்திக் கூர் பார்த்தார்கள்! போதாதற்கு, ஹைட்டியில் சமாதானப் பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நா.வின் இராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கை இராணுவம் அவரவர் களுடைய பாலியல் நடவடிக்கைகளுக்காக அடித்துத் துரத்தப் பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது. ஆக இந்திய - இலங்கை இராணுவக் கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும் கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாணவர்கள், ஜனநாயக அமைப்புக்களையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.

இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தியிலிருந்து தலைவர்களை உருவாக்குகள். உங்கள் போராட்டத்தை சட்டக் கல்லூரி மாணவர்கள் என்ற இடத்திலிருந்து அனைதது மாணவர்கள் என்று மாற்றுங்கள். உங்களிடமிருக்கும் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும். ஆட்பலம, பணபலம், அதிகார வெற்றியை உடைத்து எறியுங்கள். உங்களால் மட்டுமே இது முடியும். "நாங்கள் தமிழ் மாணவர்கள், தமிழ்நாட்டின் உயிரானவர்கள். இங்கு தமிழினம் அமைதி கொண்டிருந்தால் ஏடுகள் தூக்கி படிப்போம். எங்கள் தமிழர்க்கு இன்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்" என்ற காசி அனந்தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள். என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும், விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதை புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள். எனக்கு சிகிச்சையோ, போஸ்ட்மார்டமோ செய்யப்போகும் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி மாணவர்களே.. உங்கள் கையால அறுபட நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காரணம், அகில இந்திய அளவில், மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக உயர்சாதி மாணவர்கள் போராடிக்கொண்டிருக்க, தன்னந்தனியாக நின்று, மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் போராடியர்களல்லவா நீங்கள்? எனக்கு செய்வதெல்லாம் இருக்கட்டும். நம் சகோதரர்களான ஈழத் தமிழர்களுக்கு உங்கள் பங்குக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

### இராமேஸ்வரம் மீனவர்கள் ஆடு,மாடுகளைவிடக் கேவலமானவர்களா?

தமிழீழம் என்பது அந்த நாட்டின் தேவை மட்டுமே அல்ல, அது தமிழகத்தின் தேவையும் கூட. காரணம், இராமேஸ்வரம் மீனவர்கள், உலகில் ஆடு, மாடுகளைப் பாதுகாப்பதற்குக் கூட சட்டமும், அமைப்புகளும் இருக்கின்றன. இராமேஸ்வரம் தமிழனும், ஈழத தமிழனும் மாட்டைவிட, ஆட்டைவிடக் கேவலமானவர்கள்? எல்லை தாண்டி போகும் மீனவர்கள், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டு வருவதாக இந்திய மீடியா திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வருகிறது. இவர்களெல்லாம் செய்தித்தாளே படிப்பதில்லையா? சென்னையின் கடற்கரைகளில் அடிக்கடி தைவான் நாட்டை சேர்ந்த மீனவர்கள் வழிதெரியாமல் வந்தவர்கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். பல ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் தூரத்திலிருக்கும் தைவான் மீனவன் வழிதவற முடியுமென்றா, வெறும் பன்னிரெண்டுமைல் தூரத்திற்குள் இராமேஸ்வரம் தமிழன் வழி தவறுவது நம்புவது மாதிரியில்லையாமா?

### வெளிமாநிலங்களைச் சேர்ந்த சகோதரர்களே...

உங்கள் சொந்த மாநிலத்தில் கூட இல்லாத நிம்மதியோடும், பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடுதான் என்பது உங்களுக்கு அனுபவத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலிருக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும் நம் பெயரைப் பயன படுததித்தான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் [illegible] விடப்படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆககக்கூடாதென நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, போராடிக்கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக் கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை எம் கரத்தை பலப்படுத்துவதோடு, எதிர்காலத்தில், ஒரு நவநிர்மாண் சேனாவோ, ஸ்ரீராம் சேனாவோ தமிழ்நாட்டில் உருவாகவிருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும் என்பது என் கருத்து.

### காவல்துறையிலிருக்கும் இளைஞர்களே...

உங்கள் மீது எனக்கு இருக்கும் மதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல, காரணம், தமிழுக்காக மற்றவர்கள் என்ன செயதார்களோ, அலுவலர்களை ஐயா என அழைப்பது போன்ற நடைமுறை ரீதியில் தமிழை வாழ வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். மக்களுக்காகப் பாடுபடவேண்டும், சமூக விரோதிகளை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதுபோன்ற உன்னத நோக்கங்களுக்காகத்தான் நீங்கள் காவல்துறையில் இணைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், அதை செய்ய விடுகிறதா ஆளும் வர்க்கம்? உங்களை சிறுசிறு தவறுகள் செய்ய விடுவதன் மூலம் தன்னுடைய பெருந்தவறுகளை மறைத்துக்கொள்ளும் அதிகார வர்க்கம், உங்களை, எந்த மக்களுக்காகப் பாடுபட நீங்கள் விரும்பினீர்களோ, எந்த மக்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தீர்மானித்தீர்களோ, அந்த மக்களுக்கெதிராகவே, பயிற்றுவிக்கப்பட்ட அடியாள்களாக மாற்றுகிறது. டெல்லி திகார் ஜெயிலைப் பாதுகாப்பது தமிழகப் பொலிஸ்தான். இந்தியாவில் பழமையான காவல்துறையான தமிழகக் காவல்துறை சிறப்பாகச் செயல்பட்டுவரும் காவல் துறைகளில் ஒன்று. ஆனால் அந்த மதிப்பை உங்களுக்குக் கொடுக்கிறதா இந்திய அரசாங்கம்? மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தமிழகம் வந்து திரும்பிப்போகையில், சென்னை விமான நிலையத்தில், அவருக்கான பாதுகாப்பை வழங்க அனுமதிக்க மறுத்திருக்கிறார்கள் மத்திய காவல் அதிகாரிகள்.

ஏனென்று கேட்டதற்கு, ராஜீவ் காந்தியை நீங்கள



பாதுகாத்த லட்சணம்தான் தெரியுமே என்று கிண்டல் செய்திருக்கிறார்கள். ராஜீவ் காந்தியைத் தமிழக காவல்துறையால் காப்பாற்ற முடியவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு உண்மை, ராஜீவோடு இறந்தவர்களில் பலர் அப்பாவிப் பொலிஸ்காரர்கள் என்பது. உங்கள் அர்ப்பணிப்புணர்வு கேள்விக்கப்பாற்பட்டது. ஆனால் மேற்படி வெண்ணெய் வெட்டி வீரகள் - அதுதான், இந்திய உளவுத்துறை - ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்ற தகவலை அறிந்தபோதும் மெத்தனமாக இருந்தது என்பது பின்னர் அம்பலமானதல்லவா... இதுவரை காலமும் நீங்கள் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும் தமிழகத்தின் பெருமைகளில் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

இந்த தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கம் இருந தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒருமுறை சக தமிழர்களுக்காக அர்ப்பணித்துப் பாருங்கள். மக்கள் உங்களை தங்கத்தட்டில் வைத்து தாங்குவார்கள். தமிழனின் நன்றி உணர்ச்சி அளவிடற்கரியது. தன்னுடைய சொந்தக்காசை வைத்து அணை கட்டிக் கொடுத்தான் என்பதற்காகவே அவனுக்கு கோயில் கட்டி, தன் பிள்ளைகளுக்கு அவன் பெயரை வத்துக் கொண்டாடிக்கொண்டிருக்கிறான் முல்லையாற்றின் மதுரை மாவட்டத் தமிழன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கொந்தளிக்கப் போகும் தமிழகத்தில், மத்திய அரசு அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மறுப்பது, றோ, சி.பி.ஐ போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களை உள்ளூர் மக்களுக்கு அடையாளம் காட்டுவதும்தான். இதை மட்டுமாவது செய்யுங்கள். மற்றதை மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

### களத்தில் நிற்கும் தமிழீழ மக்களே, விடுதலைப் புலிகளே...

அனைத்துக்கண்களும் இப்போது முல்லைத் தீவை நோக்கி. தாய்த் தமிழகம் உணர்வுபூர்வமாக உங்கள் பக்கம்தான் நிற்கிறது. வேறு ஏதாவது செய்ய வேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால் என்ன செய்வது உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னத தலைவன் எங்களுக்கில்லையே... ஆனால, நம்பிக்கையை மட்டும் கைவிடாதீர்கள். இதுபோன்ற கையறுகாலங்கள்தான். தமிழகத்திலிருந்து அப்படி ஒருவர் இந்தக் காலத்தில் உருவாகலாம் அதுவரை, புலிகளின் கரங்களை பலப்படுத்துங்கள். 1965 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுயநலமிகளின் கையில் ஒப்படைத்ததால்தான் தமிழக வரலாறு கற்காலத்திற்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவறை நீங்கள் செய்து விடாதீர்கள்.

### அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைகுரிய ஒபாமாவே....!

உங்கள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இறையாண்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடிமகனை இன ஒதுக்கல் மூலமாக [illegible] என்பதற்கு எந்த உத்தர வாதமும் [illegible] வசதிக்காக அமெரிக்காவின் கடந்த காலத்தையே எடுத்துக்காட்டாக சொல்லலாம். உலகப்புகழ் பெற்ற குத்துச்சண்டை மாவீரன் முகமதலி சொன்னானே, என் சருமத்திலிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற்பழிப்பின் மூலமாகவே வந்திருக்குமென்று... நீங்கள் அமைதியாக இருக்கும் வரை இந்தியா வாயே திறக்காது. ஒட்டுமொத்தத் தமிழர்களும் அழிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக்கும். அதுவரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா?

வன்னியில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்காள் என்கிறார்கள். அப்படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே, தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அரசைச் சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கு. இது இனப்படுகொலை இல்லையா? இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொள்கின்றனரென்றால். நீஙகள் உங்கள் மௌனத்தின் மூலமாகவும் பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கி போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிட மாட்டார்கள். அறத்திறகே அன்பு சார்பென்ப அறியார். மறத்திற்கும் அஃதே துணை என்று பாடியுள்ளார் எங்கள் திருவள்ளுவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா - என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் எடுத்ததால்தான் வந்தது என்பதைப் போல.. உண்மையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரணகர்த்தாக்கள் அல்லர் (they are not the reason: just an outcome)

இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருப்பது வெளிப்படையாகாதவரை, இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் தலையிட முடியாது என்றது. சீனா, பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காக செய்வதாகச் சொன்னது.

நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய, மும்பை தொடர் வெடிகுண்டுகள், பிறகு அண்மையில் நடந்த தாக்குதல் எனப் பலவாறாக இந்திய மக்களைக்கொன்று குவித்த பாகிஸ்தானோடு இணைந்து கொண்டு தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. அப்படியானால், பாகிஸ்தானின் இந்தியா மீதான பயங்கரவாதமென்பது இந்தியா-பாகிஸ்தான் இருதரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்ட பரஸ்பர புரிதலுடன் உருவாக்கிக் கொண்ட ஒன்று என்ற எம் சந்தேகம் ஒருபக்கம் இருக்க, இப்போது, விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள் அதனால்தான் சண்டை என்கிறது.

ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்கிறது. ராஜீவ் காந்தி ஒரு கவுன்சிலரோ, மாவட்டச் செயலாளரோ அல்ல. அவரை ஏற்கனவே ஒருமுறை கொலை செய்யும் முயற்சி இலங்கையில் நடைபெற்றிருந்த போதும் அந்தக் கொலைகாரன் விசாரிக்கப்படவில்லை. ராஜீவ் காந்தியைக் கொல்ல முயன்ற அந்த சிங்கள வீரன் ஆகியோரையும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இணைத்துக்கொண்டு மறுபடியும் விசாரிக்கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கைகளில் ஒன்று.

### ராஜீவ்மீது கோபம் இருக்க நியாயமில்லை

ராஜீவ் மீது புலிகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாமே தவிர, கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், ராஜீவ் இந்திராவின் புதல்வர். இந்திரா, தமிழீழத்தின் சிறு தெய்வங்களில் எம்.ஜி.ஆருக்குப் பக்கத்திலிருப்பவர்.

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம்பாகத்தான் இந்தப்போரில் ஈடுபட்டிருப்பது அம்பலமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக்கூடாது? புலிகள் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங்களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக்கூட நடந்து கொண்டதில்லை. இவர்கள் ஒரு நிர்ப்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று எதிர்பார்ப்பது எனனவகை நியாயம்? தாங்கள் நேர்மையாக நடநது கொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவது மூலமாக மட்டுமே போராளிகளை-ஆயுதத்தைக் கீழே வைக்கச்செய்ய முடியும். கடந்த கால அரசுகள் எவையும் அப்படிச் செயல்படவில்லை.

உதாரணம் ரணில்- கருணா. ஆனால், புலிகள் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு செய்தது ஆயுதம் வாங்கியது மட்டுமல்ல, அது காலாகாலமாக நடப்பதுதானே- ஓர் அரசு நிர்வாகத்தையே உருவாக்கியுருக்கிறார்கள். சர்வதேசத்தின் கண்களில் இது தீவிரவாதமா?

அப்பாவித் தமிழர்களைக் காப்பதற்காகத்தான் போரிடுவதாக பசப்புகிறது இந்தியா. ஆயுத தளபாடங்களும், உளவு விமானங்களும்தான் இலங்கை போகின்றனவே தவிர, இந்தியாவால் அனுப்பப்பட்ட ஒரு பரசிட்டமோல் மாத்திரையைக் காட்டச் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த லட்சணத்தில், தமிழீழ மக்களுக்கான வசதிகளை இலங்கை அரசு செய்யுமாம். அதற்கு இந்தியா உதவுமாம்... வேலிக்கு ஓணான் சாட்சி! சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள், பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல... இப்போது எம்மக்களைக் கொலை செய்து வருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும் தான் என்பதை எப்போது உணர்வீர்கள்-நியாயத்தின்பால் பெருவிருப்பு கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட பிறகா? அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகள் ஒன்றின் படி ஒவ்வொருநாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கிறோம்.. எங்கள் சகோதரிகளையும், குழந்தைகளையும் விட்டுவிட்டுச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை. அவர்களெல்லாம் மனமார சிரிப்பதை ஒருநாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே. விடுதலைப் புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கியதை இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ கிடையாது. - என்றுள்ளது.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் 14 அம்சக் கோரிக்கையும் உள்ளடக்கப்பட்டு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## டிலன் ஹொட்டல்



எமது வாடிக்கையாளரின் விருப்பப்படி மீண்டும் அனுபவ மிக்க உணவு தயாரிப்பாளரைக் கொண்டு தயாரிக்கப்படும்.

- புரியாணி வகைகள்
- பிறைட் றைஸ் வகைகள்
- நூடில்ஸ் வகைகள்
- டெவல்ஸ் வகைகள்
- சூப் வகைகள்
- இந்தியன் உணவு வகைகள்
- உள்நாட்டு உணவு வகைகள்

என்பனவற்றை ஒருமுறை வந்து சுவைத்துப் பாருங்கள்

**டிலன் ஹொட்டல்**

இல.133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/556760)

---

ஓம்
சிவமயம்
நாகபூஷணி அம்பிகைதுணை.

## விவாக ஷோபன சுபமுகூர்த்தப் பத்திரிகை

மஹாராஜ ஸ்ரீ அனேக கோடி நமஸ்காரம்

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வ மங்களமான சர்வதாரி வருடம் தை மாதம் 19ஆம் நாள் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை ஷஷ்டி திதியும் ரேவதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய மு.ப. 10.47 மணி முதல் 11.58 மணி வரையுள்ள மேஷ லக்ன சுபமுகூர்த்தத்தில்

வட்டு நகர், அடைக்கலந் தோட்டம்,
**சிவஸ்ரீ இரத்தினசாமி சர்மாவின்**
பௌத்திரியும்
எமது குமாரத்தியுமாகிய சௌபாக்கியவதி
**திஷாளினியை** (திஷா)

வடகோவை, நயினைகுருமணி
**சிவஸ்ரீ வை.மு.பரமசாமி குருக்கள்**
தம்பதிகளின் பௌத்தரனும்
எமது சீமந்த குமாரனுமாகிய சிரஞ்சீவி
**பாலகுமார சர்மாவிற்கு**
(ஸ்ரீராம்)

கன்னிகாதான மாங்கல்ய தாரண பாணிக்கிரஹணம் செய்து வைப்பதாக கேணியடி ஸ்ரீ வைரவப் பெருமானினதும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையினதும், அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ வல்லீதேவசேனா சமேத சுப்பிரமணிய பெருமானினதும், திருவருள் முன்நிற்க பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசாமி கோயில் கந்தமுத்தர் திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு பந்து மித்ர சகிதம் வருகை தந்து சுபமுகூர்த்தத்தை நடத்தி வைத்து புது மணத் தம்பதிகளை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வதூ வர கிரஹப் பிரவேசம்: 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு வரன் இல்லத்தில் (மணமகன் இல்லத்தில்) நிகழும்.

வரவேற்பு உபசாரம்: 04.02.2009 புதன்கிழமை மாலை 3 மணிக்கு வதூ இல்லத்தில் (மணமகள் இல்லத்தில்) நிகழும்.

தங்கள் ஸ்வாகதம் விரும்பும்

**சிவஸ்ரீ இ.சிவசுப்பிரமணிய சர்மா**
**ஜெகதீஸ்வரி அம்மா தம்பதிகள்**
அடைக்கலம்தோட்டம் கந்தசாமி
கோயில், வட்டுக்கோட்டை.

**சிவஸ்ரீ மு.ப.முத்துக்குமாரசுவாமி குருக்கள்**
**பர்வதவர்த்தனி அம்மா தம்பதிகள்**
பிரதமசிவாச்சாரியார்
[நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்] வடகோவை

சுபமஸ்து
இரு வீட்டார் அழைப்பு

(82193)

---

ஓம்
சிவமயம்

## திருமண வாழ்த்துப்பா

அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது



திரு. திருமதி வேதநாதன்
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
**பவந்தன்**
அவர்களுக்கும்

திரு. திருமதி தயானந்தம்
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
**ஜெயந்தி**
அவர்களுக்கும்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருவருள் துணையுடன் வண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் ஸ்ரீலக்ஷ்மி நாராயணன் திருமண மண்டபத்தில் இன்று 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுகின்ற திருமண வைபவத்தின்போது மனமுவந்து வாழ்த்தி வழங்கப்படுகின்றது

**பெற்றோர்கள் பெருமிதம் கொள்ள**
**உற்றார் உறவினர் உவகை கொண்டாட**
**நீவிர் இருவரும் ஆனந்தக் கடலில் மிதக்க**
**திருமணம் காண வருகை தந்தோரெல்லாம்**
**மனம் நிறைந்து வாழ்த்தி அருள**
**அருள்மிகு நயினை நாகம்மாள் ஆசீர்வதிக்க**
**ஈருடலும் ஒருயிராக இணைந்து கொண்ட**
**பவந்தன் - ஜெயந்தி தம்பதிகாள்**

**வாழ்க நீடூழி; வளமெலாம் பெறுக!**
**மக்களால் மனையறம் பொலிக!**
**சூழ்க பேரின்பம்**
**தொட்டவை எல்லாம் துலங்குக!**
**இருவரும் மணவாழ்வில் ஒன்றி**
**ஆழ்கடலான அன்பிடையாடி**
**அயல், கிளை, உறவுகள் தாங்கி**
**நாள்களாய் புலரும் அனைத்தும்**
**மங்கல நன் நாள்களாய் மலர**
**வாழிய வாழிய வாழியவே!**

என்றும் எமது இனிய நல்வாழ்த்துக்கள்!

அன்புடன் அருட்கவிமாமணி
வே.செல்வநாயகம்
குடும்பத்தினர் (கனடா),
ச.விசுவலிங்கம் குடும்பத்தினர்.

(82182)

---

## கணித வகுப்புக்கள்

தரம் - 06 முதல் தரம் - 11 வரை கணிதம் பயிற்றப்பட்ட ஆசிரியரினால் அடிப்படையிலிருந்து குழுக்களுக்கு அல்லது பிரத்தியேகமாக வீடு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 6172873

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யக்கூடிய உபகரணங்கள் பாத், கொம் ரோஸர், ஐஸ்கிறீம் மெசின், 2'X4' டீப்பிறசர்கள் 2 என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: **ந.சிவநாதன்,**
பெரியவிளான், 5ஆம் மைல், இளவாலை.

---

## வாழ வழிகாட்டு! வாழி!

சீர்மருவு செழுந்தண்மா விணுவை தன்னின்
சிரமான பரராச சேகரப் பிள்ளை ஐயா!
பார்போற்றும் நின்பாதம் பற்றினோம் நாம்
பரம! நின்றிருக் கண்ணால் சற்றே நோக்கி
பூர்வவல் வினையாவும் பொடிப்பொடி யாக்கிப்
பூதலத்தே புதுமைநிறை கோயில் தன்னில்
ஆர்வலர்கள் நாமடியார் சூழ்ந்து பக்தி
அரசர்போல் வாழ வழிகாட்டு! வாழி!

ஏரம்பநாத னின் பொற்றாழ்க ளேத்தி
எமையெல்லாஞ் சிறப்புடனே யிலங்க வைத்து
ஓரங்க துதிக்கையா லுலகந் தன்னை
ஒருங்கிணைத்துச் சுருட்டியே உனதருகில் வைத்து
ஆதியா மந்த மென் றிதுவு மின்றி
அருள்காட்டி ஆளாக்கி ஆண்டு கொண்டு
ஆரத்தி சுற்றியுமக் கறுகுஞ் சேர்க்க
அருளாகி நல்கினல் வழிகாட்டு! வாழி!

வளமாக எமை வாழ வழிகாட்டு! வாழி!
வகையாகப் பக்தருக்கு அருள்காட்டு! வாழி!
இளமைசேர் மனதினொடு மென்று மெம்மை
இன்முகத்தோடிணையின்றிவாழ வழிகாட்டு!வாழி!
சிலவான சிறுமைகள் தாம்சேரா வண்ணம்
சிம்மாசனத் திருந்துநல் வழிகாட்டு! வாழி!
களந் தன்னில் கனமாகவாழ வழிகாட்டி நிற்கும்
பரராச சேகரனே நீ வாழி! வாழி!

**த.ச.யோகீஸ்வரன்.**

(சி/586977)

---

## தைப்பூசம் அன்று விசேட அனுமதிகள்

## தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்

6th Anniversary

### சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்

# பாலர் பாடசாலை

Play Group - 2-3 years | Montessori - 3 -4 years

Pre-School - 4-5 years

கற்பித்தல் முறை :

- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- தாய்மொழி கட்டாய பாடம்.

விசேட நிகழ்ச்சிகள் :
English Concert, முத்தமிழ் விழா, ஒளி விழா, பட்டமளிப்பு விழா, சித்திரம், கைவேலை கண்காட்சி, விளையாட்டுப் போட்டி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

BBS பாலர் பாடசாலைகளில் அடிப்படைக்கல்வியைப் பயின்று, 2008ம் ஆண்டில் 5ம் ஆண்டு புலமைப்பரிட்சையில் சித்தியெய்திய 95% மாணவர்களை, BBS நிர்வாகிகள், ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்துகிறார்கள்.

## சிறார்களுக்கான விசேட ஆங்கிலப் பாடநெறிகள்

- ஆண்டு 1 முதல் கல்வி கற்கும் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்குமான விசேட ஆங்கில வகுப்புக்கள்
- Pre Foundation, Foundation, Level 1, Level 2, Level 3, Level 4
- 2009ம் ஆண்டிற்கான ஆங்கிலப்பாடத்திட்டத்திற்கமைய பாடசாலை மட்டத்திலமைந்த ஆங்கிலப் புத்தகங்கள் கற்பிக்கப்படும்.
- இலக்கண அறிவும், அதை வளர்ப்பதற்கான பயிற்சிகளும்.
- பேச்சுத்திறனை வளர்க்கும் பயிற்சிகள்
- எழுத்து, வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகள்

# BRITISH BUSINESS SCHOOL

Hot Line : 0773627055

நல்லூர் (1) : இல. 140, கோவில் வீதி, நல்லூர். Tel : 021 222 5796
நல்லூர் (2) : இல. 34, சட்டநாதர் வீதி, நல்லூர்.Tel : 021 222 4060
சுன்னாகம் : Lakshmi Cottage, (புதிய நீதிமன்றம் அருகில்), K.K.S வீதி, மல்லாகம்.
மானிப்பாய் : 252, ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.
புலோலி : ஸ்ரீ பத்மநாதன் இல்லம் , மந்திகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்துக்கும் மதத்துக்கும் என்றும் உண்டு இணைபிரியா இறுக்கமும் பிணைப்பும்!

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது''
ஔவை சொன்னது அவ்வளவும் இனிது. மானுடம் என்பது ஓர் மகோன்னத பிறப்பு. மனிதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான இயல்புகளில் ஒன்று.

மானுடம் காக்க மரங்களை வளர்ப் போம். நிழல்கள் நிறுவனமாகிச் செய்யும் காரியம் ஊர்போற்றும் உன்னத கைங்கரியம். ஒருகை கொடுத்து இவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஊர்தோறும் அங்கே 'நிழல்கள்' போன்ற பல நிறுவனங்கள் வந்தால் மரங்களைப் பாதுகாக்க, உற்பத்தி செய்ய, திட்டமிட உபயோகிக்க இலகுவாகிவிடும்.

**மதம் + மனம் = மனிதன்**

மதமும் மனமும் இணைந்தபோது ''மனிதன்''பிறந்தானோ? அதிலும் மரமும் சேர்ந்து கொண்டதனால் ''மனிதர்'' என்று ஆனாரோ? மதமும் மனமும் மரமும் கொண்ட கலவைதான் 'மானுடம்' ஆகி வந்ததுவோ?

தற்செயலாகப் போட்ட கூட்டல் கணக்கென்றாலும் தமிழாசான்களது விளக்கம் எதுவோ?

மதங்கள் கூறிய மந்திரங்களும், மனதில் தோன்றிடும் (நல்ல) எண்ணங் களும் இணைந்து மரத்தில் வெளிப்படும் மாண்பதுவும் சேர்ந்தால் மானுடம் வளரக் காரணமாகுமா?

மரத்தின் மாண்பு என்பது, தான் வளரும்போது தன் சூழலைப் பாதுகாத்து, தன் இனம் பெருக்கி, பிறருக்கு ஊனாக, உறைவிடமாக, உயிர்காக்கும் மிதவையாக, தான் எரிந்து விறகாக, இன்னும் இறந்து தளபாடமாக இப்படித் ''தன்'' வசதியைக் குறைத்துப் பிறருக்கு -ஊருக்கு உதவிடும் உன்னத கைங்கரியத்தைக் குறிப்பிடலாம். அத்தகைய மரத்தின் மாண்புடன் மனிதம் மிக்க மனிதர்களும் நம்மிடையே இருந்திருக்கிறார்கள்! இன்னமும் இருக்கிறார்கள்! எம்முடன் வாழ்ந்த அன்னை தெரேசா, எங்கள் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியம்மா அகிம்சைக்கு உயிர்கொடுத்த தீபங்கள் இப்படி இன்னும் எத்தனை பேர்.

**வரலாற்று உதாரணம்**

'இலங்காபுரி' இராமாயணத்தில் மட்டுமா எரிந்தது. இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு மேலாக அல்லவா எரிந்து கொண்

## ஆலும் அரசும் வீழ்ந்து விட்டாலும் அவற்றின் பெறுமதி குன்றாது அவற்றை வளர்ப்பதில் என்றும் எங்களுக்கு அக்கறை தேவை

டிருக்கிறது. மரவுரி தரித்த வானரம் அன்று வைத்த தீயை மரபுகளுடன் வந்த மதங்களினால் இன்றுவரை அணைக்க முடியவில்லை. மாறாக அரசியல் எண்ணெய் ஊற்றித் தொடர்ந்து எரிகின்றன.

மனிதன் எரிந்தால் ஒருபிடி சாம்பல். மரம் எரிந்தால் சக்திதரும் நெருப்பு. அதனுடன் காரிருள் விலக்கும் வெளிச்சம். மரத்தின் பயன்பாடு நம்மால் இல்லையே- எனவே மனிதனைவிட மரங்கள் உயர்ந்தவை, என்றாகிறதல்லவா?

யானையின் மதமும் சிங்கத்தின் (மமதை) மனமும் சேர்ந்ததால் இலங்காபுரியில் மனிதம் செத்து மிருகமானது. புனிதம் காக்கும் மரத்தை அழித்து இங்கே எப்படி மானுடம் வளரும்? அமைதிப் பூங்கா அக்கினியானதில் பெரிய மனிதன் இவனின் மமதைதானே அடிப்படைக் காரணம்.

மதத்தின் கொள்கை சாந்தியும் சமாதானமும் என்பர். ஆனால் மதம்பிடித்த மதங்களால் அழிவு வந்தது. அதுபோல் மனித மனங்கள் மமதை கொண்டதால் அழிவு செய்யுது. யானையின் மதம் செய்ததை சிங்கத்தின் மனம் செய்யுது. உருவம் வேறு என்றாலும் செயற்பாடு ஒன்றுதான்.

**அமைதியின் உருவம் மரங்கள்**

எங்களூர் பண்டிதர் நாசூக்காகக் காதில் சொல்வார். ''அமைதியை மரத்தில் கற்றுக் கொள். என்ன செய்தாலும் திருப்பிச் செய்யாது. தன்னை வெட்டுகிறான் எனத் தெரிந்தும் மீண்டும் தழைத்து காயும், கனியும், நிழலும், விறகும் கொடுப்பன இவை தான்''. அமைதிப்புறா உயரப் பறந் தாலும் தங்குவதற்கொரு மரம் வேண்டும். அமைதிப் புறாவே தேவையில்லாததால் 'நிஷா' வின் நடனத்தில் மரங்கள் எல்லாம் மடமட வென சரிந்துவிட்டன. ஆல், அரசு, வேம்பு, தேக்கு, மா, பலா, மருது, வாகை என வீரம் சொன்ன அனைத்தும் சரிந்தன. இவற்றுடன் தென்னை, பனை, கமுகும் சேர்ந்து மெல்லிய வாழையும் சேர்ந்தே சரிந்தன. சரிந்தவை போக சரிக்கப்பட்டவை ஏராளம். தலைகளை இழந்து தவிக்கும் மரங்கள் அமைதி அழிப்பின் சாட்சியங்கள். இவை இம் மண்ணின் வரலாறு சொல்லும் சுவடுகள். மிதவாத மதமும் மமதை மனமும் கலந்த கலவையில் ''நான்'', ''எனக்கு'' என்ற ஆணவம் சேரும்போது, மனித குணத்தில் மிருகம் தெரியும். கூட்டிக் கழித்துப் பார்த்தால், ஆறறிவு மனிதனுக்குள்ளே அநேகமானவை மிருகங்களே!

**மரமும் மதமும்**

மரத்திற்கும் மதத்திற்கும் இணை பிரியாத இறுக்கம் உண்டு. எம்மதமென்றாலும் மரத்தின் முக்கியத்துவம் அங்கே இருக்கும். இன்னும் பார்த்தால் மதத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும் மரத்தினூடேயே இருக்கும்.

தபசிகள் தவம் செய்ய மரத்தை தெரிந்தெடுத்ததும், புத்தர் பெருமான் மரக்கீழமர்ந்து மௌனித்திருந்ததும், பின் போதனைகள் தந்ததும் வரலாறு சொல்லும். கிறிஸ்மஸ் மரத்தின் கீழே மாட்டுத் தொழுவத்தில் இயேசுபிரான் பாலனாகப் பிறந்ததும் இறுதியில் சிலுவை மரத்தைச் சுமந்து சென்று அதிலே அறையப் பெற்றதும் எமக்கு வழிகாட்டும் உதாரணங்கள்.

மரத்தை மறந்த மனிதன் மதத்தையும் மறந்துபோனான். மதத்தை வளர்க்கப் பாடுபடும் மனிதர்கள், மரத்தை நட்டு மாண்பினை வளர்க்கலாமே?

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி'' என விளித்த மணிவாசகப் பெரு

## தனது வசதியைக் குறைத்து பிறருக்கு உதவும் மரங்களின் மாண்பு மதிப்பிடற்கரியது

மான் மரத்தின் மகிமையைச் சிவபுராணத்தில் வைத்தார். இத் தாவர சங்கமத்துள் அனைத்தும் அடக்கமென உணர வைத்தார். இந்து சமய பாரம் பரியத்திலும், ஆலய வழிபாட்டிலும், மரங்களின் தேவை அதிகமானது. சமய அனுட்டானங்களில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு விதமான மரங்களைவிட இறைவன் பவனிவரும் வாகனங்களை மரங்களிலேயே அவற்றைச் செதுக்கி ஆக்கினார்கள். வாகனங்களிலும் பெரிதாகச் செய்யப்படும் தேர், சப்பறம், கைலாய வாகனம் போன்ற அனைத்திற்கும் மரமே அதியுச்சப் பயன்பாடு. ஆடி அசைந்து இன்னல் போக்கும் எம்பெருமான் தேரேறி வரும் காட்சியே தனி. தேரால் இறங்கும் இறைவனை குளிரவைத்து பச்சை சாத்தி பசுமையின் பெருமையை வெளிக்காட்டும் பாங்கே தனி.

**தேரும் மரமும்**

தேர்ச்சில்லு முழுவதுமாக மரத்தால் ஆக்குவது விந்தையிலும் விந்தை. அளவுப் பரிமாணம் நூலளவிலேனும் குறையாமல் அமைத்துத் தருபவர்கள் எமதருமை ஆசாரிமார். மரத்தைத் தெரிந்தெடுத்து, பதப்படுத்தி, கடைந்து, செருக்கி, அறுத்துப் பொருத்தி இனிய நல் சிற்பங்களை ஆக்கும் சிறப்பே தனி. தெய்வத்துடன்



வாழ்ந்து அந்த விக்கிரகங்களை மரத்தில் தந்து மரத்தின் மாண்பை எடுத்துக் காட்டுபவர்கள் இவர்கள். என்றும் மரியாதைக்குரியவர்கள். தேர் ஒன்றை உருவாக்கக் கைதேர்ந்தவர்கள் அவசியம். அவர்களும் அருகிக்கொண்டே போகிறார்கள். பரம்பரையாக வந்த இந்தத் தெய்வீகக் கலையைக், கலைஞர்களைப் போற்றுதல் அவசியம். ஆலமரத்தின் விழுதுகள் போலே, அடியொற்றி இத் திருப்பணி யைச் செய்தல் இறைதொண்டு அன்றோ!

**தேர் செய்யா நல்லமரம் வேண்டும்**

இந்து ஆலயங்களில் தேரில் இறைவன் பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. மனதுக்கு இதமான காட்சி. அந்த அழகான தேரை உருவாக்குவதற்குச் சிறந்த வைரம் பாய்ந்த மரங்கள் தேவை. தேரினது அடித்தளம், மேற்பகுதி மற்றும் சில்லுகள் ஆகிய முக்கிய பாகங்கள் மருது மற்றும் இலுப்பை மரங்களிலிருந்துதான் உருவாக்கப்படும். மருத மரத்தின் சிராய்ப்பகுதி குறுக்கும் நெடுக்குமாக இருப்பதால் வைரம் பாய்ந்ததாக இருக்குமாம். அதேபோன்று பால்மரமான இலுப்பை மரமும் சிறந்ததாம். இவ்வளவு பெரிய தேரைச் சுமந்து உருளும் நான்கு சில்லுகளும் மருதின்[illegible] செய்யப்படும். மரச்சில்லுகளின் வலிமை உணர்த்தும் வாகனம் இது. இவைதவிர உருவங்கள் மற்றும் கடைச்சல் என்பன கைகளால் செய்ய இலுப்பை மரம் சிறந்ததாம். ஆனால் இயந்திர உதவி கொண்டு இவ்வகையான கடைச்சல் வேலைகளைச் செய்வது இலுப்பை மரத்தில் கடினமாம். அநேக வேளைகளில் இரும்பு சில்லுகளை உடைத்து விடுமாம். திருநெல்வேலி சிற்பாசிரியார் மகன் தந்த தகவல் இது. இப்போதெல்லாம் வேம்பு, முதிரை போன்ற மரங்களைப் பவளக்காலுக்குப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்களாம். வேம்பும் முதிரையும் சீவியெடுத்தால் வழுவழுப்பாக வருமாம். இவ்வளவு பெறுமதியுடைய இலுப்பை, மருது போன்ற மரங்கள் யாழ். குடாநாட்டிலே விரல்விட்டு எண்ணக் கூடிய அளவே இருக்கின்றன. ஆடிப்பாடி வந்த ''நிஷா''வினால் மருதும் மலை வேம்பும் அசைக்கப்பட்டு விட்டனவே? வீரம் பாய்ந்த மருதமரம் விழுந்தது வியப்பாகவே இருக்கின்றது.

**மதவழிபாடும் மரமும்**

கீரைக்கடைக்கும் எதிர்கடை வேண்டும் என்பதை எப்படிப் புரிந்து கொண்டனரோ தெரியவில்லை எங்களூர் பக்த கோடிகள். கண்டஇடமெல்லாம் மரத் தில் கோலம்போட்டு பின் அதில் கோயில்கட்டி விடுவதுண்டு. கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என முதுமொழியொன்று வழக்கிலுண்டு. கண்ட இடத்தில் கண்ட கல் எல்லாம் லிங்கமாகி, பின் கோயிலாகி விடுகின்றன. தெருப்பிள்ளையார் தண்ட வாளத்திலும் குடிகொள்ளத் தொடங்கிவிட்டார்.

**சிறப்புக் கட்டுரை**

காங்கேசன்துறையில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்தினூடாக ஏ-9 பாதையினருகே செல்லும் தண்டவாளமனைத்தும் தடயமே இல்லாமல் ஆகிவிட்டன. இந்த ரயில் பாதையில் அதிகளவிலான கோயில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சீமானுக்கு இருக்கும் அக்கறை கூட ஸ்ரீமான் பொதுசனத்திற்கு எள்ளளவும் இல்லை. கோயில் கட்டிவிட்டால் யாழ்ப் பாணத்தில் இனி இரயில் ஓடாதா? ஒரு வேளை ஓட நினைத்தால் தண்டவாள மிருந்த பகுதியில் எழுப்பப்பட்ட வீடுக ளையும், கடைகளையும், கோயில்களையும் இடித்து விட்டுத்தான் ஓட வேண்டும். இதனையும் ஒருவகையில் சொத்துச் சேகரிப் பாகவும், சுவீகரிப்பாகவும் எடுத் துக் கொள்ள லாம். இங்கே மனதுக்கு ஆறுதலான விடயம் என்னவென்றால், கைதூக்கிய ஆட்காட்டிகள் இம் மண்ணின் விபரீதம் உணர்ந்து தூக்கிய கைகளை இறக்கவேயில்லை. வடபகுதி இரயில்வேக்கு உரித்தான ஒரேயொரு சொத்து இந்த மரத்துப் போன கைகாட்டிகள் மட்டும்தான். இரயில் தரிப்பு நிலையங்கள் இருந்த இடங்களையே காணவில்லை, யாழ்ப்பாண நிலையத்தைத் தவிர. அதிலும் போரின் உக்கிரத்துள் சிக்கி யாழ்தேவி வவுனியாதேவி ஆகியதுதான் கவலைக் குரிய விடயம். இன்னொன்று என்னவெனில், பெரும்பாலான வடபகுதி மழலைகள் ஏன் இளவயதுக்காரர்களுக்குக் கூட இரயில் என்பது என்னவென்று தெரியாதாம்.

**ஆலமரமும் அரசமரமும்**

அரசுபோல் வேரூன்றி ஆல்போல விழுது ஊன்று என்பர்கள். அரசும் ஆலும் பால் மரங்களாயினும், ஒற்றுமை பல இருந்தும், வேற்றுமைகள் அதிகம். பெரும்பான்மையையும் சிறுபான்மையையும் குறித்துக் காட்டுவன. [illegible] இடங்களில், குறிப்பாக கட்டடங்கள் மற்றும் பனைமரங்களில் ஒட்டி வாழ்வதையும் பார்க்கலாம். பனை யைப் பொறுத்தவரை ஆலும் அரசும் வந்தேறு குடிகள்தான். இதில் ''நான் முந்தி நீ பிந்தி'' என்ற வியாக்கியானம் தான் நகைப்புக்குரியது. வரலாற்றின் கையைப் பிடித்து ஆலும் அரசும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் பனைமரம் இதில் அலட்டிக் கொ[illegible]ள வேயில்லை. அது இம்மண்ணுக்குரிய மரம். தமிழ் பேசும் மரம். இதன் சந்ததியைத் தமிழ் நாட்டில் உள்ள திருநெல் வேலி உட்பட தென்பகுதி மாவட்டங் களில் காணலாம். இங்கே தமிழ்த்தேச மும் அங்கே தமிழ் நாடும் தமிழின் அப்பா அம்மா பூமி. பனைமரம் சொன்னது இது. தான் வளர்ந்து இனம்பெருக்கி வரலாறு சொன்னதால் கண்டபடி வெட்டுண்டு காப்பரண்களாகி விட்டனவாம். விறகாகி யும் விட்டனவாம். கவலை இல்லாது எங்களூர் இளசுகள் வெட்டும்போது இந்தக் கற்பக தருவில் கொஞ்மாவது கருணை காட்டக் கூடாதா? தாயை வெட்டுவதுபோல இருக்காதா?

ஆலும் அரசும் இங்கே சமர்புரிய எங்கிருந்தோ வான்வழி வந்த காற்று புயற் காற்றாகி 'நிஷா' என்ற பெயர் கொண்டு இரண்டையும் அசைத்துச் சரித்துவிட்டுச் சென்றுவிட்டது. தன்பலம் அறியாதிருந்ததால் வந்த விளைவு இது.

அரசுக்கு விழுது ஊன்ற விறுத்தமில்லை. அதனால் தனது ஆணி வேரையும் போதாமைக்கு பக்க வேர்களையும் நம்பி நிற்கும் மரம் இது. ஆனால் இப்போதெல்லாம் (வேருக்காக) கடன் பட்டு நிற்க வேண்டியதாகிவிட்டது.

ஆலுக்கு விழுது விட வீரியமுண்டு. விழுதுகள் நிலத்தைத் தொட்டு விறைத்து விட்டால் அதன் பலமே தனி. ஒன்றிரண்டு விழுதுகளைத்தவிர ஏனைய விழுதுகள் வெளிநாடு போய்விட்ட தனால் அதன் அடிக்கு ஏது பலம்? விழுதுகளைத் தொலைதூரம் அனுப்பிவிட்டு மரங்கள் படும் பாட்டைப்பாரீர்! மரங்களுக்காக, வயதானவர்களுக்கான காப்பகங்களிலே தஞ்சமடைந்திருக்கின்றன.'மரங்களைத் தாங்க வேண்டிய இத்தருணத் தில் காசு மட்டும் அனுப்பினால் போதும் என நினைக்கும் விழுதுகளால் என்ன பலன்? விழுதுகள் அருகிலில்லாது ஆட்டம் காணுதய்யா! ஆலமரங்கள் மட்டுமல்ல இங்கே அன்பானவர் மனங்களும்தான். கண்ணதாசன் கவிதை வரிகள் தம்மை மறந்து இப்படிப் பாடியதைப் பாரீர்.

''ஆலம் விழுதுகள்போல்,
உறவு கள் ஆயிரம்
வந்துமென்ன? வேரென
நீயிருந்தாய், அதில் நான்
வீழ்ந்து விடா திருந்தேன்.....''

வீழ்ந்துவிட்டனவே! ஆச்சரியந்தான்! ஆடிப்பாடி வந்த 'நிஷா' பேய்க்காற்றில் ஆடிப்போயின் ஆலும் அரசும். விழுந்த அரசமரங்கள் பலவற்றில் ஆணிவேர் களைக் காணவில்லை. ஒரு சிலவற்றில் ஆணிவேர்கள் இருந்தும் பலமாக இருக்கவில்லை. அகன்று வளர்ந் திருந்த மரம் 'நிஷா' வின் மயக்கத்தில் ஆடத் தொடங்கியபோது நிலம் நனைந்து சகதியாகி மேடை சரியில்லாததாகியதால் நிலை குலைந்து சரிந்து விட்டது. நிழல் தந்த மரம் நிசப்தமாகிவிட்டது.

**விழுந்த மரங்கள் நினைவுச் சின்னங்கள்**

ஆண்டாண்டு காலமாக ஓங்கி வளர்ந்து நிழல் கொடுத்த அற்புதமான மரங்களெல்லாம் 'நிஷாவின்' நடனம் பார்த்து அதனுடன் சேர்ந்து ஆடி துவம்சப்பட்டுப் போயிருக்கின்றன. தேடுவோர் உடன் அருகிலில்லாததால், வசதி பார்த்து வசதியாய் வெட்டியகற்றினர் பலர். ஆனால் அவற்றை விரைந்து விறகாக்கிக் காசாக்கிக் கரியாக்காதீர்! இம்மரங்கள் எம் நினைவுகளின் சின்னங்கள். எவர் கண் பட்டதோ, அவையாகச் சரிந்து கிடக்கின்றன. ஏலம்போட்டு கழித்துவிட நினைக்காது பக்குவமாய் அதனை உக்காது பாதுகாக்க வேண்டும். மரம் விழுந்த போது பதைபதைத்த மனம், அது வேகும்போது சிதறி உடைந்து விடும். கல்லும், காசும் சிற்பங்களும் மட்டும்தான் எம் ''முதுசம்'' இல்லை. வாழ்ந்து விழுந்த இம்மாதிரியான மரங்களும் சோத்துத்தானே!

**கற்கவேண்டியவை பல**

''கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத்தக''

வள்ளுவன் சொன்னது குறளமுதமாகிக் கூீத்திக் காட்டுகிறது. குறள் தந்தவருக்குச் சிலை வைத்த செம்மல் அதனை உச்சரித்த வாயை உருக் குலைத்தவருக்கு உலை வைப்பது எப்போது? மரத்திலிருந்து கற்கவேண்டியவை பலப் பல உண்டாம்.

''மரம் வளர்த்து பொறுமையைக்கல்;
மரவிதைவிதைத்து
மானுடம் விதை;
தரம் பார்த்து
மரம் நடு.''

இன்னொரு பிறவியில் மனிதனாகப் பிறக்காவிட்டாலும் மரமாகப் பிறக்க வாவது வரம் ஒன்று கேள்.

*****




கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் இதையா சொன்னார்?

கவிதா



தமிழ் நாட்டு வீதிகளில் சுள்ளென்று எரியும் சூரியனின் வெப்பத்தைப் பேரல இலங்கையின் வீதிகளில் பயம் பரவியிருக்கிறது. கிட்டத்தட்ட எல்லா வீதிகளிலுமே பாதுகாப்பு வலையங்களுக்குள் சென்று பிரச்சினையின்றி மீள்வதற்காக மக்கள் பொறுமையோடு காத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களது அன்றாட நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. பாதுகாப்புச் சோதனை களுக்கான திட்டமிடுதலின்றி இலங்கையில் ஒரு பயணத்தை மேற்கொள்வது சாத்திய மல்ல.

இலங்கைப் பிரச்சினையை - உள்நாட்டு யுத்தத்தை, தமிழரின் துயரங்களை இந்தியாவிலிருந்து , தமிழ்நாட்டிலிருந்து பார்ப்பதற்கும் இலங்கைக்குச் சென்று நேர டியாகப் பார்ப்பதற்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்; கடத்தப்படுகின்றனர்; துன்புறுத்தப்படுகின்றனர். ஆனால் தமிழகத்தில் சித்திரிக்கப்படுவதுபோல வன்னியிலோ வட இலங்கையிலோ மட்டுமல்ல; இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாக கொழும்பிலுமே இதுதான் நிலைமை. வட இலங்கையில் போர் நடப்பதால் துன்பம் அதிகம்.

மிக அன்யோன்யமாகவும் நேசமாகவும் தெரியும் கொழும்பு வீதிகளின் மற்றொரு முகத்தை ஒரு நிருபராகப் போனால் மட்டுமே களைந்து எடுத்துக் காண முடியும் எனத் தோன்றுகிறது. கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் ஏற்பாட்டில் நான் சந்தித்த தமிழ்க் குடும்பங்களின் துயரங்களைச் சொல்லி மாளாது.

போர்நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்த 2005ஆம் ஆண்டிலிருந்து மிகச் சமீபகாலம்வரை இலங்கையில் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 3,000. கொழும்பில் மட்டும் 300 இளைஞர்கள் கடத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களில் சிலரது குடும்பங்களை அவர்கள் இலங்கையைவிட்டுக் கிளம்புவதற்கு முதல்நாள் நான் சந்திக்க நேர்ந்தது. என் தோற்றத்தை வைத்து நான் ஏதாவதொரு அதிகாரியாக இருக்கக்கூடும் என்னும் ஊகத்தில் அவர்கள் என்னிடம் கைகூப்பிக் கதறித் தங்கள் குடும்பத்து இளைஞர்களை மீட்டுத்தரும்படி கெஞ்சியதை அவ்வளவு எளிதில் மறக்க முடியாது. வாழ்வுடனான போராட்டத்தில் மரணம் என்பது ஒரே ஒரு தோல்விதான். ஆனால் மரணம் தவிர்த்த வேறு வழிகளில் தங்கள் குடும்ப வரைபடங்களிலிருந்து நீக்கப்பட்டவர்களின் நினைவுகளோடு இருப்பதிலும் மீட்கப் போராடுவதிலும் வாழ்க்கை அவர்களை மீண்டும் மீண்டும் தோற்கடித்துக்கொண்டேயிருக்கிறது.

வெள்ளை வான் கடத்தல்கள் எனப் பரவலாக அறியப்படும் இக்கடத்தலை யார் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால், தலைநகர் கொழும்பில் பாதுகாப்புச் சோதனைகள் பலவற்றை மீறி நடைபெறும் இக் கடத்தல்களுக்கு அரசின் ஆதரவு இருக்கிறது என்னும் தமிழ்த் தலைவர்களின் குற்றச்சாட்டுகளை நம்பாமல் இருக்க முடியவில்லை. அந்த இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு இருக்கலாம் என்றுதான் அவர்கள் கடத்தப்படுகிறார்கள் என்கிறார்கள் தமிழ்த் தலைவர்கள். பல நேரங்களில் கடத்தப்பட்டவர்கள் திரும்புவதில்லை. அதிர்ஷ்டவசமாகத் திரும்புபவர்கள் அதற்குக் கொடுக்க வேண்டிய விலை, சில லட்சம் பணம், 24 மணி நேரத்துக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம். பணம் கொடுக்க முடியாததாலும் நாட்டை விட்டு வெளியேறும் அளவுக்குப் பணம் இல்லாததாலும் மீள முடியாமல் சாவின் நுனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் அதிகம். தமிழ் பேசும் ஓர் இளைஞனாய் இலங்கையில் இருப்பது சாபம்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு பிரபல ஹோட்டலின் கிளை கொழும்பில் இருக்கிறது. அந்தக் கிளையின் மேலாளருக்குக் கிட்டத்தட்ட சென்னையில் பணிபுரியும் ஊழியர்களின் அளவுக்குச் சம் பளமும் சலுகைகளும் உண்டு.

இரண்டுக்குமே பேர்போனது அந்த ஹோட்டல் நிர்வாகம். இருந்தும் மேலாளர் கனடாவுக்குப் போவதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறார். நான் அங்கே தங்கியிருந்த பத்து நாட்களில் ஏற்பட்ட பரிச்சயத்தில் அவர் கனடா போவது பற்றிப் பகிர்ந்துகொண்டார். ''இங்கே சம்பளம், சலுகைகள் எல்லாம் கிடைப்பது உண்மைதான். ஆனால், வாழ்தல் பற்றிய பயம் இருக்கிறது. இப்போது எதுவும் நடக்கவில்லை. ஆனால், எப்போது வேண்டு மானாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்''- என்றார்.

உண்மை பேசும், உண்மை பேச வேண்டிய ஊடகவியலாளர்களின் நிலைமையும் இலங்கையில் மோசம். ஓர் ஊடகவியலாளராகப் பணிபுரிய மிக ஆபத்தான நாடுகள் என்று உலக அளவில் அறிவிக்கப்பட்டிருக்கும் நான்கு நாடுகளில் இலங்கையும் ஒன்று. 2005 இலிருந்து கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை 16. பெரும்பாலானவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள். நான் சந்திக்க நேர்ந்த ஒரு தமிழ் ஊடகவியலாளர் தனது வீட்டுக்கும் அலுவலகத்துக்குமிடையில் உள்ள மூன்று கிலோமீட்டர் தொலைவைக் கடக்க 18 வழிகள் வைத்திருக்கிறார். வாழ்தல் சார்ந்த பயங்கள். வேறொரு தமிழ் ஊடகவியலாளர் கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக அலுவலகத்திலேயே தங்கியிருக்கிறார். அலு வலகத்தை விட்டு வெளியேறினால் அவரது உயிருக்கு உத்தரவாதம் இல்லை. கணக்கற்ற ஊடகவியலாளர்கள் தங்களது கருத்துச் சுதந்திரத்தின் பொருட்டு கைதுசெய்யப் பட்டிருக்கின்றனர். ஒரு சிலர் இன்னும் சிறையிலேயே இருக்கின்றனர். ஊடக சுதந்திரம் அங்கே மருந்துக்கும் இல்லை. ஊடகவியலாளர்கள் கொல்லப் படுவதிலும் காணாமற்போவதிலும் அரசு கவனம் செலுத்தாததாலேயே விசாரணை நடத்தாததாலேயே இம்மாதிரி சம்ப வங்களில் அரசுக்கு இருக்கக்கூடிய பங்களிப்பும் மிக முக்கியமானது.

பத்து நாள் இலங்கைப் பயணத்தில் நான் பலதரப்பட்ட மனிதர்களைச் சந்திக்க நேர்ந்தது. ஒட்டோ ஓட்டுநர் ஒருவருடைய தாய் தமிழர்; தந்தை சிங்களர். ''சகஜமாகத் தமிழ் பேசத் தெரியும். ஆனால் பேசமாட்டேன். என் தந்தை சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் என்பதுதான் என் பாதுகாப்பு'' - என்றார். ஒரு வெளிநாட்டுச் செய்தியாளராக மிக வெளிப் படையாக நான் உணர்ந்த ஒரு விஷயம், கொழும்பில் எல்லாத் தமிழர்களும் சிங்களம் பேசுகிறார்கள். தமிழர்களாக அங்கு இருப்பதே பாதுகாப் பற்றது என்னும் நிலையில் அவர்கள் சிங்களம் கற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், சிங்களவர்களில் பெரும்பாலானோருக்குத் தமிழ் தெரிவதில்லை.

கொழும்பு தவிர கிழக்கு மாகாணத்துக்குப் போக மட்டுமே எனக்கு அரசிடமிருந்து அனுமதி கிடைத்தது. கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டும் யாழ்ப்பாணம் உள்பட வேறு எங்கும் போக முடியவில்லை. அப்போதுதான் யாழ்ப்பாணத்துக்குப் போக முயன்ற இன்னொரு குடும்பம் பற்றிக் கேள்விப்பட்டேன். நான் தங்கியிருந்த விடுதியிலேயே அந்தக் குடும்பமும் தங்கியிருந்தது. பெற்றோருக்கு லண்டன் பாஸ்போர்ட் என்பதால் யாழ்ப்பாணத்துக்குப் போக அந்தீக்குடும்பத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மகள் மட்டும் இலங்கை பாஸ்போர்ட் வைத்திருந்ததால் சென்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஹோட்டல் ஊழியர் ஒருவர் சொன்னார்: ''வெளிநாட்டு பாஸ் போர்ட் வைத்திருப்பவர்களுக்கு ஏதாவது ஆபத்து என்றால் உங்கள் அரசுகள் உலுக்கி எடுத்து விடும்.

இங் குள்ள தமிழர்களின் நிலை அப்படியல்ல, நாய் போலச் சுடப்பட்டாலும் எங்களுக்காகக் குரல் கொடுக்க யார் இருக்கிறாகள்?''

தமிழ்த் தலைவர்களைத் தாண்டி சாதாரண தமிழர்களுக்குக்கூட இந்தியாவின் மீதும் தமிழகத்தின் மீது முள்ள நம்பிக்கையும் அன்பும் அசாதாரணமானவை. நான் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறேன் எனத் தெரிந்ததும் என்னிடம் பணம் வாங்க மறுத்துவிட்டார் தமிழ் ஒட்டோ ஓட்டுநர் ஒருவர். நாங்கள் வேறு எப்படி நன்றி சொல்ல என்று அவர் கேட்ட மிகச் சிறிய கேள்வியில் எனது பயணத்தின் சுமை மிக அதிகமாகக் கூடிப்போனது. அவருக்குச் சொல்ல என்னிடம் எந்த நம்பிக்கை வார்த்தைகளும் இல்லை. தமிழ்நாட்டில் நடப்பது வெறும் அரசியல் தான் என்று எப்படிச் சொல்ல?



மிகவும் வருத்தத்துக்குரியது நல்லவர்களின் மௌனம்தான் என்றார் மார்ட்டின் லூதர் கிங். அதை இலங்கையில் நேரடியாக உணரும் வாய்ப்புக் கிடைத்தது. பணி நிமித்தம் பலதரப்பட்ட ஊடகவியலாளர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்களுள் சிங்களப் பத்திரிகையாளர்களும் இருந்தார்கள். பொதுவாக அவர்கள் தமிழர்களின் நிலை குறித்து அனுதாபத்தோடும் இலங்கையில் நிலவும் சூழல் பற்றிய கவலையோடும் இருந்தார்கள். ஆனால் அதையெல்லாம் [illegible] ஆங்கிலப் பத்திரிகையாளர் ஒருவருக்கு தமிழகத்தில் நடக்கும் போராட்டங்கள் பற்றிப் பயங்கரக் கோபம் இருந்தது. அந்தப் போராட்டங்களினால் எதுவும நடக்கப்போவதில்லை என்று தெரிந்தபோதிலும் இந்தியா தலையிட வேண்டும் என எப்படி நீங்கள் கேட்கலாமென என்னிடம் தொடர்ந்து வாதாடிக்கொண்டிருந்தார்.

''எங்கள் நாட்டில் நடப்பது அநியாயம்தான். ஆனால், அதற்காக நீங்கள் எப்படி எங்கள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட முடியும்? உங்கள் நாட்டில் மும்பைக் கலவரங்களுக்குப் பிறகு இஸ்லாமியர்கள் மோசமாக நடத்தப் பட்டால் பிற இஸ்லாமிய நாடுகளைத் தலையிட அனுமதிப்பீர்களா?'' என்று கோபமாகக் கேட்டார்.

''அப்படி ஒரு விஷயம் இந்தியாவில் நடந்தால்- அதை எங்கள் நாட்டுக்குள் எதிர்க்க முடியாத நிலை இருந்தால் - இஸ்லாமியர்களுக்காகப் பிற நாடுகள் குரல் கொடுப்பதில் ஒரு மனிதாபிமானி என்னும் அடிப்படையில் எனக்கு ஆட்சேபனை இருக்காது'' எனச் சொன்னேன். அவருக்கு விளங்கவில்லை, ''இங்கே சிங்களர்களும் கொல்லப்படுகிறார்கள் தெரியுமா?'' என்றார். தமிழராக இருப்பதாலேயே ''தமிழர்கள் கொல்லப்படுவதற்கும் சிங்களர்கள் கொல்லப்படுவதற்கும் வித்தியாசம் இல்லையா?'' என்று நான் கேட்டபோது அவரிடம் பதில் இல்லை. ''என்ன இருந்தாலும் இது எங்கள் உள்நாட்டு விவகாரம்'' என்று மீண்டும் வலியுறுத்தினார்.

''இந் தியா தலையிட வேண்டுமென்பது எங்கள் நாட்டுத் தமிழர்களின் விருப்பம் தான். ஆனால், குவியல் குவியலாகச் செத்துக் கொண்டிருக்கும் உங்கள் நாட்டுத் தமிழர்களுக்கு அது விருப்பம் மட்டுமல்ல, வாழ்வியல் பிரச்சினை. முதலில் அது அவர்களின் கோரிக்கை. பிறகு எப்படி அது உள்நாட்டுப் பிரச்சினையாகும்?'' என்று நான் கேட்ட பிறகு அவர் அமைதியானார். எனக்குத் தெரியும், இப்போதும் அவருக்கு இந்தியா தலையிடக் கூடிய நிலை பற்றி வருத்தங்களும் கோபங்களும் இருக்கும் என்று. அவர் இத்தனைக்கும் தமிழர்களுக்கு ஆதரவான பத்திரிகையாளராக அறியப்பட்டவர். அழிக் கப்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் இனத்தைவிட நாட்டின் இறையாண்மை முக்கியம் என அவரைப் போலப் பல சிங்கள இளைஞர்களும் நினைக்கக்கூடும்.

இந்தியா உலகுக்கு அளித்த மிகப் பெரிய கொடைபௌத்தம். பெரிய அளவில் இந்தியாவில் அது செழித்து வளராவிட்டாலும் தலித்துகள் போன்ற ஒடுக்கப்பட்டவர்களின் புகலிடமாக அது இருப்பதற்குக் காரணம், அது வலியுறுத்தும் தத்துவங்களான அன்பும் அகிம்சையும்தான். ஆனால், இலங்கையில் போரை ஆதரிப்பவர்களில் முக்கியமானவர்கள் பௌத்த பிக்குகள். தீவிர இனஉணர்வுகொண்ட பௌத்த பிக்கு ஒருவரைச் சந்தித்தால் என்ன என்று நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார். அத்தகைய சந்திப்பு நடக்காமல் போனதற்குக் காரணம் நேரமின்மை அத்துடன் என்னுடைய தயக்கமும்கூட... உங்கள் புத்தர் இதையா சொன்னார்? என அவரிடம் எப்படிக் கேட்பது?

*(நன்றி: தமிழ்நாதம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவில் திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

## முப்பத்து மூன்று குண்ட அதியுயர் மஹாயாக புனராவர்த்தன ஸ்வர்ண பந்தன பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேகச் சிறப்பு மலர் - 01.02.2009



தைமாதம் 19ஆம் நாள் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை இராஜகோபுரம் - காலை 7.26 மணி
மஹாகும்பாபிஷேகம் - காலை 8.15 மணி கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆசியுரை வழங்கப்படும்.
உச்சிக்காலப் பூஜையைத் தொடர்ந்து அன்னதானமும், மாலை 4.30 பூஜையைத் தொடர்ந்து
பஞ்சமூர்த்திகள் வீதியுலாவும் இடம்பெறும்.



*மாலை 6.30 மணிக்குக் கும்பாபிஷேகச் சிறப்புமலர், திருநெறியதமிழ்மறைக் கழகத்தினரால் வெளியிடப்படுகிறது.*





## பிரதமகுருவின் ஆசிச்செய்தி




ஓங்காரப் பொருளாக, பிரணவ வடிவாக இருந்து ஞான அருளையும் நலவாழ்வையும் அடியவர்களுக்கு அகத்தேயும், புறத்தேயும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் எங்கள் குல தெய்வம் பரராஜசேகர விநாயகனுக்கு இன்று குடமுழுக்கு நன்நாள் ஆகும். இத்திருநாளில் ஆலயம் புனரமைக்கப்பட்டுப் புதுப் பொலிவுடன் அழகுக்கலை ததும்பப் பர்ணமிக்கின்றது.

இன்று நீங்கள் எல்லோரும் மன்னர்கள், அரசர்கள், இராஜாக்கள். ஆம், அந்தக் காலத்தில் கோபுரங்கள் கட்டுதற்கும், கோயில்கள் அமைப்பதற்கும் அரசர்களால் மாத்திரமே முடியக்கூடிய காரியமாக இருந்தது. இன்று இவைகள் எல்லாம் உங்களால் நிறைவேறியுள்ளது. இது எம்பெருமானாகிய ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் மீது நீங்கள் கொண்ட பற்றினதும், பக்தியினதும் வெளிபபாடாகும். இப்புனித கைங்கரியம் நிறைவேற நீங்கள் எல்லோரும் மனமுவந்து வழங்கிய ஆதரவே காரணம். நீங்கள் யாவரும் எல்லாச் செல்வங்களும் வளம் பெறப் பெற்று நீடூழி வாழவேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் பாதம் போற்றி வேண்டுகின்றேன்.

அன்று எங்கள் கோயில் மூலஸ்தானம் முதல் கொடிஸ்தம்பம் வரை வைரக்கல்லால் கட்டிய கற்கோயில் இருந்தது. அன்றைய மக்கள் தாம் மண் குடிசையில் வாழ்ந்துகொண்டு இறைவனுக்கு கற்கோயில் கட்டி வணங்கி வந்தனர். இன்று எல்லோரும் வளம் பெற்று வசதிகளோடு வாழ்ந்து வருகிறார்கள். இப்படியெல்லாம் வாழ்கின்ற நாம் நம்மை வாழவைத்த இறைவனுக்கு மாத்திரம் எப்படித் திருப்பணிகளை செய்ய முடியாமல் இருக்கமுடியும்? அதனால் இத்திருப்பணியை அடியார்கள் எல்லோருமே முன்னின்று நடத்தி முடித்திருக்கின்றார்கள்.

குடமுழுக்கு நடைபெறும் புனித நன்நாளிலே விநாயகன் என்றுமே அடியவர்களது இடர் களைந்து நல்ல சுபீட்சத்தையும், எதிர்காலத்தையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு, திருநெறிய தமிழ்மறைக் கழகத்தின் மலர் சிறக்கவும் பிரார்த்திக்கிறேன்.

*சிவஸ்ரீ.வை.சோமாஸ்கந்தக்குருக்கள்,*
*பிரதமகுரு,*
*இணுவில் ஸ்ரீ*
*பரராஜசேகரப்பிள்ளையார்*
*திருக்கோவில்.*



## மஹாகும்பாபிஷேகம் காணும் பரராஜசேகரப்பிள்ளையார்

இணுவையம் பதியிலே கோவில்கொண்டு எழுந்தருளிய பரராஜசேகரன் ஆலயத்தில் மட்டுமல்ல ஊர் வாழும் அடியவர்களின் உள்ளத்திலேயும் உறைந்திருந்து, அருளொளி கொடுப்பதோடு நின்றுவிடாது, செல்வச்செழிப்பையும், கல்விவளத்தையும், பொருளாதாரத்தையும், அற ஒழுக்கங்களையும் அள்ளி வழங்குகின்றான்.

*'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'* என்ற குறளுக்கு இணங்க இக கோயிலின் தன்மையை வரலாற்று ரீதியாக அறியமுடியாவிட்டாலும் இதன் பூர்வீகம் பரராஜசேகர மன்னனால் பூசிக்கப்பட்ட பெருமைக்குரியது. இதன் பின்பு போர்த்துக்கீசர் காலத்தில் மடம் என வாதிட்டு கோவிலை பாதுகாத்துக் கொண்டதால் மடத்துவாசல் பிள்ளையார் எனப் பெயர் பெற்றது. இது ஈழத்து பிரசித்தி பெற்ற அருள் தலங்களில் பழைமையும், புதுமையும், சாந்நித்தியமும் பொருந்தியதாகும். இவ்வாறாக படிப்படியாக வளர்ச்சிபெற்று இன்று நாற்றிசையும் கோபுரங்களுடன் அழகிய சிற்ப ஓவிய வர்ண வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கின்றது. இதற்குக் காரணம் அடியவர்களின் கூட்டுறவுமனப்பான்மையும், வேற்றுமையில் ஒற்றுமைகாணும் உயரிய பண்புமே ஆகும். இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் காலத்திற்கு காலம் புதுப்பிக்கப்பட்டு ஆகம விதிப்படி பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை கும்பாபிஷேகம் நடைபெற்று வந்துள்ளது. 1928ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்தவேலைகள் நடைபெற்று 1939ஆம் ஆண்டும் அதன் பின் 1961ஆம் ஆண்டு தை மாதம் 9ஆம திகதியும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1972ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப் பெற்ற இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 1983ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 1984ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி திங்கட்கிழமை அடுத்த கும்பாபிஷேகமும், 09.02.1997ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை 33 குண்ட மஹாயாக கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றன. அந்தவகையில் பன்னிரண்டு கால வருட இடைவெளியில் மீண்டும் 2008ஆம் ஆண்டு ஆவணி மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2009ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

காலங்காலமாய் நடைபெற்ற ஒவ்வொரு கும்பாபிஷேகங்களின் போதும் கோவிலில் வெவ்வேறு வகையான சிறப்பம்சங்கள் இடம்பெற்று வந்துள்ளது வழமையாகும். அந்த வகையில் இவ்வருடமும் கோயிலின் மேற்குவீதியில் ஐந்து தளங்களை கொண்ட ஒரு கோபுரமும், வடக்கே பஞ்சமுக விநாயகர் ஆலயத்திற்கான புதிய ஒரு வாசலுடன கூடிய ஐந்து தளங்களை கொண்ட இன்னுமொரு கோபுரமும், அமைந்துள்ளது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட ஜலகண்ட கணபதி, கோவிலின் வடக்கு வீதியில் புதிதாக அமையப்பெற்ற தாமரை வடிவான சிறிய கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வைரவர் எழுந்தருளி விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. நான்கு திசைகளும் அழகிய சிற்ப வேலைகளுடன் கூடிய வானளாவிய கோபுரங்கள் தெய்வீக அருள் சுரந்து காட்சி தருகின்றன.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் இன்று சரியாக காலை 08.15மணிக்கு சுபமுகூர்த்தவேளையில் உத்தமோத்தமருத்திரசூத்திர யாகசாலையில் 33 குண்டலங்களிலும் திக்கெட்டும் திருவருள் பொழிய வேண்டித் திருமறையுடன் திருமுறைகளும் ஓதி, அபி சொரிந்து, ஆகுதி செய்து, வேத கீத தோத்திர சங்க மங்கல வாத்திய கோஷங்களுடன், மகா கலச தீர்த்தங்களினால் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. 24.01.2009 வெள்ளிக்கிழமை அதிகாலைவேளையில் குருஹோறையில் கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்த கும்பாபிஷேக கிரியைகள் இன்றைய தினம் நிறைவுபெறுகின்றது. கும்பாபிஷேகம் ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகைப்படும். இவற்றுள் புனராவர்த்தனம் என்பது கர்ப்பகிரகம், விமானம் முதலான கோவிலின் கட்டடங்களை புதுப்பித்து விமானம் கோபுரம் போன்றவற்றிற்கு வர்ணப்பூச்சு மேற்கொண்டு அஷ்டபந்தனம் ஸ்வர்ண பந்தனம் சாற்றி கும்பாபிஷேகம் செய்வதாகும்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தமது திருக்கரங்களிலே பாசம், அங்குசம், தந்தம், மோதகம், கும்பம் என்பன தாங்கியுள்ளனர். மேலே உள்ள வலக்கரம் அங்குசத்தையும், இடக்கரம் பாசத்தையும், கீழே உள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும், இடக்கரம் மோதகத்தையும், தும்பிக்கை கும்பத்தையும் தாங்கியுள்ளன. பிரணவ சொரூபத்தை இந்த விநாயகப் பெருமானை தினமும் வழிபாடு செய்து வந்தவர்கள். கஷ்ரங்கள், துயரங்கள் நீங்கப் பெற்று நல்வாழ்வு பெற்றார்கள். அவரது கருணை அளவிற்கரியது. அவரது பாதாரவிந்தங்களைப் பற்றியோரின் வாழ்வு செழித்தது. அவரது திருக்கோவிலில் தொண்டு புரிந்தோரெல்லாம் பல முன்னேற்றங்களை கண்டு நிறைந்த வாழ்வு கண்டார்கள்.

உழவாரப்படைகொண்டு சரியை வழியை கடைப்பிடித்த அப்பர் சுவாமிகள் வழியில், ஆண்டவனை அடையும இலகுமார்க்கமான தொண்டுகளை இறைவனுக்காக செய்யும் அடியார் கூட்டம், இங்கு ஆரம்பம் முதலே ஏராளம். நெற்றிவியர்வை சிந்தி கோவில் அமைத்து, கோபுரம் அமைத்து, கிணறுவெட்டி முன்னோர் காட்டிய திருப்பணிகளை தொடர்வதையே சித்தமாக கொண்ட தொண்டர் குழாம் ஒன்று தங்கள் கரசேவையை இக்கோவிலுக்காக எம்பெருமான் பாதங்களில் வைத்து வழிபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் செய்யப்படும் மகேஸ்வரர் பூசை கிரமமாக நடைபெறுகின்றது. உற் சவ காலங்கிளில் பன்னிரண்டு தினங்களும் மதியம் அன்னதானம் வழங்கும் சிறந்த ஒரு பணி முன்னெடுக்கப் படுகின்றது. வெள்ளிக்கிழமை மற்றும் விசேட தினங்களின்போதெல்லாம் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை பாடு தல், பஞ்சபுராணம் ஓதுதல் போன்றனவெல்லாம் தொன்றுதொட்டே தொடர்ச்சியாக செய்யப்பட்டுவரும் சிறந்த பணிகளாகும். கந்தபுராணப் படிப்பு, விநாயகர் கதைப் படிப்பு, பெரியபுராணப் படிப்பு, திருவெம்பாவை, திருவாச கம் முற்றோதுதல் போன்ற இறைதொண்டுகளும் காலம்காலமாக இங்கு செய்யப்பட்டுவருகின்றன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இணுவில் அருள்மிகு ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 08.15 மணிக்கு வரும் சுபமுகூர்த்த நல்வேளையில், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோம அரவிந்தக்குருக்கள் அவர்கள் தலைமையில் நூற்றுக்கணக்கான சிவாச்சாரியார்களின் அனுசரணையுடன் சிறப்பாக நடைபெறுகிறது. இன்றைய புண்ணிய கைங்கரியம் இடம்பெறும் இந்த நன்நாளிலே எமது கிராமம் மேன்மேலும் சிறக்கவும், நாடு நலம்பெற்று, அமைதியும், சாந்தி சமாதானம் நிறைந்து அனைத்து மக்களும் எல்லா ஜீவராசிகளும் நலம் பெறவும் எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரைத் துதிப்போமாக.

*விநாயக அடியார்கள்.*

## ஆதீனமுதல்வரின் ஆசிச்செய்தி

புனித பிரதேசமான இணுவில் பதியில் நீண்டகாலமாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையாருக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். வரலாற்று பெருமைமிக்க பரராஜசேகர மன்னனால் பூசிக்கப்பட்ட ஆலயமாக இது விளங்குவதில் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. விநாயக வழிபாடு அனைத்து மக்களாலும் போற்றி வழிபடப்படுகின்ற வழிபாடாகும். இணுவில் பிரதேசம் இசையும் கலையும் தமிழும் சமயமும் பண்பாட்டுக் கலாசார விழுமியங்களும் வளர்ந்து வரும் இப்பிரதேசத்தில் நிறைவான பல ஆலயங்களைக் கொண்டும் கற்றவர்களும், கற்றபடி ஒழுகுபவர்களைக் கொண்டும் விளங்கும் இணுவில்பதி ஏனைய பிரதேச மக்களுக்கு எடுததுக்காட்டாக விளங்குகின்றது. இங்கு நடைபெறும் கும்பாபிஷேகம் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வையும் மன அமைதியையும் நாட்டில் சந்தோஷமான செய்தியையும் இறைவன் தந்தருளவேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இக்கும்பாபிஷேக மலரை வெளியிடும் திருநெறிய தமிழ்மறைக்கழகத்தினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இக்கும்பாபிஷேகத்தை அனைவரும் வழிபாடு செய்து மணணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த*
*பரமாசார்ய சுவாமிகள*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன*
*இரண்டாவது குருமஹா சந்நிதானம்.*

## வாழ்த்துச் செய்தி

அருள்மிகு இணுவில் ஸ்ரீ பரராஜசேகர விநாயகப் பெருமானின் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதற்குக் கிடைத்த பாக்கியத்தை நினைத்து மட்டற்ற பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன். எமது குலதெய்வமான விநாயகப் பெருமானின் அருளால் எம்மூர் மக்கள் வாழ்க்கையில் ஏற்றம் கண்டு வருவதை உணர்ந்து நாம் மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருக்கின்றோம். சைவமும் தமிழும் செழித்து வளரும் இணுவில்பதி சமய வாழ்விற்கும் ஒழுகத்திற்கும் பெயர் பெற்றதாகும். அத்தகைய ஊரின் பெருமைக்கும், வரலாற்றுச் சிறப்பிற்கும அடிநாதமாக அமைந்திருப்பது எமது ஆலயம் எனக் கூறினால் அது மிகையாகாது. இன்றும் பரிபாலன சபையோ அன்றி வேறேனும் நிர்வாகக் கட்டமைப்புக்களோ எதுவுமின்றி முழுமையான மக்களின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும ஆலயம் இதுவெனக் கூறினால் அது மிகையாகாது. இவ்வருடத்தைய கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு ஆலயத்தில் இடம்பெற்றுவரும் திருப்பணிகள் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளன. மேற்குப்புறம், வடக்குப்புறம் என்பவற்றில் இருவாயில்கள் ஏற்படுத்தப்பட்டு இரண்டு பிரமாண்டமான கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பது ஆலயத்திற்கு புதுப்பொலிவூட்டுவதாக அமைந்துள்ளன. அதுமட்டுமன்றி ஆலயக் கட்டமைப்புக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் எல்லாத் திருப்பணிகளும் ஆலயத்தின் தோற்றத்தை இந்திரலோகம் போல் மாற்றிவிட்டது எனக் கூறினால் அது மிகையாகாது. இத்தகைய பணிகளுக்கு முன்னின்று உழைத்த சிவாச்சாரியார்களும், பெரியார்களும், பொதுமக்களும், இளைஞர்களும் பாராட்டப்படவேண்டியவர்களாவர்.

விநாயக அடியார்களினது ஒத்துழைப்பு டன் இடம்பெறும் ஆலய புனரமைப்பும் கும்பாபிஷேகமும் சிறப்பாக இடம்பெற எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகர விநாயகனின் பாதங்களை இறைஞ்சுவதுடன் அன்றைய தினம் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலர் சிறப்பாக வெளிவர எல்லாம்வல்ல பரம்பொருளின் துணையை நாடி நிற்கின்றேன்.

*க.தேவராசா, போசகர்,*
*திருநெறிய தமிழ்மறைக்கழகம்.*
*பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் மஹாகும்பாபிஷேக மலர் சிறக்க வாழ்த்துவோர்:

1. *அண்ணா கோப்பி,* இணுவில்.
2. *ஐங்கரன் இன்ரநஷனல்,* லண்டன்.
3. **ES Mart**, கொழும்பு.
4. **Oriolesys**, கனடா
5. *சாந்தி புடைவை அகம்,* யாழ்ப்பாணம்
6. *சக்திவேல் ஹாட்வெயர்,* இணுவில்.
7. *பெஷன் ஹவுஸ்,* யாழ்ப்பாணம்.
8. *கஜசங்கவி சென்டர் & பிறின்டர்ஸ்,* யாழ்ப்பாணம்.
9. *கஜமுகன் ஹாட்வெயர்,* யாழ்ப்பாணம்
10. *குகன் ஸ்ரோர்ஸ்,* யாழ்ப்பாணம்.
11. *ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்,* யாழ்ப்பாணம்.
12. *வேணி களஞ்சியம்,* யாழ்ப்பாணம்
13. **K.R.S** *உற்பத்திப் பொருள்கள்,* கோண்டாவில்.
14. GISO Construction, இணுவில்.
15. Denshi Photo, கொழும்பு.
16. *இளவரசி சேலைச் சோலை,* யாழ்ப்பாணம்.
17. *அம்பிகாபதி, அம்பிகை அழகு மாடம,* யாழ்ப்பாணம், இணுவில்.
18. *நாதன் அன் பிரதர்,* இணுவில்
19. *சிந்தூரம் சுப்பர் மார்க்கட்;* இணுவில்.
20. *ஸ்ரீக்குமரன் ஹாட்வெயார்,* யாழ்ப்பாணம்
21. சாயி நகைத்தொழிலகம், பல்பொருள் விற்பனை நிலையம், இணுவில்.
22. *துரை தச்சுத்தொழிலகம்,* தாவடி
23. *ஆனந்தன் கட்டிடப்பொருள்கள் விற்பனை நிலையம்,* இணுவில்.
24. *சுந்தர்சன்,* மானிப்பாய்
25. **Profitable Construction**, இணுவில்
26. *Unique வீடியோ,* இணுவில்
27. **COC** *கணினிக் கல்லூரி,* இணுவில
28. *கணபதி மருந்து வியாபாரம்,* கோண்டாவில்.
29. *ஐங்கரன் பந்தல் சேவை,* இணுவில்
30. Multi oil Industries Ltd, இணுவில்
31. *லிங்கம் ஸ்ரோர்ஸ்,* இணுவில்
32. *ஐங்கரன் ஸ்ரோர்ஸ்,* தாவடி
33. *அருணகிரி ஸ்ரோர்ஸ், & மல்ரி ஸ்பொட்,* இணுவில
34. *விஷ்ணு வீடியோ விஷன், லிங்கம் கொமினிக்கேஷன்,* இணுவில்.
35. *சந்தோஷ் கிறீம் ஹவுஸ்,* இணுவில்.
36. *ஐங்கரன் பான்சி,* சுன்னாகம்
37. *சீமாட்டி புடைவைக் கடல்,* யாழ்ப்பாணம்.
38. *லக்சுமி இரும்பகம்,* கோண்டாவில்
39. *சிறி ஐங்கரன் வெதுப்பகம்,* இணுவில்
40. *கார்த்திக் பந்தல் சேவை,* கோண்டாவில்
41. **Andra Digital Images & Printers,** Kondavil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்குகளில்




# மியன்டாட் பதவி விலகினார்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இயக்குநர் பொறுப்பிலிருந்து ஜாவிட் மியன்டாட் விலகுவதாக அறிவித்துள்ளார். எப்போதும் உள்நாட்டு கிரிக்கெட் தொடர்பாகவே பொறுப்புகள் தன்னிடம் ஒப்படைக்கப்படுவதாகவும், மற்றப்படி பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முக்கிய தீர்மானங்களில் தன்னை ஆலோசிப்பதில்லை என்றும் குற்றஞ்சாட்டிப் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதனால் தன்னுடைய பணி என்ன என்பதைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சரியாக விளக்காததோடு, உள்நாட்டுக் கிரிக்கெட்டை மட்டும் கவனிக்குமாறு அறிவுறுத்தியது குறித்து தனக்கு எந்தவித திருப்தியும் ஏற்படவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் அணித் தலைமை பொறுப்பில் இருந்து மலிக்கை விலக்கி யுனிஸ்கானை நியமித்தது குறித்தும் மியாண்டாடிற்கு திருப்தி இல்லை என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.★



# சாதனை நாயகன் சனத்!



சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக வயதில் சதத்தைப் பெற்று இலங்கை அணியின் நட்சத்திர ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரிய சாதனை படைத்துள்ளார்.

தம்புள்ளவில் கடந்த புதன்கிழமை இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியில் சனத் ஜெயசூரிய 107 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

39 வயது 212 நாள்களுடைய சனத் ஜெயசூரிய புதன்கிழமை ஒருநாள் போட்டியில் பெற்றுக் கொண்ட சதமே. உலகில் வயது முதிர்ந்த வீரரொருவர் பெற்றுக் கொண்ட சதமாகக் கருதப்படுகிறது.

1979 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி இங்கிலாந்து அணியின் டேவிட் ஹவாரினால் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக நிகழ்த்தியிருந்த சாதனையையே சனத் ஜெயசூரிய முறியடித்துள்ளார்.

மேலும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 13000 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட இரண்டாவது வீரர் என்ற பெருமையும் சனத் ஜெயசூரிய பெற்றுக்கொண்டார்.★

# விருது பெறுகிறார் மைக்கல் பெல்ப்ஸ்



அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ், கடந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருதைப் பெறுகிறார். அமெரிக்க ஒலிம்பிக் குழு 2008 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான விருதுகளை அறிவித்துள்ளது. இதன்படி சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் பதக்க சாதனை நிகழ்த்திய மைக்கல் பெல்ப்ஸ் பெறுகிறார். சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான விருதுகளை ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை நாஸ்டியா லியூகினும், நீச்சல் வீராங்கனை நடாலி கவுலினும் பெறுகின்றனர். சிறந்த பாராலிம்பியன் வீரர் விருதை எரின் போபோவிச் பெறுகிறார். சிறந்த அணிக்கான விருதை அமெரிக்க கரப்பந்தாட்ட அணி பெற்றுக் கொள்கிறது.★

# டேவிட் பெக்காமின் சொத்து மதிப்பு 125 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ்



இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் டேவிட் பொக்கம் செல்வந்த வீரர்கள் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்கிலாந்து அணியின் நட்சத்திரக் கால்பந்தாட்ட வீரர் டேவிட் பொக்கமின் சொத்து மதிப்பு 125 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் எனக் குறிப்பிடப்படுகிறது.

இங்கிலாந்து அணியின் மைக்கல் ஓவன் இரண்டாம் இடத்தையும் வெய்ன் ரூனி மூன்றாம் இடத்தையும் வகிக்கின்றனர்.

மைக்கல் ஓவனின் சொத்து மதிப்பீடு 40 - மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் எனவும், வெய்ன் ரூனின்சொத்து மதிப்பீடு 35-மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழக உரிமையாளர்களில் அதிக செல்வம் ஈட்டுபவராக மான்செஸ்டர் சிற்றி கழக உரிமையாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மான்செஸ்டர் சிற்றி கழகத்தின் உரிமையாளர் சேக் மன்சூர் பின் அல் நயான் முதலிடத்தை வகிக்கின்றார்.

இதுவரை காலமும் செல்வந்தர் பட்டியலில் முதலிடத்தை வகித்த செல்சா கழகத்தின் ரோமன் அப்ரமோவிச் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

38 வயதான சேக் மன்சூரின் சொத்து மதிப்பீடு சுமார் 15-பில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.★

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக யுனிஸ்கான்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி யின் தலைவராக இருந்த சொகைப் மலிக் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக யுனிஸ்கான் நியமிக்கப்பட்டிருக்கிறார்.பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சில தினங்களுக்கு முன்பு சொந்த மண்ணில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை 1:2 என்று இழந்தது. இதில் கடைசி ஒருநாள் போட்டியில் 75 ஓட்டங்களில் சுருண்டு, 234 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மிகவும் மோசமான தோல்வியைத் தழுவியிருந்தது. இதனால், அந்த அணி மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணியின் தலைவராக கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இருந்த சொகைப் மலிக் அதிரடியாக நீக்கப்பட்டார். அவரிடம் ஆலோசித்த பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளின் கூட்டம் லாகூரில் நடந்தது. இதில் யுனிஸ்கானை தலைவராக நியமிப்பது என்று ஏக மனதாக முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட 31 வயதான யுனிஸ்கானும் அணியை வழிநடத்திச் செல்ல சம்மதம் தெரிவித்தார்.

''டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்குத் தனித்தனித் தலைவர் என்பதில் நம்பிக்கையில்லை. இரண்டுக்கும் யுனிஸ்கானே தலைவராக செயற்படுவார்'' என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ் பட் நிருபர்களிடம் கூறினார்.

2006 இல் யுனிஸ்கான் அணித்தலைவராக இருந்தபோது, இந்தியாவில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணப்போட்டியில் பாகிஸ்தான் முதல் சுற்றையே தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2007 உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் படுதோல்வியடைந்ததால் அதன் பின்னர் தலைவராகும் வாய்ப்பை யுனிஸ்கான் மறுத்தார்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






புன்னகை இளவரசி என்று பெயரெடுத்த சிநேகா தன்னுடைய அண்மைக்காலப் படங்கள் வெற்றிபெற்றதால் மகிழ்ச்சியில் இருக்கிறார். அத்தோடு இதுவரை குடும்பப் பாங்கான வேடங்களில் மட்டுமே தோன்றிவந்த சிநேகா முதல்முறையாக அதிரடியான பொலிஸ் அதிகாரி வேடத்தில் நடிக்க இருக்கிறார். விஜயசாந்தி நடித்துப் பெருவெற்றி பெற்ற 'வைஜெயந்தி ஐ.பி.எஸ்' என்ற படத்தின் மீள் பதிப்பிலேயே சிநேகா இவ்வாறு தோன்ற இருக்கிறார். நடிகை விஜயசாந்திக்குப் பெரும் புகழைக் கொடுத்ததைப் போன்று தனக்கும் இப் படம் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் என்று சிநேகா கூறிவருகின்றார்.★

# அதிரடி சிநேகா

# மீண்டும் மம்பட்டியான்



தியாகராஜன் நடித்து மாபெரும் வெற்றிபெற்ற 'மலையூர் மம்பட்டியான்' என்ற படம் திரும்பவும் தமிழில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதில் தியாகராஜன் நடித்த மம்பட்டியான் வேடத்தில் அவரின் மகன் பிரசாந்த் நடித்து வருகிறார். தியாகராஜன் கதை, திரைக்கதை, வசனம் எழுதுவதோடு படத்தை இயக்கியும் வருகிறார். கடந்த சில வருடங்களாக எந்தவொரு வெற்றிப் படத்தையும் கொடுக்காது ராசியில்லாத நடிகராக உலாவரும் பிரசாந்த் இந்தப் படத்தோடு மீண்டும் முன்னணி நாயகனாக வருவார் என ஆருடம் கூறுகிறார் தியாகராஜன்.*

நவ்தீப், அரவிந்த்,மோனிகா, சரண்யா மோகன் என்னும் இளைய நட்சத்திரங்களின் நடிப்பில், சபாபதியின் இயக்கத்தில் வந்திருக்கிறது 'அ ஆ இ ஈ' என்ற படம். கிராமத்தில் மரியாதைக்குரியவரான பிரபுவின் தங்கை மோனிக்காவுக்கு அரவிந்தை நிச்சயம் செய்கிறார்கள். ஆனால் மோனிக்காவோ நகரத்தில் இருக்கும் நவ்தீப்பை விரும்புகிறார். அதேசமயம் சரண்யா மோகன் அரவிந்தின் மீது ஆசைப்படுகிறார். இவ்வாறான காதல் சிக்கல்களுக்கு என்ன நடந்தது என்பதைச் சுவாரசியமாக, இளமைத் துள்ளலுடன் சொல்கிறது 'அ ஆ இ ஈ'. படம் முழுவதும் வளர்ந்து வரும் இளம் நடிகர்களே வலம் வந்தாலும் பிரபு, மனோரமா, வி.எம்.ஹனிபா போன்ற மூத்த நடிகர்களே மனதில் தங்கி விடுகின்றனர். அவ்வளவு தூரம் தமது பங்கினை அவர்கள் சிறப்பாகச் செய்துள்ளார்கள். பாடல்களும் நன்றாகவே உள்ளன. எனினும் பல பாடல்கள் படத்தின் கதையோடு ஒட்டவில்லை. ஏற்கனவே பார்த்துச் சலித்துப்போன கதையை, புதுமையாகத் தந்து அனைவரையும் கவர்ந்துள்ளார் சபாபதி.★



# அ ஆ இ ஈ

திரைவிமர்சனம்

# இனி! இளைய சுப்பர் ஸ்ரார்



படிக்காதவன் படம் திரையிடப்பட்ட இடங்களுக்கு நடிகர் தனுஷ் திடீர் விஜயம் செய்து வருகிறார். இதன்போது ரசிகர்கள் அவருக்கு பலத்த வரவேற்பு அளிப்பதாகவும் கூறப்படுகின்றது. அண்மையில் மதுரையில் உள்ள திரையரங்கு ஒன்றுக்கு இவ்வாறு தனுஷ் சென்ற போது அவருடைய ரசிகர்கள் "இளைய சுப்பர் ஸ்ரார் தனுஷ்" என்று கோஷமிட்டார்கள். இனி வரும் காலங்களில் இளைய சுப்பர் ஸ்ரார் என்ற பட்டத்தை தனுஷ் பயன் படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். ரசிகர்களின் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதாக தனுஷும் கூறியுள்ளார்.★

# 'எங்கள் ஆசான்' வருகிறார்



புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் நடித்து நீண்டகாலமாக வெளிவராமல் படப் பெட்டிக்குள்ளேயே முடங்கிக் கிடந்த 'எங்கள் ஆசான்' என்ற படத்துக்கு இப்போது விடிவுகாலம் பிறந்துள்ளது. 'எங்கள் ஆசான்' படத்தின் தயாரிப்பாளர் கடனாக வாங்கிய 13 லட்சம் ரூபாவை தந்தபிறகே படத்தை வெளியிட அனுமதிக்க வேண்டுமென்று காஜா மைதீன் என்பவர் வழக்குத் தொடர்ந்திருந் தார். 'படத்தை வெளியிட்ட ஒரு வாரத்துக்குள் காஜா மைதீனின் கடனைச் செலுத்தவேண்டும்' என்ற நிபந்தனையுடன் படத்தை வெளியிட நீதிமன்றம் அனுமதித்துள்ளது. இதனால் விரைவில் திரையரங்குகளை எட்டிப் பார்க்கவுள்ளது 'எங்கள் ஆசான்'. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் யாழ்.பிரதான வீதி, புதிய நீதிமன்றத்திற்கு தெற்குப் பக்கமாக 4 பரப்பு கிணற்று வசதியுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- 0779522521
சிறி:- 0775924845
0776111419





பாரம்பரிய வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட
எவரெஸ்ட் பிருங்காமலக் தைலம்

**கண் எரிச்சல், தேக எரிவு, கண்நோ, நீடித்த கால தலைவலி நீங்கும்.**

* உயர் இரத்த அமுத்தம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணி.
* ஆயுர்வேத திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு பதிவுக்குட்படுத்தப்பட்டது.

எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**எவரெஸ்ட் மருந்தகம்**
உசன், மிருசுவில்.



## அட்சயா

பேசியல், மேக்கப், கெயார் ஸ்டைல், கேக் ஐசிங், ஐசிங் பூக்கள், சாறி வேக், கைவேலை, பூவேலை, சாறி பிளவுஸ் கட்டிங்.

மேற்படி பயிற்சி நெறிகள் நடை பெறுகின்றன.

திருமண, விசேட வை வங்களுக்குத் தேவையான றிச்கேக் (ஒன்று ரூபா 25/= மட்டுமே), ஐசிங்கேக், சிற்றுண்டி வகைகள் அனைத்தும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும். மேலும் பேசியல், மேக்கப், கெயா ஸ்டைல், தலைமுடி அயன் பண்ணுதல், தலை முடி சுருட்டுதல், புருவ வடிவமைப்பு என்பனவும் மிக உயரிய தொழில்நுட்ப முறையில் செய்து கொள்ள லாம்.

அனைத்து சேவையினையும் பெறுபவர்களுக்கு கட்டணச் சலுகை வழங்கப்படும்.

**அட்சயா**
461, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## தென்மராட்சியில் முதியோருக்கு உணவில்லாத பொருள்கள்

யாழ்ப்பாணம்,பெப்.1

தென்மராடசிப் பிரதேசத்தைச் சேர்ந்த 250 முதியவர்களுக்கு சாந்தீகம் நிறுவனத்தினர் உணவுப் பண்டம் அல்லாத பொருள்கள் வழங்கவுள்ளனர்.

கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 14 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 250 முதியவர்களுக்கு இப் பொருள்கள் வழங்கப் படவுள்ளன.

பொருள்கள் வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்ட முதியோர்களின் பெயர் பட்டியல் அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

கொடிகாமம் தெற்கு, விடத்தற்பளை, கெற்பேலி, மிருசுவில் வடக்கு, வரணி வடக்கு, மாசேரி, கிடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை, நாவற்காடு, மந்துவில் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த முதியவர்களுக்கே பொருள்கள் விநியாகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (203-207)

## இன்று கும்பாபிஷேகம்

நல்லூர்,பெப்.01

புங்குடுதீவு மேற்கு இறுபிட்டி கொம்மாபிட்டி மூத்த நயினார் புலம் வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.26 மணி தொடக்கம் காலை 8.59 மணி வரை நடைபெற வுள்ளது. (203-111)

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
(ஸ்ரான்லி கல்லூரி)

### பழைய மாணவர் சங்கம்
### பொதுச்சபைக் கூட்டம்-2009

காலம்:
15.02.2009 ஞாயிறு மு.ப. 10.00 மணி

இடம்:
கல்லூரி பிரதான மண்டபம்

சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றி ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

திரு.S.T. பத்மநாதன் (தலைவர்) திரு.ஏ.ஜெயகுமார் (பொருளாளர்) திரு.சி.சிவதாசன் (செயலாளர்)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வதாரி வருடம் தை மாதம் 20 ஆம் நாள் நாளை (02.02.2009) திங்கட்கிழமை மு.ப 10.15.-11.30 வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

திரு.திருமதி ஜீவரட்ணம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் **ஜெயதீஸ்** அவர்களுக்கும்

திரு.திருமதி சிதம்பரநாதன் தம்பதியரின் கனிஷ்ட புத்திரி **மஞ்சு சீதா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
**திருமதி ஜீவரட்ணம் ஸ்தபதி குடும்பத்தினர்**
திருநெல்வேலி.

யாழ்.மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம் - சுவிற்சர்லாந்து

# Jaffna Central College

***Old boys Association – Switzerland***


Contact address: J.C.C Ex Schuler Swiss, Postfach – 102, 4716 – Welschenrohr, Swiss.
Email jccoba-swiss@hotmail.com ☎ - 078 908 52 03


## வாழ்த்துகின்றோம்

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் அதிவிசேட (3A) சித்திகளைப் பெற்று யாழ். மத்திய கல்லூரிக்கு பெருமை தேடித்தந்த மாணவர்களான

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழிமூல தேசிய நிலையில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று தமிழினத்திற்கு பெருமை தேடித்தந்த மாணவர்களான



**கனகசபாபதி மிதுலன்**
வர்த்தகப்பிரிவு
மாவட்ட நிலை 1



**சந்திரகுமார் கோபிநாத்**
கலைப்பிரிவு
மாவட்ட நிலை 9



**தர்மலிங்கம் பாசுபதன்**
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.
176 புள்ளிகள் தேசிய நிலை 1



**மோகன் சங்கீர்த்தனா**
யா/நெல்லியடி மெ.மி.த.க.பா.
174 புள்ளிகள் தேசிய நிலை 2

*ஆகியோரையும் யாழ்.மத்திய கல்லூரியில் இருந்து உயர்தரப்பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப்பெற்ற ஏனைய மாணவர்களையும் சுவிஸ் யாழ். மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துவதுடன், இம் மாணவர்களுக்கு காலநேரம் பாராது கல்விக்கு வளமூட்டிய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**இம்மாணவர்களுக்கான பணவைப்புச் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு 03.02.2009 செவ்வாய்க்கிழமை கல்லூரி மண்டபத்தில் மதிப்பிற்குரிய யாழ்.மத்திய கல்லூரி அதிபர் திரு.எல்.ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.**

வன்னிப்பிரதேச மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்ட நிலையில் மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் தமிழ் பிரதேசம் இருக்கின்ற இந் நிலையிலும், வன்னிமக்களின் துயரங்கள் நிறைந்த சுமைகளின் மத்தியிலும் இந்நிகழ்வினை நடத்துவது கல்வியில் சிறப்பாகச் செயற்பட்ட மாணவர்களை உரிய காலப்பகுதியில் மதிப்பளித்து உற்சாகப்படுத்தவேண்டும் என்பதற்காகவே. இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியிலும் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்திருப்பது பெருமையளிக்கின்றது.

கல்வியினை முன்னெடுத்துச் செல்வதில் தமிழ் மாணவர்களுக்கு இருக்கின்ற இடையூறுகள் அனைத்தையும் நாங்கள் நன்கு அறிவோம். எனினும் எவ்வாறான தடைகள் இருப்பினும் அதற்கு முகம் கொடுத்து கல்வியில் வெற்றி பெறவேண்டுமென அனைத்து மாணவர்களிடத்திலும் அன்பாகக் கேட்டுக்கொள்வதுடன் [illegible] தரப்பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப்பெற்று [illegible] பல்கலைக்கழகம் செல்ல இருக்கின்ற அனைத்து தமிழ் மாணவர்களிற்கும், இம் மாணவர்களிற்கு கல்விபுகட்டிய கல்லூரி அதிபர்கள்,ஆசிரியர்கள்,அனைவரிற்கும் எமது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

தொடர்ந்து வருகின்ற காலங்களிலும் தேசிய நிலையில் சிறப்பாகச் செயற்படும் மாணவர்களையும், எம் கல்லூரி மாணவர்களையும் எமது சங்கம் மதிப்பளித்து ஊக்கமளிக்கும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதுடன் வன்னிப்பிரதேச மக்களின் அவலங்கள் நீங்கி மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்..


மின்னஞ்சல்
jccoba-swiss@hotmail.com
இணையமுகவரி
www.jccoba.ch

நா.விஜயகுமார் (தலைவர்)
யாழ் மத்திய கல்லூரி
பழையமாணவர் சங்கம்
சுவிற்சர்லாந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்னீரன், சிபெரு, பேனா போன்ற புனைபெயர்
களில் ஈழத்தில் வெளியான சஞ்சிகைகள், பத்திரிகை
களில் சிறுகதைகள் எழுதியுள்ள, எழுதிவரும் எஸ்.பெருமாள்
மூத்த தமிழ்ப்பத்திரிகையாளர்களில் ஒருவர்.
1960துகளிலிருந்து சிறுகதைகள் எழுதிவரும் இவர்
மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரானாலும், யாழ்.
குடாநாட்டிலேயே நீண்டகாலம் வாழ்ந்து வருகிறார்.
1957 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகள் காலம் வீரகேசரிப் பத்திரி
கையிலும் 1960 ஆம் ஆண்டு முதல் இருபத்தைந்து வருடங்களுக்கு
மேலாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில்
உதவி ஆசிரியராகவும் பணியாற்றிய பின்னர் அதன் ஆசிரியராக விளங்
கியவர். இப்போதும் பத்திரிகையாளராகவே பணிபுரிந்து வருகிறார்.
நீண்டகாலம் பத்திரிகைத்துறையில் பணியாற்றக் கிட்டிய வாய்ப்
புக் காரணமாக கே.பி.ஹரன், இராஜ அரியரத்தினம், என்.சபாரத்தினம்
மற்றும் எஸ்.எம்.கோபாலரத்தினம் ஆகிய ஈழத்துப் பத்திரிகைத்துறை
முன்னோடிகளுடன் இணைந்து தொழிலாற்றும் வாய்ப்பைப் பெற்ற
வர். தற்போது தமது 76 ஆவது வயதில் தடம் பதித்துள்ளார்.
1970துகளின் பிற்பகுதியில் 'மல்லிகை' சஞ்சிகையில் வெளிவந்த
தும், மலையகச் சிறுகதைகளின் இரண்டாவது தொகுதியில் இடம் பிடித்
துள்ளதுமான இவரது 'நம்பிக்கை' சிறுகதை இவ்வார இலக்கியப்
பொழிலை அலங்கரிக்கிறது.

# நம்பிக்கை

## சிறுகதை

பல மாதங்கள் தொடர்ந்தாற்போல் மழையில்லை. பூமித்தாயின் திருமேனி வரண்டுபோய்ப் பரிதாபமாகக் காட்சியளிக்கின்றது. உயர்ந்து வளர்ந்த வாகை, சவுக்கை மரங்கள் எல்லாம் கூடச் சோர்ந்து போய் நிற்கின்றன. மலைகளின் சரிவுகளில் இசையெழுப்பி நளினமாக ஓடிக் கொண்டிருக்கும் அருவிகள் யாவும் ஓசையை நிறுத்திக் கொண்டுவிட்டன. பச்சைநிறப் படுதாவைப்போல் வழமையாகக் காட்சிதரும் தேயிலைப் புதர்களில் பசு மைத் தோற்றம் பாழ்பட்டுக் கிடக்கின்றது.

மலைகளின் அடிவாரத்தில் உள்ள வயல் வெளிகள் எல்லாம் பாளம்பாளமாக வெடித்து வெறிச்சோடிக் கிடக்கின்றன.

களுகங்கையில் வழமையான கம்பீரமும் இல்லை. வறட்சியின் கொடுமையால் அவள் சீற்றம் தணிந்து மெலிவுற்றுக் கிடக்கின்றாள். வெய்யிலின் கோரம் தாங் காமல் ஆற்றங்கரையை நோக்கிக் காட்டு மிருகங்கள் வரத் தொடங்கிவிட்டன.



இரத்தினபுரிப் பகுதியில் இப்படி ஒரு வறட்சி இதற்கு முன் ஏற்பட்டதில்லை. இயற்கை ஏன் இத்தனை கொடுமைக்காரியாக மாறிவிட்டாள்? மாதம் தவறினாலும் மழை தவறாமல் பெய்யும் ஒரு பிரதேசத்தில பல மாதங்கள் மழையே இல்லையென்றால் விளைவைச் சொல்ல வேண்டாம்.

இரத்தினபுரி நகரின் ஒரு பகுதியையே விழுங்கி வேடிக்கை காட்டும் அளவுக்குச் சில சமயங்களிற் பொங்கிப் பூரித்து ஓடிவரும் களுகங்கை முடங்கிப் போய்க் கிடக்கிறாள். தோட்டங்களில் வேலையில்லை; மழை பெய்தால்தானே வேலை இருக்கும்? தேயிலைச் செடிகள் எல்லாம் கருக ஆரம்பித்து விட்டபிறகு, தோட்ட நிர் வாகிகளால்தான் என்ன செய்ய முடியும்?

கிழமையில் அதிகம் என்று சொன்னால் மூன்று நாள்களுக்குத் தான் வேலை வைக்கிறார்கள். செய்யும் வேலைக்கான கூலி பங்கீட்டுச் சாமான்களுக்கே சரியாகப் போய் விடுகின்றது. மேற்கொண்டு எங்காவது கிராமப் பகுதியில் அல்லது நகரத்தில் கூலி வேலை கிடைக்குமா என்று பார்க்க வேண்டியதுதான். நான்கு பிள்ளைகளை என்னவென்று காப்பாற்றுவது? குடும்பத்தை எப்படி ஓட்டுவது? கருப் பண்ணன் திக்குமுக்காடிப் போனான்.

தோட்டத்தை விட்டு வெளியில் சென்று கைக்கூலிக்கு வேலை செய்வதென்பது கருப்பண்ணனுக்கு அறவே பிடிக்காத விஷயம். இருந்தாலும் பக்கத்திலுள்ள சிங்களக் கிராமத்திற்குச் செல்ல அவன் தயங்குவதில்லை. ஆனால் இப்பொழுது அங்கும் வறட்சி தானே தாண்டவமாடுகிறது.

வேறு வழியில்லை, கருப்பண்ணன் துணிந்து றோட்டில் இறங்கிவிட்டான். கிடுகிடுவென நடந்து இரத்தினபுரி நகருக்கே வந்து விட்டான். அங்கு மட்டும் என்ன வேலை கொட்டியா கிடக்கிறது? கூலி வேலையையே நம்பி வாழும் எத்தனையோ பேர் அங்கும் தான் இருக்கின்றார்கள். இவர்களுக்குள் புகுந்து ஏதோ அப்படியும் இப்படியுமாகக் கைவேலை பார்த்ததில் ஆறோ ஏழோ ரூபாய் தேறியது. அதில் ஐம்பது சதத்திற்குப் புளித்த தோசையைச் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொண்டு எஞ்சிய பணத்துக்கு வீட்டுக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கினான். வீட்டுக்குப் புறப்பட்டபோது மாலை மயங்கிவிட்டது.

பஸ்ஸிலேயே கிளப்பியிருக்கலாம். அதற்குக் கொடுக்கும் சில்லறையை மீதம் வைத்துக்கொண்டால் 'ஒரு வேளைச் சாப்பாட்டையே சமாளித்து விடலாமே!

அலுப்பொல குரூப்புக்குப் போகும் பாதையில் கருப்பண்ணன் மெதுவாக நடக்கின்றான். உழைப்பதற்கென்றே பிறந்து விட்டவன் நடப்பதா பெரிய காரியம்? அதோ அப்புகஸ்தென்னை தெரிகிறது. அங்கு யாரும் தெரிந்தவர்களிடம் ஒரு பந்தம் கட்டி எடுத்துக்கொண்டு, கிளம்பினால் பிள்ளைகள் படுக்கிறதுக்கு முன்னாடி தோட்டம் போய்ச் சேர்ந்திடலாம்.

கருப்பண்ணன் தலையைச் சற்றுத் தூக்கி மேலே பார்க்கின்றான். மலைச் சரிவுகளிலே வாடிப் போய் நிற்கும் மரங்களும் கருகிப்போன தேயிலைச் செடிகளும்தான் கண்ணிற் படுகின்றன. 'யார் செய்த பாவமோ இந்த மாதிரிப் பூமி வறண்டு போச்சே' பெருமூச்சு ஒன்றை விட்டுக் கொள்கின்றான் அவன். 'இந்த லட்சணத்தில் இந்தத் தோட்டத்தை எல்லாம் அரசாங்கம் எடுக்கப் போகிறதாம். இப்பவே இந்தப் பாடாய் இருக்கு. அப்புறம் என்னவெல்லாம் நடக்குமோ யாரு கண்டது?'

காலமெல்லாம் அடிமைத்தொழில் செய்தே சுரண்டப்பட்டு வாழ்ந்து பழகிப் போன அவனுக்கு தோட்டப்பகுதியில் என்ன மாற்றம் வந்தாலும் அது தன்னையும், தன்னைப் போன்றவர்களையும் மேலும் நசுக்குவதற்காகவே வருகிறது என்பதைத் தவிர வேறுவிதமாக எண்ணவே தோன்றவில்லை. அதுபோலவே தோட்டங்களை அரசு எடுப்பதினாலும் ஏதும் நன்மை விளையும் என்று அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

'நம்மவங்களில் பாதிப்பேரு இந்தியாவுக்குப் போயிட்டாங்க. (14 ஆம் பக்கம் பார்க்க)

# அந்த நாள்கள்!

முற்றத்து மணலில்
நிலாக்காய்ந்த இரவுகளில்
கூடியிருந்து கதையளந்த
சுற்றத்து உறவுகள் எங்கே?
சுகங்கள் எங்கே?

அந்திக் கருக்கலில்
ஆலயக் கேணிப்படிகளிலே
முந்திக் கூடிக் குலவிய
முகங்கள் எங்கே?
முகவரிகள் எங்கே?

வரம்பில்லா ஊரில்
வகைதெரியாத் தெருவில்
வானம் பாடிகளாய்
நித்தமும் சுற்றிய
நிஜங்கள் எங்கே?
நினைவுகள் எங்கே?

சாலைகள் தோறும்
வேளைகளின்றி
வேலையு மின்றி
நாளைய கனவுகளை
மறந்த மாயக்...
கணங்கள் எங்கே?

பருவமறியாப்
பருவத்தில்
பலதும் பத்துமாய்
பார்த்து ரசித்த
அம்மன் கோவிலின்
அர்த்தராத்திரி
ஆலய உற்சவம் எங்கே?
உற்சாகம் தானெங்கே?

நினைவும் மனதும்
தொடர நித்தமும்
அசைபோடும்
பசுமை நினைவுகள் எங்கே?
பழகிய அந்தப் பழைய நாள்கள் எங்கே'

கு.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

# சிறியது என்பதால்...?

உருவம் சிறியது
என்பதனாலே
அலட்சியம் வேண்டாம்!
வடிவம் சிறியது
கொண்டது என்றாலும்
அவதானம் அவசியம்!!

தெய்வமாய்க் கும்பிடும்
அரசமரத்தின்
வேப்ப மரத்தின்
விதையென்ன பெரியதா?

ஊருக்கு நிழல் தந்து
உயிர்களுக்கு உணவு தந்து
பரந்து நிற்கும்
ஆலமரத்தின்
விதைகள்- உருவத்தில்
சிறியவைதானே!

காய்ச்சிய பசும்பால்
தயிராவதற்குத்
தேவைப்படுவது
சிறுதுளி பிரையே!

சிறுகற்கள் கொண்டுதானே
அமைக்கிறார்கள்-
பெரிய கல் வீடுகளை!

உருளும் பெரும் தேருக்கு
அவசியமாய்த் தேவைப்படும்
அச்சாணிகள் கூடச்
சிறியவைதானே!

பென்னம் பெரியதோர்
யானைக்கு இருப்பதென்ன
பெரிய கண்களா?

காரம் மிகுந்த
கடுகும் மிளகும்
பெரிய உருவம்
கொண்டவையாமோ?

உரசிடத் தீப்பற்றும்
தீக்குச்சி நுனியில்
இருக்கும் மருந்து
சிறிதளவல்லவா?

இழந்தால் மீளவும்
பெற்றிட இயலாத
உயிரைப் பறிப்பது
சிறுதுளி விஷமே!

பெரிய கண்ணாடியும்
சிறிய கல்லொன்றால்
நொடியினில் சிதறிடுமே!

துவக்கினிலிருந்து
பாய்ந்து வருகின்ற
சிறிய ரவையே
உயிரினைப் பறித்திடும்!

சைக்கிளின் சில்லுக்குக்
காற்றும் போவதற்குக்
காரணமாவது
சிறிய முள்தானே!

இருளைப் போக்கிடும்
விளக்கேற்றத் தேவை
சிறுதீப் பொறியே!

விண்ணைத் தொடும்படி
அடுக்கிய விறகினை
எரித்து அழித்திடும்-
சிறுதீப் பொறியே!

உணவுக்குச் சுவையூட்டும்
உப்பும் புளியும்
சேர்ப்பதென்னமோ
சிறிதளவன்றோ!

மலேரியாக் காய்ச்சலையே
பரப்பிடும் நுளம்பு
பெரிய உருவம்
கொண்டுள்ளதொன்றா?

- முருகு -

(இன்னும் வரும்...)

# "கண்ணனைக் கவிதையில் தோழனாய் உருவகித்து நட்பின் பெருமையைப் போற்றிய மகாகவி பாரதி!"

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தாம் வழிபடும் இறைவனைக் குழந் தையாகவும், தந்தையாகவும், தோழனா கவும், தலைவனாகவும், குருவாகவும் உறவு பாராட்டிப்போற்றி வழிபட்டமையை வரலாறு நமக்கு உணர்த்து கின்றது. இம்முறையினைப் பின்பற் றிப் பாட்டுக்கொரு புலவனாக, சிந் துக்குத் தந்தையாகச், செந்தமிழ்த் தேனீ யாக விளங்கிய விடுதலைக் கவிஞர் பாரதியும் கண்ணனை இவ்வாறெல் லாம் அமைத்துக்கொண்டு கண்ணன் பாட்டைப் படைத்துள்ளார்.



மகாகவி பாரதியார் பாடல்களுள் "முப்பெரும் பாடல்கள்" என்ற சிறப் பைப் பெறுவன பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகியன.

புதுமைக்கவியாக, புரட்சிக்கவியாக, மகாக வியாக, தேசியகவியாக விளங்கியதோடு "நமக்குத் தொழில் கவிதை" என்று முழக்கமிட்டுப் புதிய சொல், புதிய பொருள், புதிய சுவையோடு சோதிமிக்க நவகவிதைகளை நமக்கு வழங்கிய பெருமைக்குரியவர் பாரதியார்.

மக்களிடம் செலுத்தும் அன்பினை இறைவனிடமும் செலுத்த வேண்டும் என்பதுவே பாரதியின் கண்ணன் பாட்டின் நோக்கம் எனலாம்.

"புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை யெனும்
வசையென்னால் கழிந்ததன்றே"

எனப்பாடும் பாரதி தன்னம்பிக்கை கொண்ட கவிஞராகக் காட்சியளிக்கிறார். மொழி, இனம், நாடு எனக் கவிதை புனைந்த பாரதி சக்தியையும் கண்ணனையும் பாடவும் தயங்கவில்லை. ஆனால் இறைவனிடம் அவர் மற்றெவரும் கேட்காத வரங்களைக் கேட்டுப் பாடுகின்றார்.

"பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்
மணீதுள்ள மக்கள், பறவைகள்
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்ப முற்றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவதேவா"

எனப் பொதுவாகவே இறைவனை வேண்டுகின்றார்.

பாரதியின் கவிதைகளை ஆய்தல் என்பது கடல் ஆழம் காணுதற்கொப்பாகும். பாரதி படைத்த "கண்ணன் பாட்டு" 1917 இல் வ.உ.சி. சு.நெல்லையப்பர் அவர்களால் வெளியிடப்பட்டது. கண்ணன் பாட்டில் பாரதி கண்ணனைத் தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, குழந்தை, விளையாட்டுப் பிள்ளை, காதலன், காந்தன், காதலி, ஆண்டாள், குலதெய்வம் எனப் பதினான்கு நிலைகளில் பாடி மகிழ்கின்றார்.

"கண்ணன் பாட்டின்" குறிப்பிடத்தக்க சிறப்பியல்பு அதன்கண் அமைந்துள்ள பண் அமைப்பாகும். கவிதையழகை மாத்திரம் அனுபவித்துவிட்டு இந்நூலின் பண்ணழகை மறந்துவிடக் கூடாது" என்பது கண்ணன் பாட்டு குறித்ததொரு விமர்சனக் கருத்தாகும். "இறைவனை இறை வட்டத்திலிருந்தும் உலகியல் வட்டத்திலிருந்தும் இருவகையாகப் பாடலாம்" என்றொரு கருத்தும் முன்வைக்கப்பட்டதுண்டு. பாரதியார் உலகியல் வட்டத்திலிருந்து கண்ணன் பாடல்களைப் பாடியுள்ளார்.

**கண்ணன் என் தோழன்**

"உயிர் கொடுப்பான் தோழன்" என்பது உலக வழக்கு. மனித உறவுகளில் நட்பு என்பதற்கு ஒரு தனியிடம் உண்டு. எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி உள்ளத்து உணர்வுகளால் ஒன்றிப் பிணைந்து நிற்றல் தோழமைக்குரிய தனிச் சிறப்பாகும்.

சமய இலக்கியங்களில் சுந்தரர் இறைவனைத் தோழனாகக்கொண்டு, இறையருள் பெற்றதைப் புராண வரலாறு கூறும். மகாபாரதத்தில் அருச்சுனனுக்கும் கண்ணனுக்குமிடையே இருந்த தோழமைப் பண்பை மனதிருத்திய பாரதியார் அன்பு மீதூரப்பெற்ற நிலையில் கண்ணனைத் தோழனாகக் காண்கிறார்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என நட்புக்கு இலக்கணம் கூறினார் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்.

(16 பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை...................

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

இருக்கிறவங்களிலேயும் எவன்தான் நம்மைக் கவனிக்கிறான்? அந்தச் சிவனொளியானுக்குத் தான் வெளிச்சம்' தூரத்தில் தெரியும் சிவனொளிபாத மலையைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொள்கிறான், கருப்பண்ணன்.

நடந்த களைப்பு, சற்று நின்று களை ஆறிப் போகலாம் என்று நினைக்கும்போதே களுமாத்தையாவின் வீடு தெரிகிறது. அருகில், மெதுவாக அந்தக் குறுகலான அடிப்பாதையில் இறங்கிக் களுமாத்தையாவின் வீட்டை நோக்கி நடக்கிறான்.

''வாங்க வாங்க கருப்பண்ணன். எப்படி சொகங்? இப்ப எல்லாங் ஒங்களைக் பாக்கீ முடியாது தானே'' களுமாத்தையாவின் வழமையான குரல் கேட்கிறது.

இருவரும் பால்ய சினேகிதர்கள். சிறுவனாக இருந்தபோது களுமாத்தையா தோட்டத்தில் வேலைக்கு வந்து போய்க்கொண்டு தானிருந்தான். இருவரும் பார்வைக்கு ஒரே மாதிரியானவர்கள் தான். புதிதாக இருவரையும் ஒன்றாகப் பார்க்கிறவர்கள் இரட்டைப் பிள்ளைகள் என்று எண்ணினால் கூட ஆச்சரியப்பட முடியாத, அத்தனை உருவ ஒற்றுமை. இது அவர்களின் பெயரிலும் கூடத் தொனித்தது.

''கருப்பண்ணா உன் பேரைக் கருப்பையான்னு மாத்தி வச்சக்கோ. களு மாத்தையா - கருப்பையா இரண்டு பெய ரும் நல்ல பொருத்தமாய் இருக்கும்'' இப்படிப் புல்லு வெட்டுக் கங்காணி அடிக்கடி கிண்டல் செய்வதுண்டு அவனை.

தோட்டத்து வேலை எதுவானாலும் இருவரும் சேர்ந்தே செய்வார்கள். அதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களும் இல்லை. இவர்களுக்கிடையில் நிலவிய ஒற்றுமையையும் உறவையும் கண்டு பொறாமைப்பட்டவர்களும் கூட உண்டு.

திருமணம் செய்துகொண்ட கையோடு களுமாத்தையா தோட்டத்தில் வேலைக்கு வருவதை நிறுத்திக் கொண்டான். அப்படி வந்தாலும் ஏதும் தேவையிருந்தால் மட்டுமே வருவான். இருந்தாலும் கருப்பண்ணனுக்கும் களுமாத்தையாவுக்கும் இடையில் இருந்து வந்த உறவு முறிந்து போகவில்லை.

அவ்வப்போது கருப்பண்ணன் களுமாத்தையாவின் வீட்டுக்குப் போய்வருவது உண்டு. அவ்வாறு போகும்போதெல்லாம் தோட்டத்தில் பங்கீட்டுக்குக் கிடைக்கும் பருப்பு, கருவாடு, தேயிலை, சீனி போன்ற வற்றில் இயன்றதைக் கொண்டுபோய்க் கொடுப்பான். களுமாத்தையாவுக்கும் நண் பனை வெறும்கையோடு அனுப்புவது பழக்கம் இல்லை. தன்சேனையில் விளையும் மரவள்ளிக்கிழங்கு, பலாக்காய், தேங்காய் இவைகளில் ஏதாகிலும் கொடுத்தனுப்பாமல் விடமாட்டான்.

சமீபகாலமாக இருவருக்கும் இடையில் தொடர்பு அற்றுப் போய்விட்டது. தொழிலாளர்களில் பல குடும்பங்கள் இந்தியாவுக்குப் போய் விட்டன. இன்னும் பலர் வேலைதேடி வேறு இடங்களில் குடியேறிவிட்டார்கள். கருப்பண்ணனால் அப்படி எதுவும் செய்துகொள்ள முடியவில்லை. பிறந்து வளர்ந்தது முதல் இதே தோட்டத்தில் தான், இந்த இரத்தினபுரி நகரத்தைவிட வேறு நகரமே அவனுக்குத் தெரியாது. வேறு இடங்களுக்கு அவன் போனதும் இல்லை; அப்படிப் போய் வாழும் துணிவும் இல்லை.

அவனுக்கு நான்கு பிள்ளைகள். மனைவி வேறு. மூத்த மகளுக்கு 18 வயதுக்கு மேலாகி விட்டது. இவர்களையெல்லாம் தனியாக விடுத்துத் தூரம் தொலைக்குப் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வருவதென்பது அவனைப் பொறுத்தவரை முடியாத காரியம்.

களுமாத்தையாவின் பேச்சினால் அந்தப் பழைய நினைவெல்லாம் ஏதோ திரைப்படம் போல மனதில் ஓடி மறை கின்றன.

''என்னா களுமாத்தையா செய்யிறது. தோட்டத்திலேயும் சரியாக வேலை இல்லை. உங்க நாட்டுப்புறம் இறங்கி ஏதாகிலும் வேலை செய்யிறதுக்கும் முன்னம் போல வசதியில்லை. அதனாலேதான் இப்போ எல்லாம் வேலையில்லாத நாளிலே டவுனுப்பக்கம் போய் கூலிவேலை ஏதாகிலும் செஞ்சி ஒழைப்பைப் பார்க்கிறேன். அதனாலேதான் இப்போ எல்லாம் இங்கேவர முடிகிறதில்லை''என்று தன்நிலைமையை எடுத்துக் கூறினான் கருப்பண்ணன்.

''ஆமாம் மழை இல்லேத்தானே. கருப்பண்ணன். எங்களுக்கும் கஷ்டம்தானே, எங்கட வயல் எல்லாம் காஞ்சி போனதிதானே'' என்றான் களுமாத்தையா.

''ஊர் ஒலகம் எல்லாம் இப்போ அநியாயம் நடக்குது களுமாத்தையா. அந்தக் காலத்திலே மகராசன் மாதிரி வெள்ளைக்காரன் இருந்தான். ஒழைப்புக்கும் குறைவில்லை. சாப்பாட்டுக்கும் பஞ்சமில்லை. சந்தோஷமாக இருந்தோம். இப்போ பாருங்க.... எங்க ஆளுங்களிலே பலபேரு இந்தியாவுக்குப் போயிட்டாங்க. இருக்கிறவங்களும் எங்கேயாவது ஓடிப் போவலாமுன்னு யோசிக்கிறாங்க, அந்தளவுக்குக் கஷ்டம் பெருத்துப் போச்சு'' என்றான் கருப்பண்ணன்.

''வெள்ளைக்காரன் எல்லாம் அநியாயம் தானே செஞ்சது. அவன்தானே ஓங்கட ஆள் எல்லாம் கொண்டு வந்ததி. இப்ப போறப்போது உங்களைப் பத்தியெல்லாம் அவன் கவலையில்லாம போனதிதானே'' என்றான் களுமாத்தையா.

அவன் கூறியதில் உள்ள உண்மை கருப்பண்ணனுக்குப் புரியத்தான் செய்தது. ''வெள்ளைக்காரன் இந்தியாவில் இருந்து நம்ம ஆளுங்களை இங்கே கூலி வேலைக்காகக் கொண்டு வந்த போது காட்டிய ஆர்வமும், அக்கறையும் அவன் நாட்டைவிட்டுப் போகும்போது காட்டவில்லையே. அப்படி அக்கறை காட்டியிருந்தால் தோட்டங்களிலே இத்தின காலமாகக் கஷ்டப்பட்ட நம்மவங்களுக்கு ஒரு நல்ல வழியைச் செய்திருக்க முடியுமே. அனாதரவாக அல்லவா விட்டுவிட்டுப் போயிட்டான்கள்'' கருப்பண்ணனின் சிந்தனை இப்படி ஓடியது. வெள்ளைக்காரர் மீது அவனுக்கு இதுவரைக்காலமும் இருந்து வந்த மதிப்பு வெறுப்பாக மாறியது.

''ம்.... அவங்கதான் போயிச் சேர்ந்திட்டாங்கள். இருக்கிறவங்களாவது நம்மைப்பத்திக் கவலைப்படுகிறாங்களா?'' என்று அவன் பெருமூச்சு விட்டான்.

''அதிதானே சொல்லுறதி எங்கட ஆளும் ஓங்கட ஆளும் எல்லாம் எலக்ஷன் ஒட்டுப் பத்தி தானே யோசிக்கிறது.... ஒங்க மிச்சம் ஆளுக்கு ஓட்டு இல்லைதானே. அதிதானே யாரும் கவலைப்படமாட்டான்'' என்று விளக்கம் கூறினான் களுமாத்தையா.

களுமாத்தையாவின் மனைவி சொப்பிநோனா வெளியில் வந்தாள். வந்தவள் கருப்பண்ணனைக் கண்டதும் ''ஆங். கரு அண்ணன் எப்படிச் சொகம்?'' என்றாள். ''மிச்சம் காலம்தானே ஒங்களைப் பார்த்து'' என்று மேலும் சொன்னாள்.

''சொகத்துக்கு என்ன நோனா கொறைச்சல்'' என்றான் கருப்பண்ணன், விரக்தி கலந்த குரலில். அதேசமயம் சொப்பிநோனா மீது தன் பார்வையை ஒருகணம் படரவிட்டுத் திருப்பிக் கொண்டான். இதைக் கவனித்த களுமாத்தையா நமிட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு மனைவியைப் பார்த்தான்.

மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பழைய நினைவுகள் அவர்களைச் சற்று அலைக்கழித்தது.

சொப்பிநோனாவும் இவர்களைப் போல சின்ன வயதில் தோட்டத்தில் வந்து வேலை செய்தவள்தான். களுமாத்தையாவுக்கும் அவளுக்கும் திருமணமானதின் பின்னர் அவளும் வேலைக்கு வருவதை நிறுத்திக்கொண்டாள். அந்தக் காலத்தில் அவள் இருந்த அழகை வாயால் சொல்லமுடியாது. அவள் பின்னால் சுத்தாத பசங்களே இல்லை.

மேலே ரவிக்கையும் இடையில் கம்பாயமும் அணிந்துகொண்டு வெற்றிலைமென்று சிவந்த உதடுகளில் கவர்ச்சியாகப் புன்முறுவல் ஒன்றைத் தவழவிட்டுக் கொண்டு அவள் வேலைக்கு வரும்போது ஒருதடவையாவது அவளைப் பார்க்காமல் போகும் ஆடவர் இல்லை. கருப்பண்ணனுக்குக் கூட அவள் மீது ஆசை ஏற்பட்டதுண்டு தான்.

களுமாத்தையாவுக்கும் சொப்பிநோனாவுக்கும் இடையில் அன்பு ஏற்பட்டு, அது காதலாக மாறியபோது அவளைச்சுற்றி வட்டமிட்டு வந்த வண்டுகள் மெதுவாக ஒதுங்கிக் கொண்டன. சொப்பிநோனா மாத்திரமல்ல, பல பெண்கள், ஆண்களைப் போலவே தோட்டத்தில் வேலைக்கு வந்து போனார்கள்தான். அது ஒரு காலம்.

கருப்பண்ணனுக்குத் தேனீரும் வெற்றிலை முதலியனவும் கொடுத்து உபசரித்தாள் சொப்பிநோனா. அதேசமயம் பின் வளவில் நின்ற ஈரப்பலாமரத்தில் சில காய்களை ஆய்ந்து கொண்டு ஈர்க்கில்களில் குத்திக்கோர்த்து ஒன்றாகக் கட்டிக்கொடுத்தான் களுமாத்தையா. ஒரு உமலில் மரவள்ளிக்கிழங்கும் போட்டுக் கொடுத்தான்.

கருப்பண்ணன் டவுனில் இருந்து கொண்டுவந்த சாமான்களோடு களுமாத்தையா வீட்டில் கிடைத்த சாமான்களையும் சேர்த்துக்கட்டி சுமந்துகொண்டு புறப்பட்டபோது மாலை ஐந்து மணிக்கு மேலாகிவிட்டது. என்னதான் காலம் மாறிப்போய்விட்டாலும், அரசியல் குரோதங்களும், ஏற்றத்தாழ்வுகளும் ஏற்பட்டுப் பகைமை உணர்ச்சி வளர்க்கப்பட்டு விட்டாலும் கஷ்டப்படுகிறவனுக்குத்தான் தன்னைப்போல் கஷ்டப்படும் இன்னொருவனின் கஷ்டம் புரியும் என்று நினைத்துக் கொண்டான் கருப்பண்ணன்.

* * *

வீட்டின் முன் உள்ள குட்டிச் சுவரின் மீது அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தான் கருப்பண்ணன். காலை நேரம்தான். வழமைக்கு மாறாக வானம் மந்தாரம் போட்டிருந்தது. லேசாகக் குளிர் காற்றும் வீசத் தொடங்கிவிட்டது. அவன் வானத்தை ஒரு தடவை அண்ணாந்து பார்த்துக் கொண்டான்.

''மழை பெய்தாலாவது ஒழுங்காக வேலையாவது கெடைக்கும். வேலை ஒழுங்காகக் கெடைச்சால்தானே குடும்பத்தை நடத்தலாம். இல்லையின்னா என்னதான் செய்வது, எங்கேதான் போவது? மனிஷர்தான் கை விட்டு விட்டாங்கள். தெய்வத்துக்குமாடா கண் இல்லாமல் போச்சி?''

''தோட்டத்தையே நம்பிக்கிட்டு இருக்கிறதனாலேதான் இந்தக் கஷ்டம் எல்லாம். துணிச்சலாக வேற எங்கேயும் கிளம்பிப் போயிட்டா என்ன? அப்படிப் போனவங்கள் எல்லாம் செத்தா போயிட்டாங்க? நான் போயிடலாம். அப்புறம் பிள்ளை குட்டிங்க.... குடும்பமாகவே கிளம்பிட்டாலும்...... என் குடும்பம் மட்டுமா கஷ்டப்படுது? என்னைப் போல எல்லாக் குடும்பத்துக்கும் தானே இந்தக் கஷ்டம். ஏதோ நடக்கிறது நடக்கட்டும். எனக்கு வந்தது அவங்களுக்கு, அவங்களுக்கு வந்தது எனக்கு. எவன் நம்மைக் கண்ணெடுத் துப் பாக்காட்டியும், மேலே ஒருத்தன் இருக்கான், மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான்; காலம் இப்படியே போயிடுமா?''

யோசனையில் ஆழ்ந்து போயிருந்த அவன் ஏதோ நினைவில் மேலே அண்ணாந்து மீண்டும் வானத்தைப் பார்த்தான். ஒரு கருமேகம் மெதுவாகக் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தது. சிறிதாகத் தெரிந்த அது பார்த்துக் கொண்டிருக்கும் போதே பருத்துப் பரவி வானத்தையே திரைபோட்டு மூடிக்கொண்டுவிட்டது.

அவன் மனதில் ஒரு நம்பிக்கைத் துளி பிறந்தது. இந்த நம்பிக்கைதானே எல்லை மீறிய துன்பங்களுக்கு இடையில் அந்தச் சனங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது.

எங்கும் இருள் கவியத் தொடங்கியது. யாரோ அவசரமாக வந்து அவனைப் பேர் சொல்லிக் கூப்பிட்டார்கள். அவன் பதில் சொல்வதற்கு முன்னமேயே தபால்காரன் தான் கொண்டுவந்த கடிதம் ஒன்றை அவனிடம் கொடுத்தான்.

''என்ன கடதாசி''- அவன் கேட்டான்.

''ஓனக்குப் பிரஜா உரிமை கெடைச்சிருக்குக் கருப்பண்ணா. அதுதான் கடதாசி'' என்றான் தபால்காரன்.


கருப்பண்ணனுக்குச் சிரிப்பு வந்தது. தபால்காரன் கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டான். மழைகொட்ட ஆரம்பித்து விட்டது. அவன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். மழையோடு காற்றும் வீசியது.

இனித் தோட்டத்தில் ஒழுங்காக வேலை கிடைக்குமல்லவா? களுகங்கையும் முன்போல் பிரவாகித்துப் பொங்கிப் பூரித்து ஓடுவாள்.

வானத்தைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டு விட்டு உள்ளே எழுந்து சென்றான், கருப்பண்ணன். ✱

*(நன்றி:மலையகச் சிறுகதைகள்)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 46



அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### மேலிருந்து கீழ்

1.அமுக்கு/அடக்கு.
2.விதவைத்தன்மை.
3.செய்தி.
4.மண்ணுக்கு முந்தியது.
5.சீக்கிரத்தில்.
8.காலால் நசுக்கு/அழுத்து.
9.வீமனின் ஆயுதம்.
10.யமன் வீசும் கயிற்றுக்கும், அன்போடு மற்றவர்மீதுநாம்வைக்கும் விருப்பத்துக்கும் இதுதான் பெயர்.
12.தலைவன்/ அதிபன்.
13.வீண்பேச்சுப் பேசுதல்.
15.தாண்டு.
16.கூடிய.
17.பிரணவ வடிவமும், இணக்கச் சொல்லும்.
18.வெற்றியின் படிக்கட்டு.
20.நவக்கிரகங்களிலும், கிழமைகளிலும் ஒன்று.
22.சேர்த்துக் குழப்பு.

### இடமிருந்து வலம்

1.சிரிப்பு.
4.உபகரணம்.
6.பாசம்.
7.எருதின் ஏரி.
9.பாரமானது.
10.பாவம் செய்தவன்.
11.ஆம்பல்.
13.நகல் அல்ல/ போலி அல்ல.
14.ஒரு அசைச்சொல்.
15.பாத்திரம்/ படகு.
16.இரவு.
17.வண்டியும் ஒரு நாள் இதில் ஏறும்.
19.சிரார்த்த நாள்.
21.நாளில் அரைவாசிக் காலம்.
23.திருமணமாகாத பெண்.
24.பாட்டு, பதத்தில் ஓர் உறுப்பு.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 46
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,
இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (11.02.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 46 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 15.02.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவைவளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 44 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) நகுதல் (4) சாவடி (6) வட்டி (7) பாக்கி (8)மடிப்பு(10)கடுகு (12)புத்தாடை (15) தடி(16) கண் (17)பித்தன் (19)கட்டு(20) சதம் (21)மலடி (22) கும்பிடு (23) வில்லை

மேலிருந்து கீழ்

(1) நவமணி (2) குட்டி (3) தடிப்பு (4) சாக்கடை (5)வகிடு (9)புத்தன் (11) குறண்டு (13) தாடி (14) சத்தம் (16) கட்டில் (17) பிசகு (18)தம்பி (19) கல்வி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:44 இற்கான சரியான விடை களை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம்தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** நா.சிவதாசன், இல.114, கிராம விஸ்தரிப்புத்திட்டம், திருநெல்வேலி.

**2 ஆம் பரிசு** திருமதி இ.பத்மதேவா, புத்தூர் வீதி, மீசாலை.

**3 ஆம் பரிசு** செல்வி பா.சுரசாகித்யா, சென்ற்.பெனடிக்ற் றோ.க.த.க.பாடசாலை, கச்சேரி -நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1)க.வைகுந்தநாயகி, 5ஆம் வட்டாரம், நயினாதீவு.

(2) இ.சதீஸ்குமார், பராசக்தி மில், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு.

(3) வி.லம்போதரன், [illegible], கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(4) சு.கோமதி, கண்டி வீதி, நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

(5) செல்வி.சி.காஞ்சனா, பண்ணாகம், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் தூரிகை


ச.மதுராஜினி, தரம் - 9, கொழும்புத்துறை இந்து மகா வித்தி.


ஸ்ரீ.சிந்தூர்ஜன், தரம் - 7, யாழ்.மத்திய கல்லூரி.


இ.அபிநயா, தரம் - 4, யா/முத்துக்குமாரசுவாமி ம.வித்தி.


த.சிறீபதி அதிகாரம், தரம் - 4, பன்னாகம் மெய்கண்டான் ம.வித்தி.


வி.கஸ்தூரி, தரம் - 4 பி, யா/கண்டுக்குளி மகளிர் கல்லூரி.



ம.மதுஷா, தரம் - 8, யா/மெதடிஸ்த பெ.உ. பாடசாலை.


செ.தனுஷா, தரம் - 8 எவ், யாழ்.இந்துக் கல்லூரி.

## விடுகதை சொல்லப் போறோம்

1. நீலவானம் எல்லாம் வெண் முத்து. அது என்ன?
   **நட்சத்திரம்**
2. வெப்பத்தைக் கண்டால் கண்ணீர் வடிப்பான். அவன் யார்?
   **பனிக்கட்டி**
3. பச்சையில் கொடி காட்ட கறுப்பன் கூவிக் கொண்டு போவான். அது என்ன?
   **புகைவண்டி**
4. உடல் கறுக்கும். பளீச் பளீச் என்பார். பட்டாசு வெடிக்கும் பின்பு பொழிவார். அவர் யார்?
   **மழை**
5. எலும்பில்லாதவன் பல நேரம் வினை வம்புக்கு வழிவகுப்பான். அவன் யார்?
   **நாக்கு**
6. சின்னவனைப் பெரியவன் விரட்டுவான். எதில்?
   **கடிகாரத்தில்**
7. தலைக்கு மேல் விளக்கு வைத்திருப்பான். அவன் யார்?
   **மின்மினிப்பூச்சி**
8. ஏழு நிறம் கொண்டு நீ தோன்றுவாய். உன் வருகையால் பூமி மகிழ்ந்திடும். அது என்ன?
   **வானவில்**
9. பலவண்ண நிறங்கொண்டு பூஞ்சோலைகளில் பாடித் திரிந்து வட்டமிடுவார் சிங்காரத் தோற்றம் கொண்ட அவர் யார்?
   **வண்ணத்துப் பூச்சி.**
10. ஊதினால் பறப்பான். சில நேரம் வெடிப்பான். அவன் யார்?
   **பலூன்.**

**ஸ்ரீ.கோபிதன், தரம் 8,**
**யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி.**



## ஏமாற்றாதே! ஏமாறாதே!

குள்ள நரி ஒன்று பல நாள்களாகப் பட்டினியாக இருந்தது. காடெல்லாம் அலைந்து களைத்துப்போய்விட்டது. இறுதியாக ஒரு கற்பாறை அருகில் ஓய்வெடுத்துக் கொண்டது. இந்த நிலையில் எது கிடைத்தாலும் அதனை உண்பதற்குத் தயாராக இருந்தது.

அப்போது குயில் ஒன்று அதன் கண்களில் பட்டது. அதனருகில் சென்று ''அன்பான குயிலே! எப்போது பார்த்தாலும் உயரமான இந்தக் குன்றிலிருந்து பாடிக்கொண்டிருக்கிறாயே! நீ தூங்குவதில்லையா?'' என்று இரக்கமாகக் கேட்டது அந்த நரி. ''நான் எப்பொழுதும் பாடுவதில்லையே. பாடவேண்டும் என்று விரும்பும் போதுதான் பாடுகிறேன்'' என்று பதிலளித்தது குயில்.

''இல்லை நீ பொய் சொல்கிறாய்'' என்றது நரி.

''நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்'' என்றது குயில்.

''நீ தூங்குவது உண்மையானால் ஒரு முறை என்னருகில் வந்து தூங்கிக் காட்டு பார்க்கலாம்'' என்று நரி சொன்னதைக் கேட்டுக் குயில் இறங்கிவந்தது.

தனது தலையை இறக்கைக்குள் மறைத்துக் கொண்டு தூங்கிக் காட்டியது. இதுதான் தருணம் என நினைத்த நரி அதை ''லபக்'' எனக் கௌவியது. நரியின் வாய்க்குள் குயில் தத்தளித்தது. மூடத்தனத்தால் அகப்பட்டதை நினைத்துக் குயில் வேதனைப்பட்டது. ஆனால் தளர்ந்து போய்விடவில்லை. தப்புவதற்கு முயற்சி செய்தது.

''சகோதரரே! நான் உண்பதற்குச் சுவையாக இருக்கும் என நினைக்கிறீரா'' என நரியை வினாவியது.

நரி பதில் ஏதும் கூறாமல் தலையை மட்டும் ஆட்டியது. குயிலுக்கு ஏமாற்றமாகிப் போனது. இருந்தாலும் சளைக்காமல் கூறியது.

''சகோதரரே! நீ என்னை உண்பது சரி. ஆனால் உண்பதற்கு முன்னர் என்னை முழுமனத்துடன் வாழ்த்திவிட்டு உண்டால்தான் நான் நன்கு சுவையாகவும், செரிமானமாகக் கூடியதாகவும் இப்பேன்'' என்றது குயில். நரிக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

நரி சந்தோசத்தினால் வாழ்த்துவதற்காக வாயைத் திறந்தது. அப்போது சட்டெனப் பறந்த குயில் ஏளனத்தோடு நரியைப் பார்த்தது. தன் புத்திசாலித்தனத்தினாலும் விடாமுயற்சியாலும் தப்பித்துக் கொண்டதை எண்ணியபடி, குயில் தனது சிறகுகளை அடித்தபடி உயரப் பறந்துகொண்டிருந்தது.

*எந்தத் தருணத்திலும் ஒருவரையும் நீ ஏமாற்றாதே!* ○○○

**ஜெ.ஜெயவர்மன்**, *தரம் - 9,*
*யா/மகாஜனக் கல்லூரி.*




## மழை

வானம் கறுக்குது
மழை பெய்யப் போகுது
மின்னல் மின்னி மறையுது
இடி இடிக்கப் போகுது
வெள்ளம் வரப் போகுது
'நிஷா' வீசப் போகுது
மரம் சரியப் போகுது
மாந்தர் அதைத் தடுப்போமே!



**சூரியகுமாரன் கஜேந்,**
தரம் -4பி,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.



## பழங்களுக்கான பிறப்பிடங்கள்

1. திராட்சை - கஸ்பியன் கடற்பகுதி
2. அன்னாசி - பிரேசில்
3. வாழை - தென்கிழக்கு ஆசியா
4. கொய்யா - மத்திய அமெரிக்கா
5. பப்பாசி - மெக்சிக்கோ
6. முந்திரிகை - பிரேசில்
7. மாம்பழம் - தென்கிழக்கு ஆசியா
8. பலாப்பழம் - இந்தியா
9. தோடம்பழம் - சீனா
10. நெல்லி - இந்தியா

**ய.கோபிகா,**
தரம் -8சி,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.






''அப்படியானால் மாயத்தீவில் மந்திரக்கிழவி இப்போது இல்லையா?'' என்று ரகசியக் குரலில் கூவினான் இந்திரவர்மன்.

''இராட்சதர்கள் தமக்கிடையே உரையாடியதை வைத்துப் பார்க்கும் போது அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்றான் சந்திரவர்மன்.

''அப்படியானால் நாம் உடனடியாகக் காரியத்தில் இறங்குவதற்கு இதுவே ஏற்ற தருணம்'' என்று கூறிய இந்திரவர்மன், தன்னைப் பின்தொடருமாறு சந்திரவர்மனுக்குச் சைகை காட்டி விட்டு மெதுவாக ஊர்ந்த படியே முன்னேறத் தொடங்கினான். சந்திரவர்மனும் மறு பேச்சின்றி அவனைப் பின்தொடரலானான். மாயத்தீவின் மண்கூட விநோதமாக இடிந்தது. வெட்டி எறியப்பட்ட இறைச்சிபோல மென்மையான தன்மை கொண்டதாகத் தரை இருந்தது. எனினும் வயிற்றைக் குமட்டுகின்ற துர்நாற்றம் ஒன்று அதில் இருந்து வீசிக்கொண்டே இருந்தது. எப்படியாவது தப்பி விடவேண்டும் என்ற வெறியுடன் நகர்ந்துகொண்டிருந்த இளவரசர்கள் இவற்றை எல்லாம் பொருட்படுத்தவில்லை. அவர்களால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு விரைவாக நகர்ந்து கொண்டே இருந்தார்கள். கடைசியாக அவர்கள் மண்டை ஓடுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு மாளிகையைக் கண்டனர். அந்த மாளிகையில் இருந்து ''ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்'' என்ற அவலக் குரல் எழுந்தது. *(தொடரும்)*

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் சொந்த ஆக்கங்களான கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? கீழுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங் கள். தரமானவை பிரசுரமாகும். ஏற்கனவே நூல்கள், பத்திரிகைகளில் வெளியானவற்றை அனுப்பாதீர்கள். அது உங்கள் திறமையை மழுங்கடித்து விடும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்



## உங்களுக்கும் பரிசில்கள்

*மாணவர்களே! உங்களின் ஆற்றலை மேம்படுத்துவதுடன் ஊக்கத்தையும் தருவதற்கு உதயனில் வாரந்தோறும் புதிய அம்சம் ஒன்று மலர்கிறது. 'விடை தெரியுமா?' பகுதியில் பங்கு பற்றி உங்கள் பொதுஅறிவைப் பெருக்கிப் பரிசில்களையும் வெல்லுங்கள்.*

### விடை தெரியுமா? - 01

1. 2008 ஆம் ஆண்டு சீனாவில் நடந்த ஒலிம்பிக்கில் அதிக தங்கப் பதக்கங்களைப் பெற்றவர் யார்?
2. அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா எப்போது பதவியேற்றார்?
3. யாழ்.குடாநாட்டில் பொக்கணை நீரூற்று அமைந்துள்ள பிர தேசத்தின் பெயர் என்ன?
4. இலங்கையில் இலவசக்கல்வியின் தந்தை எனப்படுபவர் யார்?
5. 'மிக்கி மவுஸ்' என்ற புகழ்பெற்ற சிறுவர் கார்ட்டூனை உருவாக்கியவர் யார்?

**இவற்றுக்கு உங்களுக்கு விடை தெரியுமா?**

தெரிந்தால் 10.02.2009 இற்கு முன்னர் அனுப்பி வையுங்கள். சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கண்ணனைக் கவிதையில்......

(13 பக்கத் தொடர்ச்சி...)

பாரதியும் உடலும் உள்ளமும் இன்னலுறும்போது இன்பமூட்டும் மருத்துவனாகவும், இம் மண்ணுலகில் பிழைக்கும் வழியினை ஒரு பேச்சிலுரைப்பவன் என்றும், பாடிக் கண்ணன் உதவி செய்யும் பாங்கினை,

''ஆபத்தினில் வந்து பக்கத்திலே நின்று
அதனை விலக்கிடுவான் - சுடர்த்
தீபத்திலே வீழும் பூச்சிகள் போல்வருந்
தீமைகள் கொன்றிடுவான்''
என்று அறிவுறுத்துகிறார்.

நல்ல நண்பன் தன் நண்பன் தவறிழைக்கும்போது கண்டும் காணாமல் இருப்பவனல்லன். குறை காணுங்கால் இடித்துக் கூறித் திருத்தியும் நிறை காணுங்கால் பாராட்டியும் வாழ்பவனே நல்ல நண்பன் என்பதனை வான்மறை வள்ளுவம்,

''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற் சென்றிடித்தற் பொருட்டு''

என விளக்குகிறது. கண்ணனைத் தோழனாகக் காணும் பாரதியும்,

''உள்ளத்திலே கருவங் கொண்ட போதினில்
ஓங்கியடித்திடுவான் - நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு
காறியுமிழ்ந்திடுவான் - சிறு
பள்ளத்திலே நெடுநாளழுகுங் கெட்ட
பாசியை யெற்றிவிடும் - பெரு
வெள்ளத்தைப் போலருள் வார்த்தை சொல்லி
மெலிவு தவிர்த்திடுவான்''

என்று உற்ற தோழனின் உயர்வினைப் பாடி மகிழ்கின்றார். நம்மையும் மகிழ்விக்கிறார்.

இத்தகைய உயிர்த் தோழனை இழக்கும் நிலை வந்து விட்டால் தன் வாழ்வே இருண்டு போகும் என்பதனை,

''கண்ணன்
தன்னையிழந்து விடில் ஐயகோ! பின்
சகத்தினில் வாழ்வதிலேன்''

என்று உயிர் நண்பனை இழந்தபின் இவ்வுலகில் உயிர் வாழ்தல் இயலாது எனப் பாடியுள்ளார்.

உண்மைத் தோழனின் இயல்பு தன் தோழனின் உள்ளக் கருத்தை உணர்வதாக இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்தைத் தன் உள்ளத்தில் தேக்கிய பாரதி,

''நாட்டத்திற் கொண்ட குறிப்பினை இஃதென்று
நான் சொல்லுமுன் உணர்வார்'' எனக் கூறுகிறார்.

இறைவன் மக்களுக்கு அருள் செய்யக் காத்திருப்பவன். அத்தகைய இறைவனே தோழனாகும் போது விரைவாகச் செயல்படுகிறான் என்பதை,

''அழைக்கும் பொழுதினில் போக்குச் சொல்லாமல்
அரை நொடிக்குள் வருவான்'' என்கிறார். - நன்றி: இலக்கியத் தென்றல்.

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 09 ★ 05 ★ 1939



ஆண்டவன் அடியில் 02 ★ 02 ★ 1998

### அமரர் கணபதிப்பிள்ளை ஜெகதீசன்

(அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவரும் கட்டட ஒப்பந்தகாரரும்)

திதி: 01.02.2009

**உங்கள் புன்முறுவல் பூத்த முகம் - மலர்ந்து
பதினொரு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டகலாது**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"கலையகம்",
தபாற் கந்தோர் அருகில்,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் நாகநாதி வைத்திலிங்கம் (சின்னத்துரை)

மலர்வு:- 1928.12.15
மறைவு:- 2008.12.19

''உயிருள்ளவரை எம்மை அன்பு செய்தாய்
எம்முயிருள்ளவரை உனை மறவோம்''

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த அமரரின் பிரிவுச் செய்தி அறிந்ததும் உடன் உதவிய அயலவர்களுக்கும், உறவினர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும் மற்றும் தொலைபேசி, தந்திமூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

230,இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## விற்பனைக்கு

NPJB-XXXX இலக்க ஆட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: சுப்பிரமணியம் சித்திரன்,
கயிலாயபிள்ளை வீதி,
கச்சாய் ரோட்,
சாவகச்சேரி.

## வீடு விற்பனைக்கு

இரத்மலானை, சொய்ஸாபுரவில் 2 படுக்கை அறைகளைக் கொண்ட, BLOCK N7 கீழ் மாடி வீடு உடன் குடிபுகக் கூடிய நிலையில் விற்பனைக்குண்டு. காலி வீதியில் இருந்து 50 மீற்றர். விலை 2.4 மில்லியன்.

தொடர்பு: 077-2655890.

## சாவகச்சேரி இந்துவில் நிறுவுநர் நினைவுநாள்

யாழ்ப்பாணம், பெப்.1

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நிறுவுநர் நாள் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் ஆ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் கலந்து கொள்வார்.

கல்லூரியின் 'தாமோதரன்' சஞ்சிகை வெளியீடும் இடம்பெறும். சஞ்சிகை வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் நிகழ்த்துவார். (202-207)

## விவாதப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்.மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றமும், விவாத மன்றமும் இணைந்து விவாதப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன எனக் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தெரிவித்துள்ளார். (9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பும்



கடந்த 02.01.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த

### திருமதி தர்மசீலன் நாகேஸ்வரி

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அனுதாபச் செய்தி வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி லேன், அரசடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

சகோதர, சகோதரிகள்,
மருமக்கள்.




## வெளிநாடுகளில் உயர்கல்வி

ரஷ்யா (Russia), பெலாரூஸ் (Belarus), போலந்து (Poland),
உக்ரைன் (Ukraine), மலேசியா (Malaysia), சிங்கப்பூர் (Singapore)

★ MBBS/MD ஆங்கில மொழி மூலம் (6 வருடங்கள்)

- உலகத்தரம் வாய்ந்த பிரபல பல்கலைக்கழகங்களில் (Russia, Belarus) படித்து டாக்டராகுங்கள்.
- இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC), WHO, Educational Commission for foreign Medical Graduates (ECFMC-USA) போன்ற உலக மருத்துவ நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்கள்.

★ சகல துறைக் கற்கை நெறிகள்

- கலை, வர்த்தகம், சட்டம், முகாமைத்துவம், உளவியல், மனித உரிமைகள், Nursing, உயிரியல், உடற்கூற்றியல் இன்னும் பல கற்கை நெறிகள்.
- Full time - 5 Years, Post Graduate Studies - 3 Years, Master Programme - 1 Year
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்
- 14-21 நாள்களுக்குள் விசா - 100% உத்தரவாதம்
- வங்கி நிலுவை, ஸ்பொன்சர் தேவையில்லை
- விடுமுறைகளுக்கு Germany, Poland சென்றுவர விசேட ஒழுங்குகள்
- பெண்களுக்குப் பாதுகாப்பான விடுதி வசதிகள்
- யாழ். மாணவர்கள் குழுவாகப் பயணம் செய்ய ஏற்பாடுகள்
- பாஸ்போட் விரைவில் பெறுவதற்கான பிரத்தியேக ஏற்பாடுகள்
- கொழும்பு சென்று அடுத்த நாளே பயணம் செய்வதற்கான ஒழுங்குகள்

OVERSEAS STUDENT PROGRAMME, இல.02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 250555, 021 222 9042, 0115669571.

(51703)

## யாழ்.நகரில் ஒரு புதுமையின் தொடக்கம்

## LITTLE CHUTTYS' MONTESSORI

**ஆரம்பம் : 28.02.2009**
**வயது : 3 முதல்**

தமிழ், ஆங்கில மொழி மூலமான அங்கீகாரம் பெற்ற புதிய பரிணாம வளர்ச்சிக்கான ஆயத்தக்களம்.

DR.MARIA MONTESSORI ஆல் உருவாக்கப்பட்ட ஐம்புலன்களின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையானதொருகல்வி உபகரண செயன்முறைகள் (SENSORIAL MATERIALS), இலகு வழி எழுத்து, வாசிப்பு (PHONETIC READING) பயிற்சிகள், சிறுவர் பாடல்கள், கதைகள் போன்ற திரைப்படக் காட்சிகள் உள்ளடங்கலான மாறுபட்ட கல்விச் சூழல்

வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டும்.

- நிர்வாகி.

தொலைபேசி இலக்கம்: 0715357592

இல.05, புறாடி முன் ஒழுங்கை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.


## நினைவஞ்சலி

சின்னப்பு சின்னத்தம்பு (ஜே.பி)
இளைப்பாறிய தபாலதிபர்
19 ஆம் ஆண்டு

உதயம் 1907 . 08 . 02



மறைவு 1990 . 03 . 18

சின்னத்தம்பு சோமசுந்தரம் (Rtd. MLT)
1ஆம் ஆண்டு

உதயம் 1939 . 10 . 24



மறைவு 2008 . 02 . 12

ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறவில்லை மனம் எமக்கு உயிரோடு கலந்துவிட்ட உங்கள் நினைவுகள் நாம் இவ் உலகில் இருக்கும் வரை நிலைத்திருக்கும் அப்பா.

தகவல் :
குடும்பத்தினர்
B45 1/3 N.H.S Flats,
மாளிகாவத்தை. (கொழும்பு - 10)

உங்கள் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மகள்மார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு - இரட்டங்காலி
# முருகப் பெருமான் தேவஸ்தான
# மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புமலர் 01.02.2009

## நயினாதீவில் முருகப் பெருமானுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா

நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் தென்பால் இரட்டங்காலி என்னும் அழகிய பதியில் அமர்ந்திருந்து அடியார்களுக்கு அருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கும் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ முருகப் பெருமானுக்கு இன்று மூன்றாவது ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன பிரதிஸ்டா மஹாகும்பாபிஷேகப் பெரும் சாந்திப் பெருவிழா நடைபெறுவதையிட்டு சைவ மக்களாகிய நாம் அனைவரும் பெரும் மனநிறைவோடு மகிழ்வடைகின்றோம். 28.01.2008 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற பாலஸ்த்தாபனத்தைத் தொடர்ந்து எம்பெருமானுக்கு செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட முக்கிய திருப்பணிகள் யாவற்றையும் செவ்வனே நிறைவேற்றி 1995 ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகம் செய்யப்பட்ட சஷ்டித் திதியும் ரேவதி நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியது முருகனின் திருவிளையாடல் என்றே யான் கருதுகின்றேன்.

இந்த நேரத்தில் திருப்பணி வேலைகள், கும்பாபிஷேகப் பெருவிழா போன்றவற்றை நிறைவேற்றத் தேவையான சகல உதவிகளையும் வழங்கிய முருகன் அடியார்களுக்கு முருகப் பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு இப் பாரிய பணியில் பங்கு கொண்ட அனைவருக்கும் அறங்காவலர் சபையின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பொ. பத்மநாதன்,
*தலைவர், பரிபாலனசபை, இரட்டங்காலி ஸ்ரீ முருகன் கோயில், நயினாதீவு-2.*

## துன்ப துயரங்கள் நீங்கி சுபீட்சம் மலரட்டும்

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படும் நயினாதீவின் வடபால் அமைந்துள்ள இரட்டங்காலி முருகப் பெருமானின் குடமுழுக்குப் பெருவிழாவின் சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆலய திருப்பணி வேலைகளுக்கு இக்கால கட்டத்தில் அல்லும் பகலும் பெரு முயற்சி எடுத்து முடிந்த அளவில் திருப்பணி வேலைகளை நிறைவேற்றியுள்ள ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்களைப் பாராட்டுகின்றேன்.

குடமுழுக்குப் பெருவிழாவோடு நாட்டில் சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் நிலவும் வகையில் இரட்டங்காலி முருகப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சொர்ணலிங்கம் பகீரதன்,
*அதிபர், யா/நயினாதீவு ம.வி.*

## முருகனுக்குப் பெருஞ்சாந்தி பெருவிழா ஆசிகள்

வரலாற்றுப் பெருமைமிக்க நயினாதீவு இரட்டங்காலி அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புற நடந்தேற அறங்காவலர் சபையினரின் நல்லாசி வழங்குவோர்:

பெ.திருநாவுக்கரசு
சோ.குமரகுரு
ந.சாந்தரூபன்
பு.திலீப்குமார்
கா.பாஸ்கரன்
சோ.அம்பிகைபாலன்
கா.சிவகடாச்சம்
வீ.சிவராசா
திருமதி.த.லலிதாதேவி
திருமதி நா.ரவீந்திரன்
திருமதி தே.மங்களேஸ்வரி
பொ.மனோகரன்.

## முருகன் ஆலய பெருவிழா

நயினாதீவு-2ஆம் வட்டாரத்தில் வரலாற்றுப் பெருமை கொண்ட இரட்டங்காலி முருகனுக்கு இன்று பெருஞ்சாந்திப் பெருவிழாவும்- மஹாகும்பாபிஷேகமும் இடம்பெறுகின்றது.

இந்நன்நாளில் எல்லா வரனும் பெற்று பேரின்பப் பெருவாழ்வுவாழ எம்பெருமான் தாழ்வணங்கி கும்பாபிஷேக பெருவாழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்க வேண்டுமெனமிக்க அன்புடன் அழைக்கின்றேன்.

நயினை-சண்முகநாதன் கோகுலராசா, *செயலாளர், இரட்டங்காளி முருகன் ஆலயம்.*

## உபதலைவரின் ஆசிச்செய்தி

நயினாதீவு இரட்டங்காலிப் பதியில் எழுந்தருளி இருந்து அருள் பாலிக்கும் முருகப் பெருமானுக்கு இன்று பெருஞ்சாந்திப் பெருவிழா இடம்பெறுகின்றது.

இந்நன்நாளில் இருகரம் கூப்பி நிற்கும் அடியார்களுக்கும், நால்வேத நெறி நின்று சாந்தி விழா செய்கின்ற சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் பலவகையில் வளம்நல்கி ஊக்குவித்த முருகன் அடியார்களுக்கும் எல்லா மங்கலமும் கிடைக்க முருகன் அருள் வேண்டி நிற்போம்.

நயினை-நவரத்தினம் மோகனரூபன்,
உப தலைவர், இரட்டங்காலி முருகன் ஆலயம்.



## ஆசியுரை

இரட்டங்காலிப் பதியில் எழுந்தருளியிருந்து அருள் சுரக்கும் முருகப் பெருமானுக்கு எனக்குத் தெரிய மூன்றாவது பெரும்சாந்தி விழா இன்று நடைபெறுகின்றது.

இந்தப் பெருவிழாவை இன்று செய்து முடிப்பதற்குமுன் இத் திருத்தலத்தின் புனரமைப்பு வேலைகளையும், கட்டுமானங்களையும் செய்து முடிப்பதற்கு ஆலய பரிபாலன சபையினர் பட்ட இடர்கள், தடங்கல்கள் சொல்ல முடியாதவை, எழுத முடியாதவை. அந்த அளவிற்கு முருகன் அவர்களை நன்கு புடம்போட்டு எடுத்துவிட்டான். ‘நன்றேவரினும் தீதே விளைகினும் யாம் அறுவது ஒன்றேயும் இல்லை’. இது உன் பணி எம் கடன் பணி செய்வது உன் கடன் எம்மைத் தாங்கி நெறிப் படுத்துவது என்று நின்று செயற்பட்டார்கள்.

இன்று மனம் களிப்பப் பெரும் சாந்தி விழாக்கண்டு உளம் பூரித்து நிற்கும் அறங்காவலருக்கும், பெரும் சாந்தி விழாக்கண்டு கரம் கூப்பி நிற்கும் அடியாற்கும், நால்வேத நெறி நின்று சாந்தி விழா செய்த சிவாச்சாரிய பெருமக்களுக்கும் பலவகையில் வளம் நல்கி ஊக்கி வித்த முருகனடியாற்கும் எல்லா மங்கலமும் கிடைக்க முருகன் அருள் வேண்டி நிற்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

ஆ.தியாகராஜா, தலைவர்,
*அறங்காவலர் சபை, நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.*

## ஆசிச்செய்திகள்

நயினை பதியில் அமைந்த இரட்டங்காலி என்னும் பெரும்புலத்தில் கந்தபுராண கலாசார விழுமியங்கள் பேணப்பட்டும், போற்றப்பட்டும் வரும் இரட்டங்காலி முருகனுக்கு இன்று நடைபெறும் பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புற நடைபெற எல்லாச் சக்திகளும் கிடைத்திட வணங்குகின்றேன்.

சின்னத்துரை ஜெகநாதன், *போஷகர்.*
ந.திருச்செல்வம், *பொருளாளர்.*

## குடமுழுக்குப் பா

தக்கவகை காரியங்கள் யாவுமாற்றி
தத்துவஞ் செய் கிரியைகளும் தவறாதின்று
முக்கனிகள் பாலிழநீர் தேன் சொரிந்து
முறையாகத் திரவியங்கள் யாவும் சேர்த்து

குக்குடனே குமரேசா குளிர்த்தி செய்தோம்
குறவள்ளி தெய்வானை உடனிருந்து
விக்கினங்கள் வேரறுக்கும் இரட்டங்காலி
வேலவனே குடமுழுக்கு ஆடமரையா

அம்பிகையின் திருமகனாய் அவதரித்து
அலைகடல் சூழ் நயினை நடு நாயகனாய்
நம்பி வரும் அடியவர்தம் இடர்களையும்
நால்வேதப் பொருளோனே நாட்டிலுள்ள

வெம்பிணிகள் வேதனைகள் யாவும் போக்கி
வினை களைந்து அருளமுதை நாளும் தேக்கி
தும்பி முகன் தம்பியரே இரட்டங்காலி
சேயோனே குடமுழுக்கு ஆடமரையா

வில்வமரச் சோலை செறி நயினை வாழும்
வேலவனே வள்ளி தெய்வயானையோடு
அல்லல் அறுத்து ஆனந்தம் அளிக்கும் தேவீ
அன்பராகத் தமர்ந்தோனே ஆனஞ்சாடி

கல்வி செல்வம் வீரம் எல்லாம் அருளும் தேவே
கந்தாவுன் கழலடியே தஞ்சமென்று
எல்லவரும் போற்று மெழில் இரட்டங்காலி
இள முருகா குடமுழுக்கு ஆடமரையா

கா.பொ.இ.குலசிங்கம்,
*கிராம அலுவலர், நயினாதீவு.*

## இரட்டங்காலி முருகனுக்கு கும்பாபிஷேகம்

“அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய”
- கந்தபுராணம்

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தில் இன்று பல நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கோயில் கொண்டருளி அருள்பாலித்து வரும் ஸ்ரீ முருகன் ஆலய மகாகும்பாபிஷேகம் இவ்வாண்டு பெப்ரவரி முதலாம் திகதி மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளமை முருகன் அடியார் ஒவ்வொருவருக்கும் பேருவகை அளிப்பதாகவுள்ளது. நயினை முருகன் அடியார்கள் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இக் கும்பாபிஷேக விழா இந்த ஆலய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்று என்றால் மிகையாகாது.

முருகன் திருவிளையாடல் பலவற்றைத் தம் வாழ்வில் அனுபவித்த பலர் எம் பெருமானின் திருப்பணியில் தம்மால் இயன்றளவு உதவிபுரிந்து அழகிய ஆலயமாக அழகுத் தெய்வம் முருகனுக்குக் காணிக்கையாக்கியுள்ளனர். இக்கட்டான இக் காலகட்டத்தில் கலியுகத் தெய்வம் கந்தப் பெருமானின் திருவடிகளைச் சிக்கெனப் பிடித்து சித்தம் தெளித்து, சிந்தை மகிழ்ந்து இப்பிறப்பின் பெரும் பயன் அடைய வேண்டுமென முருகப் பெருமானை மனம், மொழி, மெய்யினால் பிரார்த்திக்கின்றேன்.

இப்பாரிய புனரமைப்பு வேலைகளை மிக்க பற்றுறுதியுடன் அல்லும், பகலும் அயராதுழைத்துச் செய்து முடித்து, நித்திய, நைமித்திய பூசைகளைச் சிரத்தையுடன் செய்துவரும் முருகன் ஆலய பரிபாலன சபையினர் ஒவ்வொருவரையும் பாராட்டுவதுடன் அவர்கள் வாழ்வில் எல்லா நலனும் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ எம்பெருமான் முருகப் பெருமான் அருள்பாலிப்பானாக. முருகன் அருளால் அவன் தாழ் வணங்கி கும்பாபிஷேகப் பெருவிழாவில் அடியார்கள் பல்லாயிரக்கணக்கில் கலந்து சிறப்பிக்க வேண்டுமென மிக்க அன்புடன் அழைக்கின்றேன்.

“உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே”- கந்தரனுபூதி

ப.க.பரமலிங்கம், ஜே.பி.
*இலங்கை நிர்வாக சேவை, வாழ்நாள் போஷகர், இரட்டங்காலி ஸ்ரீ முருகன், ஆலய பரிபாலனசபை, தலைவர், நயினாதீவு, சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம், தலைவர், வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு* (PPSC - NP)

## பிரதேசசபைச் செயலாளரின் செய்தி

அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகத் திகழ்கின்ற புவனேஸ்வரி பீடம் அமையப்பெற்றது. நயினாதீவு இத்தீவிலே பல ஆலயங்கள் வளர்ச்சி பெற்று விளங்குகின்றன.

சித்தர்களும், ஞானிகளும் வாழ்ந்த இத்தீவில் நயினை இரட்டங்காலி முருகன் ஆலயத்தின் மகிமை பல அடியார்கள் கூற யான் கேட்டு உள்ளம் பூரிப்படைந்திருக்கின்றேன். இன்று அக் கோயிலில் பல்வேறுபட்ட திருப்பணிகள் நடைபெற்று மகா கும்பாபிஷேக விழா நடைபெறுவதையிட்டு பெருமை அடைகின்றேன். அத்தோடு எல்லா உயிர்களும் நல்வாழ்வு வாழ்வதற்கு முருகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

*“இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க”*

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,
*செயலாளர், பிரதேச சபை, வேலணை.*

## மகாகும்பாபிஷேக ஆசிச்செய்தி

நயினாதீவு-ஸ்ரீமுருகன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது. வரலாற்றுப் பெருமை கும்பாபிஷேக நிகழ்வில் நாடளாவிய ரீதியில் இருந்து மக்கள் வருகை தந்து இறைவனின் அருட்கடாச்சத்தினைப் பெறவுள்ளனர்.

எல்லோர் வாழ்விலும் சாந்தி, சமாதானம்- அமைதி ஏற்படவும்- இன்றையநாள் உலக இந்துக்களால் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுப் பெருஞ்சாந்தி பெருவிழா சிறப்புறவேண்டுமென ஆசிகூகின்றேன்.

நயினை-சிவஸ்ரீ.கைலாயநாத வாமதேவக்குருக்கள்
*ஆசீர்வாதஸரபம்-பிரதிஸ்டாதிலகம் -கும்பாபிஷேக பிரதமகுரு.*

## புனிதபூமி முருகனுக்கு பெருவிழா

கடல்கடந்த நயினை புனித பூமியில் எழுந்தருளியுள்ள இரட்டங்காலி முருகப்பெருமானுக்கு இன்று பெருஞ்சாந்தி பெருவிழா இடம்பெறுகின்றது.

இந்நந்நாளில் கும்பாபிஷேகம் சிறப்புற்று நடைபெற அடியார்களுக்கும், சிவாச்சாரிய பெருமக்களுக்கும் பலவகையில் நேரடியாகவும்- மறைமுகமாகவும் வளம் நல்கி ஊக்குவித்த முருகன் அடியார்களுக்கும் எல்லா மங்கலமும் முருகன் அருள் வேண்டி நிற்போம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

செ.ரமேஷ். (ச.நீ)
*M.A.(ECON), M.A.(Development)*
*தலைவர் HSCMF& (நவாலி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையாட்சி நெருங்கி விட்டது

''காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற் 1:15) என்று இறைமகன் இயேசுகிறிஸ்து நம் எல்லோருக்கும் பகிரங்க அழைப்பு விடுக்கின்றார். அந்த அழைப்பின் நோக்கம் நாம் பாவ வழியினைவிட்டு விலகி நற்செய்தியை விசுவாசித்து தூய ஆவியின் அருட் கொடையை பெற்று அதன்படி வாழ்ந்து புதுப்படைப்பாக மாறும் போது இறையாட்சியை உரிமைச் சொத்தாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதேயாகும். ஆனால் இன்று எம் வாழ்க்கை இறையரசிற்கு உகந்தவையாக இருக்கின்றதா? என்று நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தினமும் நாம் திருப்பலிப் பூசைகளுக்கு செல்கின்றோம், மறை உரைகளுக்கு செவி சாய்க்கின்றோம், இறை இரக்க வழிபாடுகளை நடத்துகின்றோம், திருச்செபமாலை சொல்கின்றோம், இறைதியான வழிபாடுகளில் கலந்து கொள்கின்றோம், பலவிதமான பக்திச் சபைகளில் இணைந்து பணியாற்றுகின்றோம். இவையனைத்தும் எம்மிடம் இருப்பதினால் நாம் இறையாட்சிக்கு தகுதியுடையவர்கள் என்று எண்ணுகின்றோம்.




ஆனால் இவையணைத்தும் நம்மிடமிடமிருக்கின்ற போதும் தூய ஆவியானவரின் அருட் கொடையை பெற்று அதன்படி வாழாமல் ஊனியல்புகளுக்கு அடிமைப்பட்டு வாழ்கின்றவர்களாகவே நாம் இருக்கின்றோம். அப்படி வாழ்கின்ற போது எப்படி நம்மால் இறையாட்சிக்குரிய தகுதியை பெற்றுக் கொள்ள முடியும்?

இறையாட்சி பற்றி திருத்தூதர் பவுல் கூறுகையில் ''இறையாட்சி என்பது உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாக் கொண்டதல்ல. மாறாக தூய ஆவி ஆருளும் நீதி, சமாதானம், அமைதி, மகிழ்ச்சி,அன்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய இறையாட்சி மனப்பான்மையோடு கிறிஸ்துவுக்கு பணி புரிவோர் கடவுளுக்கு உகந்தோராக இருப்பர். (உரோ 14:17-18) ஆகவே திருத்தூதர் குறிப்பிடும் தூய அவியின் அருட் கொடையை பெற்று அதன்படி வாழுகின்ற போது நாமும் இறையாட்சியின் பங்காளர்களாக இருப்போம். அதற்கான தகுதியை பெற்றிட நம் உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும்.

க.அருள்நேசன்
குருநகர்.

# தமிழர் பிரதிநிதியாக சட்டசபையில் முதன் முதல் நியமனம் பெற்றவர் பொ.குமாரசாமி

**பெப்ரவரி 1 1895**

பொ.குமாரசாமி சட்டசபையில் தமிழ்ப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றத்திற்குப் பதிலாக சட்டசபை (Legistative council) என்ற அமைப்பு இருந்தது. சட்ட சபையிலேயே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சட்ட சபையில் ஒவ்வொரு இனத்தின் பிரதிநிதியாகவும் ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். 1893 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி பொன்னம்பலம் குமாரசாமி சட்டசபையில் தமிழர்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் ஆகியோரின் மூத்த சகோதரனே முத்துக்குமாரசாமி.


## பொன்னம்பலம் சகோதரர்களில் மூத்தவர் இவர்

இவரது தாய் மாமனான சேர்.முத்துக்குமாரசாமி பற்றி ஏற்கனவே பார்த்துள்ளோம். சட்ட சபையில் முதல் தமிழ்ப் பிரதிநிதியாகப் பதவி வகித்த சேர்.முத்துக்குமாரசாமி அரிச்சந்திர புராணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பொன்னம்பல முதலியாரின் பிள்ளைகளை மும்மூர்த்திகள் எனக்கூறினால் மிகையாகாது என நினைக்கிறேன். இவர்கள் மூவரையும் unique brothers GS observer பத்திரிகை வர்ணித்துள்ளதுடன் இவர்கள் மூவரும் தமிழர்களுக்கு மட்டுமன்றி முழு இலங்கைக்கும் புகழ் சேர்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

-தாண்டவன்

இணுவில்
திருவருள்மிகு ஸ்ரீபரராஜசேகர விநாயகப் பெருமான் ஆலய
மஹா கும்பாபிஷேகம்



வாறுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப்பரவி அஞ்சலி செய்கிற்போம்

மஹா கும்பாபிஷேகம்

சிறப்புற ஸ்ரீபரராஜசேகர விநாயகப் பெருமான் பாதாரவிந்தங்களைப் பணிந்து ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

கும்பாபிஷேகம்: தை மாதம் 16ஆம் நாள் இன்று (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணி

asianpaints
ஏசியன் பெயின்ற்ஸ்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாண இரும்பகம்
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/556759)

ஷரு மலி ரெக்னிக்கல் ஸ்பொட்
K.K.Sறோட், கோண்டாவில்(துரை வீதிக்கு அருகில் சிவம் ரெக்ஸ்ரைல்ஸ் மேல்மாடி)



மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள்
08.02.2009 ஆரம்பிக்கப்படுகின்றன.

பயிற்சிகள்:- 6மாதகால அடிப்படைத் தையல் பயிற்சிகள், 3மாதகால கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், பப்ரிக் Painting, பூ வேலை 10நாள் Facial, மணப் பெண் அலங்காரம், நக அலங்காரம்,

கிழமை நாள் வகுப்புக்களும் / சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பிக்கவுள்ளன.
மேலும் விவரங்களுக்கு தினமும் 10-3 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

(82323)
நிர்வாகத்தினர்.



உலக பிரசித்திப்பெற்ற பல்கலைக்கழக பட்டங்களுக்கு மகோன்னத நுழைவாயில் இதோ !

UK, US, Australian, New Zealand or Canadian?
WE DO OFFER A COMPREHENSIVE STUDENT PLACEMENT SERVICE.

Study in MALAYSIA
இலங்கையில் ஆகக்கூடிய மலேசிய பல்கலைக்கழக தெரிவுகளை நாமே தருகிறோம் !!
Nilai University College · Binary University College · HELP University College · SWINBURNE University of Technology · TOC · The One Academy of Communication Design · SEGi College · Taylor's University College · KDU College · KLIUC · MAHSA College · UCSI University

Study in SINGAPORE
விருந்தோம்பலின் சிகரம் சிங்கப்பூர் உங்களை வரவேற்கிறது !
6 மாதகாலம் வேலைவாய்ப்புடன் கூடிய கற்கை நெறிகள்.
psb Academy · The Tourism Academy@Sentosa · SPJ · Kaplan Singapore · SIM Global Education · informatics · RafflesDesignInstitute

MILLENNIUM CONCEPTS PTE LTD.,
225-3/2, காலி வீதி, கொழும்பு 4.
(பம்பலப்பிட்டி விசாகா வீதிக்கு அருகாமையில)
www.mclearninghub.net
info@mclearninghub.net

யாழில் விபரங்களுக்கு:
திரு. சேனாதிராஜா
0772 097 009

கொழும்பில் :
0714 - 90 49 49
0773 - 40 50 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## திருத்த முடியாத தி.மு.கவின் போக்கு

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சிக்குண்டு, யுத்தப் பேரழிவை எதிர்கொண்டு, அவலப்படும் பல லட்சம் சிவிலியன்கள் தொடர்பான விடயத்தில் தமிழகத்தில் கிளர்ந்தெழுந்திருக்கும் உணர்வெழுச்சியை மழுங்கடிக்கும் விதத்தில் தமிழகத்தின் ஆளும் தி.மு.க. அரசு நடந்து கொள்வது உலகம் வாழ் தமிழர்களைப் பெரும் வேதனைக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், வேதனைகளையும் பொறுக்க இயலாது - தாங்க முடியாது - முத்துக்குமரன் என்ற இளைஞன் தனக்குத் தானே தீ மூட்டி, நெருப்பில் வெந்து செத்திருக்கிறான்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை குறிப்பிடுகின்றமை போல முத்துக்குமரன் எரிந்தவன் அல்லன். விரிந்தவன். அவன் ஈழத் தமிழர் குறித்து தன் நெஞ்சிலிருந்த நெருப்பால் எரிந்தான். அந்த சோதிப் பெரு வெளிச்சம் ஈழத் தமிழருக்கு நிச்சயம் சக்தி தரும். நெருப்பில் எரியும் தேசத்தை எண்ணி நெருப்பில் எரிந்தவன் அவன்.

அக்கினியில் வெந்து தன்னுயிரைத் தியாகம் செய்ய முன்னர் தான் எழுதிய கடித வடிவ அறிக்கையிலே ஈழத் தமிழர்களின் இன்றைய அவல நிலையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியவர்கள் வரிசையிலே தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியையும் தியாகி முத்துக்குமரன் வெளிப்படையாகவே அடையாளம் காட்டியிருந்தான். அவன் குறிப்பிட்டமை போல ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகம் கொந்தளிக்கும் இந்தச் சமயத்தில் மக்களின் கோபத்தை எதிர்கொள்ளப் பயந்து தமிழக முதல்வர் வைத்தியசாலையில் போய் ஒளிந்து கொண்டிருக்கின்றார் என்பது உண்மையோ எனத் தெரியவில்லை.

ஆனால், தமிழக முதல்வர் வைத்தியசாலையில் படுத்திருப்பதால், அவரது இடத்துக்கு சட்டசபையில் மூத்த தலைவராகச் செயற்படும் தமிழக நிதி அமைச்சரும், தி.மு.க.பொதுச் செயலாளருமான அன்பழகன் இவ் விடயங்களைக் கையாளும் முறைமை முத்துக்குமரன் போன்ற தியாகிகளின் உயிர் ஈகத்துக்குப் பின்னரும் கூட - அதையொட்டி தமிழகத்தில் கிளர்ந்திருக்கும் பேரெழுச்சியின் பின்னரும் கூட-இலங்கை விடயத்தில் தி.மு.க. திருந்தவேயில்லை, திருந்தவேமாட்டாது என்பதைத் திட்ட வட்டமாகத் தெளிவுபடுத்துகின்றது.

வன்னியில் சிக்கியுள்ள தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு-48 மணிநேரத்துக்குள் வெளியேறுவதற்கு-பாதுகாப்பான வசதிகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் என்று இலங்கை ஜனாதிபதி அறிவித்தும்-

அதைத் தம்பாட்டில் இரண்டு நாள் யுத்த நிறுத்தம் என்று சட்ட சபையில் அர்த்தம் பண்ணுகின்றார் அன்பழகன்.

ஆனால் இலங்கை அரசோ இது யுத்த நிறுத்த அல்லது மோதல் நிறுத்த அறிவிப்போ அல்ல என்பதைத் திட்டவட்டமாகவும் உறுதியாகவும் தெளிவுபடுத்தி விட்டது.

''யுத்த நிறுத்தம் செய்தால் புலிகள் அதைப் பயன்படுத்தி மீள ஒன்றுபட்டு விடுவார்கள். அதனால் யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. புலிகளின் பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு வருவதற்கு பாதுகாப்பான பாதை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் என்று மட்டுமே இலங்கை அரசு அறிவித்துள்ளது''-என்று இலங்கையின் மூத்த அமைச்சர் ஒருவரே நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

ஆகவே இது அமைச்சர் அன்பழகன் தமிழக சட்ட சபையில் அறிவித்தமை போன்று யுத்த நிறுத்தமே அல்ல.

எனவே அப்படி இல்லாத யுத்த நிறுத்தம் குறித்துப் புலிகள் பிரதிபலிப்புக் காட்டாதமை குறித்து வெள்ளியன்று காலை சட்டசபையில் அன்பழகன் தெரிவித்த விசனப் போக்கு அர்த்தமற்றது.

அத்தகைய யுத்தநிறுத்தமோ, அல்லது சிவிலியன்களுக்கான பாதை வசதி பற்றிய அறிவிப்போ இலங்கை ஜனாதிபதியால் வியாழன் மாலை கொழும்பில் உள்ள ஊடகங்களுக்கு வெளியிடப் பட்டதே தவிர, உரிய தரப்புகள் ஏதேனும் ஊடாக புலிகளின் பக்கத்துக்கு அறிவிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

மிகக் குறுகிய பிரதேசத்துக்குள் பொதுமக்களுடன் சேர்ந்து புலிகளும் சிக்குண்டுள்ள நிலையில்-

இலங்கை ஜனாதிபதி அறிவித்த 48 மணி நேரக் காலக்கெடு எப்போது ஆரம்பித்து, எப்போது முடிகின்றது என்பது கூடத் தெளிவில்லாத நிலையில்-

முதல் நாள் இரவு இலங்கை ஜனாதிபதி விடுத்த அறிவிப்பு வன்னிக் காட்டில் யுத்த நெருக்குதலில் சிக்குண்டுள்ள புலிகளுக்கு கிட்டியதா என்பது கூடத் தெரியாத நிலையில்-

அந்த அறிவிப்புக்குப் புலிகள் உரிய பிரதிபலிப்பைக் காட்டவில்லை என்று குறிப்பிட்டு, அடுத்த நாள் காலையில் சட்டசபையில் அமைச்சர் அன்பழகன் விழுந்தடித்து விசனம் தெரிவித்தமை அர்த்தமற்றது.

கலைஞர் கருணாநிதியும் அவரது தி.மு.க.அரசும் ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான விடயத்தில் விட்டேத்தியாகவே நடக்கும் நிலை நீடிக்கின்றது என்பது இப்படி அமைச்சர் அன்பழகன் விழுந்தடித்து விசனம் தெரிவித்ததன் மூலம் மீண்டும் ஒரு தடவை உறுதியாகியிருக்கின்றது. அவ்வளவே.

இவர்கள் திருந்த மாட்டார்கள். திருந்துவர் என்று எதிர்பார்ப்பதிலும் அர்த்தம் இல்லை.

# கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகிக்கப்பட்ட உருளைக்கிழங்கு பாவனைக்கு உதவாத நிலையில்!

## உணவுப் பயன்பாட்டுக்குத் தரமற்றதெனப் பொதுமக்கள் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.1

கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உருளைக்கிழங்கு பாவனைக்கு உதவாத அழுகிய நிலையில் கொட்டப்பட்டு வருவதாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை தமக்கு விநியோகிக்கப்பட்ட உருளைக்கிழங்கும் உணவுத் தேவைக்கு பயன்படுத்த முடியாதவாறு மோச மாக பழுதடைந்துள்ளதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

கப்பல் மூலம் யாழ். எடுத்து வரப்பட்ட உருளைக்கிழங்கில் பெரும் தொகையானவை அழுகிய நிலையிலே காணப்படுவதாகவும் - அதனையே சில சங்கங்கள் மலிவான விலையில் விற்பனை செய்வதாகவும் பொதுமக்கள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் உருளைக்கிழங்கு அழுகித் துர்நாற்றம் வீசும் நிலையில் கொட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.செயலகத்தால் கப்பலில் எடுத்துவரப்பட்ட இந்த உருளைக்கிழங்கு பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.



இவ்வாறு வழங்கப்பட்ட உருளைக்கிழங்கில் பெரும் தொகையானவை அழுகித் துர்நாற்றம் வீசிய நிலையில் கொட்டப்பட்டதாகவும், இதனால் சங்கங்களுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பழுதடைந்த இந்த உருளைக்கிழங்கு சில சங்கக் கிளைகளில் மிகவும் மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

பாவனைக்கு உதவாத - தரமற்ற நிலையில் விநியோகிக்கப்பட்ட இந்த உருளைக்கிழங்கை உண்பதால் உடல் நலத்துக்குக் கேடு ஏற்படலாம் எனசுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.(50-9)

## நகைச்சுவை நடிகர் நாகேஷ் காலமானார்



சென்னை, பெப்.ப1

பிரபல நகைச்சுவை நடிகர் நாகேஷ் நேற்றுச் சனிக்கிழமை காலமானார் நெஞ்சுவலி காரணமாக பாலாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவர் மரணமடைந்தார்.

நகைச்சுவை நடிப்பால்ரசிகர்களை தன்வசம் ஈர்த்த நாகேஷ் 1933 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 ஆம் திகதி பிறந்தார். இவரது இயற்பெயர் குண்டுராவ். பெற்றோருடன் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக இளம் வயதிலேயே பெற்றோரை விட்டுப் பிரிந்தார்.

ஆரம்பத்தில் ரயில்வேயில் வேலைக்குச் சேர்ந்தார். ஒரு முறை சக ஊழியர்களால் நடத்தப்பட்ட ''கம்பராமாயணம்'' நாடகத்தைப் பார்த்த நாகேஷ் தன்னையும் நாடகங்களில் சேர்த்துக் கொள்ளும்படி நாடகம் நடத்துபவர்களிடம் போராடி முதல் வாய்ப்பைப் பெற்றார்.

முதலில் வயிற்றுவலியால் அவதிப்படும் நோயாளியின் பாத்திரத்தில் நடித்த போது அந்த நாடகத்தைப் பார்த்த எம்.ஜி.ஆர் நாகேஷின் நடிப்பை வெகுவாகப் புகழ்ந்தார். இதனைத் தொடர்ந்து பல்வேறு மேடை நாடகங்களில் நடித்தார்.

தயாரிப்பாளர் பாலாஜி மூலமாக இவருக்கு சினிமா வாய்ப்புக் கிடைத்தது. ஏறத்தாழ ஆயிரத்திற்கும் அதிகமான படங்களில் நடித்தார். ஆரம்பத்தில் குறிப்பாக திருவிளையாடல் படத்தில் சிறப்பாக நடித்ததன் மூலம் ரசிகர்கள் மனதைக் கொள்ளை கொண்டார்.

நாகேஷின் திறமையைப் பயன்படுத்திக் கொண்ட பெருமை, இயக்குநர்கள் ஸ்ரீதர், பாலச்சந்திரன் ஆகியோரையே சாரும். நடிகர் கமலின் அதிகமான திரைப்படங்களில் இவர் நடித்துள்ளார். நகைச்சுவை நடிகராக மட்டுமின்றி கதாநாயகனாகவும் வில்லனாகவும், குணசித்திர வேடங்களிலும் நாகேஷ் நடித்துள்ளார்.

இவரது பூதவுடலுக்கு திரையுலகினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை தகனம்செய்யப்படவுள்ளது. (1-07)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பணிப்புறக்கணிப்பு நிறுத்தப்படுவதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

வன்னியில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்தக் கோரியும்-

நிரந்தரமான போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியும்-

பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த புறக்கணிப்புப் போராட்டம் இன்று முதல் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என நேற்று அறிவிக்கப்பட்டது.

'நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துங்கள்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நிரந்தரமான போர்நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நிறுத்தும்படி அனைத்துத் தரப்பிடமும் வேண்டுகின்றோம். இந்த மனித அவலத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவந்து அங்கு அமைதியை ஏற்படுத்தும்படி யாழ்.பல்கலைக்கழக சமூகம் மனிதாபிமான அடிப்படையில் வேண்டுகின்றது.

எமது மக்களின் பாதுகாப்பையும், சொந்த மண்ணிலான அமைதியான வாழ்வினையும் உறுதி செய்யக் கூடிய போர்நிறுத்தமும், சமாதானமும் தேவை என்பதையே நடைபெற்ற புறக்கணிப்பு வாயிலாக யாழ்.பல்கலைக்கழக சமூகம் வலியுறுத்துகின்றது. உலகத்தில் எங்கும் நடந்து கொண்டிராத மனிதப்பேரவலம் இங்கு நடக்கின்றது. இவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

எமது மக்களுக்கான மனித நேயத்துக்குட்பட்ட இந்த வாழ்வுரிமையை வேண்டி மனிதாபிமான நோக்கில் யாழ்.பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த புறக்கணிப்புப் போராட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதுடன் நாளை திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் வழமைபோல் நடைபெறும் எனத் தெரியப்படுத்துகின்றோம்- என்றுள்ளது.

(50)

### நாளை

| | |
|---|---|
| தை 20 | 02.02.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | பி.ப.02.16 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | பி.ப.01.45 வரை |
| சுபநேரம்: | 12.35 - 02.05 |
| ராகுகாலம்: | 08.05 - 09.35 |

## மத்திய கல்லூரியில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த ஆண்டு உயர்தரப்பரீட்சையில் சிறப்பான பெறுபேறு பெற்ற மாணவர்களையும் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்சித்தியடைந்த மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தலைமையில் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் சுவிற்ஸர்லாந்து பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் மாவட்ட நிலையில் முதலாவது இடத்தைப் பெற்ற மத்திய கல்லூரியின் கனகசபாபதி மிதுலன், கலைப் பிரிவில் மாவட்ட நிலையில் ஒன்பதாம் இடத்தைப் பெற்ற சந்திரகுமார் கோபி நாத் ஆகியோரும்-

புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் முதலாவது இடத்தைப் பெற்ற மீசாலை வீரசிங்க மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதன், தேசிய நிலையில் இரண்டாவது இடத்தைப்பெற்ற நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி மோகன் சங்கீர்த்தனா ஆகியோரும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (50-9)

## வன்னி மக்களை மீட்கும் நோக்கில் இன்று பேரணி

யாழ்ப்பாணம், பெப்.1

வன்னிவாழ் உறவுகளை மீட்கும் நோக்கில் குடாநாட்டில் இன்று மக்கள் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தேச மக்கள் எழுச்சிப் பேரவை என்ற அமைப்பு இந்தப் பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அமைப்பு அறிக்கை ஒன்றின் மூலம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

வன்னிமக்கள் அங்கிருந்து வெளியேறுவது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள 48 மணி நேரகால அவகாசம் குறித்து பிரஸ்தாபித்துள்ள அந்த அறிக்கை, வன்னிமக்கள் வெளியேற புலிகள் அனுமதிக்க வில்லை என்றும்-

புலிகளின் இருப்புக்காக வன்னி வாழ் அப்பாவி உறவுகள் பலியாவதை நாம் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை.

இதனால் அழிவுகள் மட்டும்தான் எஞ்சப்போகின்றன- என்றும்-

மேற்படி அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கி மூன் நேரடி யாக போராட்டம் நடத்தும் தம்மைச் சந்திக்க வேண்டும் என்றும் கோரி உண்ணாவிரதம் நடத்தப்பட்டது.

ஆயிரத்துக்கும் அதிகமான சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் ஐ.நா. முன்பு அணிதிரண்டு உண்ணாவிரதப் போராட்டத்தில் மிகவும் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை தங்கள் கோரிக்கை அடங்கிய மனுவினை ஐ.நா. மன்றத்திடம் கையளித்த இளைஞர் ஐ.நா. சபை முடிவுக்காக ஆயிரக்கணக்கான மக்களுடன் நேற்று மாலை காத்திருந்தனர்.

இளைஞர்களின் வேண்டுகோளுக்கான சாதகமான பதிலை எதிர்வரும் வியாழக் கிழமை தாம் அளிப்பதாகவும், அதன் அடிப் படையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்துமாறும் இரவு 7.30 மணியளவில் ஐ.நா. அலுவலர்கள் கேட் டுக்கொண்டனர்.

இரவு 8 மணியளவில் உண்ணா விரதப் போராட்டத்தை இடைநிறுத்திய இளைஞர்கள் வியாழக்கிழமை தமக்குச் சாதகமான பதில் வராத பட்சத்தில் நீராகாரம் இன்றித் தாம் போராட்டத்தை மேற்கொள்ள இருப் பதாக கூடி நின்ற மக்களுக்குத் தெரிவித் துள்ளனர்.

கடும் குளிரையும் பொருட்படுத்தாது உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளும் இளைஞர்களுக்கு ஆதரவு அளிக்க ஐ.நா. சபையை நோக்கி அணிதிரண்ட சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் துண்டுப்பிரசுரங்களை சுவிஸ் மக்களுக்கு விநியோகித்தனர்.

(அ-சி)

## மக்கள் வெளியேற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் மட்டுமே பாதுகாப்பான பகுதிகளுக்கு வந்து சேர்ந்ததாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

16 சிறுவர்கள் உட்பட 63 பேர் விசுவ மடுவில் படையினரிடம் வந்து சேர்ந்தனர் என்றும்-

மேலும் 43 பேர் படகுகள் மூலம் புல் மோட்டைக்கு வந்து படையினரிடம் சேர்ந் தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை-

விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் 250,000 பேர் சிக்கியுள்ளனர் என செஞ் சிலுவைச் சர்வதேச குழு தெரிவித்துள் ளது. ஆனால் 120,000 பேரே சிக்கியுள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது என்று ஏ.பி. செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டுள்ளது.

(அ-1)

## உடையார் கட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 15), பு.பரமேஸ்வரி (வயது 32).

இத்தாக்குதலில் 3 சிறுவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்தனர். அவர்களின் பெயர் விவ:ரம் வருமாறு:-

கி.துளசிகா (வயது 03), கலைஞன் (வயது 07), குகவதனி (வயது 12), து.தயாபரன் (வயது 23), கி.கரன் (வயது 22), க.மகேந்திரன் (வயது 53), பே.சண்முகராஜா (வயது 28), வள்ளியம்மை (வயது 55), சாரதாதேவி (வயது 37), செல்வராஜா (வயது 58), சின்னப் பிள்ளை (வயது 73), கு.நாதன் (வயது 34), சசி சந்திரன் (வயது 24), சிவபாதம் (வயது 72), பு.துஸ்யந்தன் (வயது 21), கோ.கிருபாதேவி (வயது 50), ஆ.மங்களேஸ்வரன் (வயது 37), கு.யூட் அன்ரனி (வயது 31), ம.சரிய மலர் (வயது 45).

மேலும், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பகல் 1:00 மணியளவில் தேராவில் பகுதி யில் சிறிலங்கா படையினர் நடத்திய ஷெல் தாக் குதலில் இராமு சிவதயாளினி (வயது 15) என்ற சிறுமி கொல்லப்பட்டார்- என்றுள்ளது.

## தஞ்சை விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடந்தை தமிழ்க்கழகம் உள்ளிட்ட அமைப் புக்களைச் சேர்ந்தவர்கள் மேலவஸ்தாச் சாவடியில் கூடினர்.

அங்கிருந்து தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சியின் பொதுச் செயலாளர் மணியரசன், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கௌத்தூர் மணி ஆகியோர் தலைமையில் ஊர் வலமாகப் புறப்பட்டனர். பொலிசார் அவர் களைத் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். மொத்தம் 250 பேர் கைது செய்யப்பட்டனர்.

(அ-1)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., கம்யூனிஸ்கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், பாரதீய ஜனதாக் கட்சி, தேசிய காங்கிரஸ்கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் நேற்றுக் கூடி இந்தப் பொது வேலை நிறுத்தம் குறித்து முடிவு செய்தனர்.

## போரை உடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப் படுகொலைகளைக் கண்டிக்கும் வகை யில் பதாகைகளைத் தாங்கியும் கோஷங் களை எழுப்பியும் அவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

(அ-1)

## ஈழத்தமிழருக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில்அவர் இருப்பதாக கூறப்படுகிறது. அவர் தீக்குளிக் கவில்லை; ஸ்ரோவ் அடுப்பு வெடித்தே தீக் காயமுற்றார்என்று பொலிஸார் தெரிவித் தனர்.

அதனை ஆட்சேபித்துநேற்றுக்காலை ரவியின் மகன் பிரபாகரனுடன் வக்கீல்கள் உள்ளிட்டோர் அரசு மருத்துவமனை முன்பு போராட்டத்தில் குதித்தனர்.

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித் துத்தான் ரவி தீக்குளித்தார். ஆனால் இதை பொலிஸார் மறைக்க முயல்கிறார்கள்என்று கூறி போராட்டம் நடத்தினர்.

பிரபாகரனும் தனது தந்தை ரவி ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்தே தீக் குளித்தார் என்று தெரிவித்தார்.

(அ-1)

## புதுக்குடியிருப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் சிறிலங்கா படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தினர்.

இதில் 7 பொதுமக்கள் படுகொலை செய் யப்பட்டுள்ளதுடன் 22 பேர் படுகாய மடைந் துள் ளனர்.

இதே பகுதி மீது, மீண்டும் பிற்பகல் 12.30 மணியளவிலும், மீண்டும் பின்னர் பிற்பகல் 2 மணியளவிலும் சிறிலங்கா வான்படை குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இதில் 12 சிறுவர்கள் உட்பட 22 மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 78 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில், அப்பகுதி மக்களின் குடியிருப்புக்கள் பெருமளவு அழிந்துள்ள துடன் உடைமைகள் மற்றும் ஊர்திகளும் நாசமாக் கப்பட்டுள்ளன.

உடையார்கட்டுப் பகுதி நோக்கி நேற்றை யதினம் காலை 5.30 மணியளவில் இருந்து தொடர்ச்சியாக பீரங்கித் தாக்கு தல்கள் நடத் தப்பட்டன.

இதில் 6 தமிழர்கள் படுகொலை செய் யப் பட்டுள்ளதுடன், 17 பேர் படு காய மடைந் துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த பொதுமக்கள் குடியிருப்பு பகுதி நோக்கியும் நேற்றுக் காலை தொடக்கம் படையினர் அகோர பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இதில் இதுவரை 3 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 12 பேர் படுகாய மடைந் துள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் பொதுமக்கள் குடியிருப்பு பகுதி நோக்கி நேற்றுக் காலை தொடக் கம் சிறிலங்கா படையினர் அகோர பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இதில் இதுவரை ஒருவர் கொல்லப்பட்டுள் ளதுடன் 12 பேர் காயம் அடைந்துள்ளனர்.

தேராவில் பகுதியில் இடம்பெயர்ந்த பொது மக்கள் குடியிருப்பு பகுதி நோக்கி நேற்று படையினர் நடத்திய அகோர பீரங் கித் தாக்குதலில் 4 பேர் கொல்லப் பட்டுள்ளதுடன், 12 பேர் காயமடைந்துள்ளனர்.

மூங்கிலாறு பகுதியில் பொதுமக்கள் குடியிருப்பு பகுதி நோக்கி படையினர் பீரங்கித் தாக் குதல் நடத்தினர்.இதில் 3 பேர் கொல்லப்பட் டுள்ளதுடன், 8 பேர் காய மடைந்துள்ளனர்.

வலைஞர்மடம் பகுதியில் பொதுமக்கள் குடியிருப்பு பகுதி நோக்கி படையினர் பீரங்கி தாக் குதல் நடத்தினர்.

இதில் 4 பொது மக்கள் கொல்லப் பட்டுள்ளதுடன் 8 பேர் காயமடைந் துள்ளனர்.

கடுமையான பீரங்கித் தாக்குதல் எல்லா இடங்களி லும் தொடர்வதா லும், மக்கள் நாலா பக்கமும் உயிரைப் பாதுகாக்க சிதறி ஓடி யதாகவும் இணை யத்தளச் செய்தியில் விவரிக்கப்பட் டுள்ளது.

(அ-1)


மலிவு விலையில்:......

திருமண அழைப்பிதழ்கள்

ADORNA CARDS

www.andradesigns.com

விசேட விலைக்கழிவு 10%



புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய

திருமண அழைப்பிதழ்களை

எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்

நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

ANDRA DIGITAL IMAGE

# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)

# 68, உப்புமடம் சந்தி.கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

இணையத்தள முகவரி : www.andradesigns.com


## மரண அறிவித்தல்

### மாணிக்கவாசகர் நித்தியானந்தன்

ஏழாலை தெற்கு, களவாவோடை வசந்தநாகபூஷணி அம்மன் தேவஸ்தானம் வசந்தகுமாரியின் கணவர் மாணிக்கவாசகர் நித்தியானந்தன் நேற்று (31.01.2009) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஏழாலை தெற்கு, வசந்தநாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.


SHAMROCK

ஈச்சமோட்டை, யாழ்.

* Eng. Medium Gr. 7 to 11

History

J.Walwin, B.F.A

* புலமைப்பரிசில் (5)

J.Ganesh

Eng. Med 6 to 11

Eng. Lit 10 & 11

விற்பனையாகிறது!

G.E.C. (O/L) 2008 Dec.

பொதுப்பரீட்சையினது

புள்ளி வழங்கும் திட்டம்

வரலாறு

பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா புத்தகசாலைகள்.

THE SCIENCE CORNER

Clock Tower Lane, Jaffna

Chemistry (Day Batch)

★அலகு ரீதியான மீட்டல் (தாக்க இயக்கவியல்)

★Mon., Tue., Thu.:- 2.30 - 4.00

★ முழு அலகு உள்ளடங்கலான (Model Papers)

★Sat., Sun.,:- 8.00- 9.30

By- DIAS B.Sc. (Hons)

A/L Day Class

Physics

Bat:I Fri, Sat, Sun- 6.30-8.00am

Bat:II Mon, Tue, Thu - 12.00 - 1.30 p.m.

NEC Clock Tower Road, Jaffna

பெருமாள் கோயிலுக்கு அருகில்

இரசாயனவியல்

Day Class

பிரிவு- III N.KALA

ஆரம்பம்:- 03.02.2009 (Tue) 3.30pm

83/19, Arasady Road, Jaffna.

A/L Day Class

Physical Chemistry (Wed, Thur - 4.30 5.30 pm)

Organic Chemistry (Sat, Sun - 8.00- 9.00 am)

S.Vasu

NEC Clock Tower Road, Jaffna

ENGLISH MEDIUM

CHEMISTRY

A/L 2011 Chemistry English Medium individual and small group class.

0773405951

CHEMISTRY

நிலா வெளியீடு

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை- 2009

பரீட்சை ஆரம்பம்: 08.02.2009 ஞாயிறு 9மணி

★பிரதி ஞாயிறு தோறும் இவ் வினாத்தாள் வெளிவரும்.

★பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களுக்கு கழிவு வழங்கப்படும்.

★வினாத்தாள்கள் தேவைப் படுவோர் தொடர்பு கொள்ளவும்.

N.C.A கல்வி நிலையம் கே.கே.எஸ். றோட், இணுவில்.

T.P. 077 6241573

CHEMISTRY => S.Vasu

A/L 2011

Chemical Calculation

Bat. - I Sat, Sun - 10 - 11 a.m.

Bat. - II Sat, Sun - 3 - 4 p.m.

ஆரம்பம்:- 01.02.2009 (இன்று)

General Chemistry

Mon,Fri. 4.30 - 5.30 p.m.

ஆரம்பம்: 02.02.2009 (நாளை)

பெருமாள் கோயிலுக்கு அருகில் NEC Clock Tower Road, Jaffna

இந்து நாகரிகம்

2009 A/L DAY CLASS

★ திங்கள் முதல் வெள்ளி வரை

★ வினாவிடை வகுப்புக்கள்

★ பயிற்சிப் பரீட்சை நடைபெறும்

★ அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்

★ உங்கள் நேரத்தெரிவுக்குரிய இடம்

=> விக்னா கல்வி நிறுவனம்-யாழ். 8.00 a.m.

=> பொருளியற் கல்லூரி யாழ். - 9.00 a.m

=> யாழ். கல்லூரி, ஆனைக்கோட்டை - 2.00 p.m.

=> ஐடியல் அக்கடமி, மானிப்பாய் - 7.00 a.m.

By: N.குகதாஸ்

CHEMISTRY

A/L 2010 அசேதன இரசாயனம்

பிரிவு I சனி, ஞாயிறு 2.15 - 3.15 p.m.

பிரிவு II திங்கள், புதன், வெள்ளி 4.30-5.30 p.m.

A/L 2011 வகுப்புகள்

செவ்வாய், வியாழன் 6.15 - 7.15 a.m.

A/L 2009 paper class

திங்கள் , புதன் 6.15 - 7.45 a.m.

By:THABESAN (B.Sc.)

ஐடியல் அக்கடமி, நீராவியடி.

A/L DAY CLASS

வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| கணக்கீடு | பொருளியல் |
| P.பகீரதன் | N.B.கஜீதரன் |
| வணிகக்கல்வி | S.யசோ |

கலைப் பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | அளவையியல் |
| A.K கீர்த்திராஜன் | P.குமல். |
| இந்துநாகரிகம் | புவியியல் |
| S.ஜெயக்குமார் | S.R.பாலா |
| பொருளியல் | அரசியல் |
| N.B.கஜீதரன் | A.K.றொபின்சன் |
| நாடகமும் அரங்கியலும் | கிறிஸ்தவம் |
| S.பிரபாகரன் | S.K.யூட் |
| வரலாறு | புள்ளி விபரவியல் |
| S.அருள் | T.தவசேகர் |

ஆரம்பம்:- 02.02.2009 திங்கள் காலை 7am

NEC பெருமாள் கோயிலுக்கு அருகாமை.




தேவை

தையல் தெரிந்த பெண்பிள்ளைகளும் மற்றும் கொம்பியூட்டர் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகளும் தேவை

தொடர்பு:

றொசானி காமன்ஸ்,

263/1, இராஜகாரியர் லேன்,

மானிப்பாய் வடக்கு,

மானிப்பாய்.

கிளை:

கனகசபை

சபாபதிப்பிள்ளை வீதி,

உடுவில் கிழக்கு,

சுன்னாகம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org